
கல்கி
ரமணி
KALKI
8·10·1961
30
காசு




நாளொரு மேனியாய்
சரும எழில் மேம்பாடு
புதிய ரெக்ஸோனு துணையோடு
ரெக்ஸோனு சோப்பின் மிருது வான நுரையில் அடங்கியுள்ளது கேடில்-எழிலூட்டும் பற்பல எண்ணெய்கள் இணைந்த விசேஷத் தைலமான கேடில் சருமத்தினூடே சென்று, அதை மென்மையுடனும், மழமழப்பாகவும் மிளிரச் செய்து.....உங்கள் மேனி வனப்பை ஓங்கச் செய்கிறது. எடுப்பான நறுமணத்தினால் உங்களை மணிக்கணக்கில் புது மலர்ச்சியுடனிருக்கச் செய்கிறது. உங்கள் அன்றாட அழகுசாதனத்துக்குகந்தது ரெக்ஸோனு.
Rexona
GOOD FOR YOUR SKIN
புதிய மேலுறை, புதிய வடிவழகு, புதிய பச்சை வர்ணம் ஆகியவற்றோடு கூடிய புதிய ரெக்ஸோனுவை நீங்கள் விரும்புவீர்!
புதிய ரெக்ஸோனு—
உங்கள் சருமத்திற்கு அனுகுணமானது
RP.170-X52 TM

பாரதநாட்டுப் பருத்திக்கே, ஏலேலோ...பேரமாம் கத்திமுனையில், ஐலசா...

18—ம் நூற்றாண்டின் பாலகாண்டம்...சந்தடிமயமான கல்கத்தாவின் வண்ணத்துறைமுகம்... பொங்கு கடலோடப் புறப்பட்டுவிட்டது கிழக்கிந்தியக் 'கும்பினிக்' கப்பலொன்று...ஏற்றியிருந்த சுமையோ விலைமதிப்பற்ற சரக்குகள்; மகத்தான வேலைப்பாடிழைந்த துகில்கள், ஏலம், மிளகு வகையரு, நுண்ணிய நெசவும், கோல வனப்பும் அமைந்த பருத்தித் துணிகள்.

பாரதநாட்டு வாணிப வரலாற்றிலேயே பரபரப்பு மிகுந்த பருவம்...பேர வணிகப் பேரேடும், போர் வாளும் நாட்டாண்மை செலுத்திய காலம். கடல்நெடுக, 'கும்பினிக்' கப்பல்களின் ஆனந்த நடனம்; புயல், கண்ணற்ற கடற்பாதை, வழிப்பறி, கொள்ளை, போட்டி வாணிபப் போர்ப் படையின் இடையீடு... எல்லாவற்றையும் ஏற்றவண்ணம் நீரமுடன் அக்கப்பல்கள் இந்தியப் பருத்தித் துணிகளைச் சுமந்து சென்றன, அத்துணிகளை மெச்சிப் போற்றிய மேனாட்டு விற்பனைத் தலங்களுக்கு.

இன்றும் சரி, இந்தியப் பருத்தித் துணிகள் வையகமெங்கும் செல்லாத இடம் இல்லை. அக்காலக் 'கும்பினிக்' கப்பல்கள் இன்று வெறும் நினைவுச் சின்னங்களாகவும், பண்டையக்கால நெசவு முறைகள் விசைத் தறிகளாகவும் மாறிவிட்டபோதிலும், பரம்பரை பரம்பரையாக வந்த பற்றும், ஒப்பற்ற கலைத் திறனும் அசையாது நிலைபெற்றுள்ளன. எம்முடைய ஆலைகளில் நாள் தோறும் நெசவிடப்படும் 80,000 கஜத் துணிகளில் ஒவ்வொரு சாணும் இதற்குச் சான்று கூறும்.



சாயாஜீ மில்ஸ் நம்பர் 2

பெர்குஸன் ரோடு, பம்பாய்–13

இது ஒரு ரோஹித் க்ரூப் ஸ்தாபனம்.

கல்கி

பிலவ, புரட்டாசி 22

அக்டோபர் 8, 1961

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

வர்ஜீனியா புகையிலை இறக்குமதியாகும் விதேசிப் பண்டமென்றே கருதப்படுகிறது. உண்மையில், நிலமும் சீதோஷ்ண நிலையும் ஒத்துக்கொள்ளுமேயானால், உலகின் எப்பகுதியிலும் உற்பத்தி செய்து கொள்ளக்கூடிய ஒருவகைப் புகையிலையே வர்ஜீனியா. இன்று சிகரெட் உற்பத்தியில் முதன்மையான நாடுகள் இந்தியப் புகையிலையைப் பெருமளவில் வாங்கிச் செல்வதைப் பார்க்கையில், இந்தியாவின் வர்ஜீனியா புகையிலை அதி உன்னதமானது என்பது நிரூபணமாகிறது.



புகையிலையின் வரலாறு...6



GTC
GOLDEN TOBACCO COMPANY PRIVATE LTD.

பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

பனாமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

GT.706 TM

Greens' Advtg



மலர் 21

இதழ் 10

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

நன்கொடை நாடகம்

பணம் நிறைந்த கம்பெனிகள் காங்கிரஸுக்கு நிதி கொடுப்பதைப் பரிகசித்து நேருஜி கான்பூரில் தீவிர வைராக்கியத்தோடு பேசியிருக்கிறார். அதுவும் கூட்டத்தில் காங்கிரஸ் தேர்தல் நிதிக்குப் பல வியாபாரிகள் கொடுத்த நிதிகளை ஆட்சேபணையின்றிப் பெற்றுக் கொண்ட பிறகு தான் பேசியிருக்கிறார். கான்பூருக்குப் பிரதமர் போனதும் கூட வியாபார சமூகத்தினிடமிருந்து பணமுடிப்புக்கள் பெற்றுக் கொள்ளவே.

சுதந்திரக் கட்சிக்கு ஏதோ ஒரு சிலர் செய்யும் சிறிய உதவியைக் கண்டு அவர் கலக்கமடைந்திருக்கிறார் என்று இப்போது கண்கூடாகத் தெரிகிறது. தமது கட்சிக்கு நிச்சயமாகப் பெருந்தொகைகள் கிடைக்கும் என்று உறுதிப்படுத்திக் கொண்டபின் தேர்தல் நிதிபற்றி அர்த்தமற்ற சொற்றொடர்களால் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார் அவர். இந்த ஆட்சேபம் உண்மையானால், 'பங்குதாரர்களின் முதலீட்டுப் பணத்தை அரசியல் காரணங்களுக்காகக் கம்பெனிகள் செலவிடுவதைத் தடுக்க வேண்டும்' என்று சுதந்திரக் கட்சியினரும் மற்ற எதிர்க் கட்சிகளும் சேர்ந்து பார்லிமெண்டில் வற்புறுத்தியபோது நேருஜியின் கட்சி மட்டும் ஏன் அந்த யோசனையை எதிர்த்தது? பிர்லா கம்பெனிகளில் ஒன்று மட்டுமே இருபது லட்சம் ரூபாய் மொத்தமாகக் காங்கிரசுக்கு வழங்கியபோது நேருஜி ஏன் அதை நிராகரிக்கவில்லை? அதுதான் போகட்டும்; கான்பூரில் நேருஜி ஆட்சேபணை தெரிவிக்கும் அதே சமயத்தில் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் நாடெங்கிலும் நிர்ப்பந்தத்தின் பேரில் நிதி திரட்டுவது ஏன்? தார்மிகப் பண்புகளைப் பற்றி வாய் நிறைய எவ்வளவுதான் ஆஷாடபூதிப் பேச்சுக்கள் பேசினாலும், ஒருவர் செய்யும் செயல்கள்தாம் அந்தச் சொல்லுக்கும் மேலாக ஓங்கி நிற்கும்.

நமது பிரதமர் மனமொப்பித்தான் பண பலத்தை வெறுத்துப் பேசுகிறார் என்பதில் சந்தேகமில்லையென்றாலும் அவருடைய உள்ளம் இருகூறாகப் பிரிந்திருப்பதால்தான் இந்தக் குழப்பம். உயர்ந்த எண்ணங்களை எண்ணவும், சொல்லவும், உணரவும் அவரது மனத்தின் ஒரு பகுதி தயாராக இருக்கும்போதே அவற்றைச் செயலுக்குக் கொண்டுவர இன்னொரு பகுதி மறுக்கிறது. கட்சித் தலைவர் என்ற முறையில் அவர் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுத்து நிறுத்த அவருடைய நல்ல மனத்துக்குச் சக்தி இல்லை. நேருஜி உள்ளமறியப் பேசுவதை நடைமுறைக்குக் கொண்டுவர இப்போதுகூடத் தடை இல்லை. இதுவரை சேகரித்த பணத்தையெல்லாம் வழங்கியவர்களுக்கே அவர் திருப்பி அளிக்கட்டும்; அல்லது தேசிய கஜானாவிலோ, கஷ்ட நிவாரண நிதியிலோ சேர்த்து விடட்டும். இனிமேல் நிதி வசூலிக்கக் கூடாது என்று காங்கிரஸுக்குத் தடை விதிக்கட்டும். பஸ் சொந்தக்காரர்கள், பர்மிட் பெற்றவர்கள், பணக்காரர்கள் முதலிய 'காங்கிரஸ் சாதி'யினரிடமிருந்து பகிரங்கமாகவும் மர்மமாகவும் நிதி திரட்டுவதை நிறுத்தட்டும். அவ்வாறு செய்தால் அதைத் தைரியமாகச் சுதந்திரக் கட்சி வரவேற்கும்; அதை ஒரு சவாலாகவும் ஏற்று அதற்குத் தக்கபடி நடக்கும். இதனால் லஞ்ச ஊழலும், திருட்டுப் பணமும் ஜனநாயகத்தைக் கொலை செய்யாமல் காப்பாற்றியதாகவும் ஆகும். செயல்படுத்த வேண்டும் என்ற சிந்தனையேயில்லாமல் வீர தீர முழக்கங்களை அடுக்கிக் கொண்டு போவதில் சாரமில்லை: கேட்பவர்களுக்கு அலுப்புத் தட்டிப் போயிற்று. இந்த வெற்றுப் பேச்சு கேலிக்குத்தான் இடமளிக்கும்.

வியாபார சமூகத்தின் கழுத்தில் பர்மிட் லைசென்ஸ் சுருக்குகளை இறுக்கி, கையில் பிடித்துக் கொண்டுள்ள காங்கிரஸ் கட்சியின் தலைவர், கோடி கோடியாகத் தேர்தல் நிதி

திரட்டியான பிறகு, காங்கிரஸ் கொள் கையை ஏற்காத கம்பெனிக்காரர்கள் அதற்குப் பொருள் உதவ வேண்டிய தில்லை என்று கூறியிருக்கிறார். அதோடு தேர்தல் நிதி வசூலிப்பதற்குத் தாம் வெட்கப்படுவதாகவும் சொல்கிறார். எதிர்க் கட்சிகள் தேர்தல் நிதி சேகரிக்கத் தொடங்கியபின்தான் பிரதமருக்கு இந்த அவமான உணர்ச்சி உண்டாகி ஞானோப தேசம் செய்யத் தோன்றியிருக்கிறது. குறைந்த பட்சம் பிரதமரும் மந்திரிகளு மாவது இம்மாதிரியான பண வசூலில் இறங்காமல் மற்ற காங்கிரஸ் தலைவர் களுக்கு இந்த வேலையை விட்டால் கண் ணியமாக இருக்கும். இந்தியப் பிரதமர் உத்தியோகத்தை வகித்துக் கொண்டே நேரில் கட்சிக்கு வசூலிப்பது கொஞ்ச மும் அழகில்லை. ஒரு போலீஸ் உத்தி யோகஸ்தர் இத்தகைய வசூல் செய்தால் அது அக்கிரமமாகும். அப்படியிருக்க இந்தியப் பிரதம மந்திரியே அதிகார பூஷணங்களுடன் சென்று பணம் சேக ரிப்பதைப் பற்றிச் சொல்லவும் வேண் டுமா? நேரு அவர்களின் இந்தத் 'துறவற உபதேசத்தை' ஓர் சிறு உவமை காட்டி விளக்குகிறார் ராஜாஜி. 'வயது முதிர்ந்த ஒரு கிராமவாசி இரண்டு மனைவிகள் உயிருடன் இருக்கும் போதே ஊராரெல் லாம் எடுத்துச் சொல்லியும் கேட்காமல் மூன்றாவது முறை மணம் செய்து கொண் டான். புது மனைவி வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். அதன் பின் சில இளை ஞர்கள் அவன் வீட்டுக்கு வரத் தொடங் கினார்கள். முதலில் அவன் இருக்கும் போது வந்து கொண்டிருந்தவர்கள், பின்பு அவன் இல்லாத போதும் வந்து போவதாக அவன் கேள்விப்பட்டான். அவ்வளவுதான், பிரம்மசரியத்தின் பெருமை பற்றி ஊருக்கு உபதேசிக்கத் தொடங்கினான் அந்தக் கிழவன். கிராம வாசிகள் சிரிக்கத்தான் செய்தார்கள்.'

பணத்தின் தோஷத்தைப்பற்றி நேருஜி செய்த பிரசங்கத்தின் அழகைப் பார்த் தால் இந்த உவமை கிராமியமாகாது.


பேசிப் பயனில்லை

மகாநாடுகள் கூட்டித் தேசிய ஐக் கியத்தை நிலைநாட்டுவது என்பது நடக் கிற காரியமில்லை. தற்போது தில்லியில் நடைபெறும் சர்வ கட்சி மகாநாடு பல தீர்மானங்களை நிறைவேற்றக் கூடும். ஆனால் ஆளும் கட்சி ஆத்ம பரிசோதனை செய்து கொண்டு, தான் முன்பு எடுத் துக் கொண்ட நடவடிக்கைகளை மாற்றி யமைத்தாலொழிய நாட்டில் ஒருமைப் பாடு ஏற்படுவது சாத்தியமில்லை.

வோட்டு வேட்டையை முன்னிட்டுக் காங்கிரஸ் கட்சிதான் எல்லாத் துறை களிலும் பெரும்பான்மையினரைத் தூண்டிவிட்டு, அதனால் அவர்களுக் கும் சிறுபான்மையினருக்கும் மனப் பிளவை உண்டாக்கியிருக்கிறது. விவ சாயத் துறையில் உழவர்களின் ஆதர வைப் பெறுவதற்காக உடைமைக்காரர் களை இன்னலுக்கு ஆளாக்கியிருக்கிறது. தொழில் துறையில் பெர்மிட்-லைசென்சு பெறும் புது வகுப்பை உண்டாக்கி அவர் களோடு மற்றவர்கள் பகை கொள்ளச் செய்திருக்கிறது. மொழிவாரி ராஜ் யங்கள் வழங்கியதால், நதி நீர்ப் பங் கீடு, ஆலை நிறுவனம், மத்திய சர்க்கா ரின் மானியம் இவை குறித்து ராஜ்யத்துக்கு ராஜ்யம் விரோதம் வளர வழி செய்திருக்கிறது. அதோடு ஒவ் வொரு ராஜ்யத்திலுமுள்ள பெரும் பான்மை மொழியினர் ஏனைய சிறுபான் மையினரை அந்நியர்களாகப் பாவிக்க வும் இடம் அளித்திருக்கிறது. எல்லா வற்றுக்கும் மேலாக மக்கள் யாவரை யும் ஒன்றாக இணைத்த ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தியைப் புகுத்திப் பிரிவினை சக்தியைத் தூண்டி விட்டிருக்கிறது. இக் கொள்கைகளைக் காங்கிரஸ் கட்சி மாற்றி அமைக்க முன்வராத வரையில் தேசிய ஐக்கியம் என்பது எட்டுச் சுரைக் காயாகவே இருக்கும்.

மக்களின் வாழ்க்கையினின்று தாமா கத் தோன்றிய நாட்டுப் பண்பாடுகள் உண்டு. ஒரு சாதியிலுள்ள பணக்காரர் களும் ஏழைகளும் எல்லாரும் ஓரளவு சம பாவனையுடனும் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டும் ஒப்புரவு வாழ்க்கை நடத்திவருவதை ஒரு தீமை யாகக் கருதுவதே மடமை. ஒரு நாட் டில் பல பண்பாடுகள் தோன்றுகின்றன. அவற்றை வைத்துக்கொண்டு அவற்றை பயன்படுத்திக் கொள்வது அரசியல் முறை. அனைத்தையும் அழித்து விட்டு 'புதிய ஒற்றுமை நான் உண்டாக்கு வேன்' என்பது வீண் பிரமையாகும்.

அவிபக்த குடும்பங்களை நாசமாக்கி, குறள் கூறும் சுற்றந்தழாஅலை முற்றி லும் பாழ்படுத்தி, சம்பந்தப்படாதவர் களை ஒரு குடும்பமாக்கலாம் என்ற ஆகாயக் கோட்டைத் திட்டங்களைக் கழுத்தில் கட்டிக் கொண்டு அலைபவர் களைக் கண்டு வருந்தத்தான் வேண்டும்.



— நன்றி: 'மெயில்' பத்திரிகை, சென்னை

வேஷம் கலைகிறது!

ஆரம்ப முதலே சுதந்திரக் கட்சியினர் கூட்டுறவுப் பண்ணையைப் பற்றி எச்சரிக்கை செய்து வந்தார்கள்.

காங்கிரஸ்காரர்கள் "ஒரு பயமுமில்லை; கூட்டுறவுப் பண்ணை ஒரு பசு, சாதுவான பசு" என்றார்கள்.

"பசுவல்ல. பசுத் தோல் போர்த்த புலி!" என்றார்கள் சுதந்திரக் கட்சியினர். "கூட்டுறவுப் பண்ணை என்பது உண்மையில் கம்யூனிஸ்ட் நாடுகளில் இருப்பது போல் விவசாயிகளை வெறுங் கூலிகளாக்கும் பண்ணையாகத்தான் முடியும். அதில் ஒரு முறை சேர்ந்து விட்டால் விலகுவது என்பது முடியாத காரியம்" என்று கூறினார்கள். இதுவே இப்போது உண்மையாகி விட்டதைக் காண்கிறோம்.

அப்போதெல்லாம் பிரதமர் உள்பட ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் கூட்டுறவுப் பண்ணையில் சேரும் ஒவ்வொரு விவசாயிக்கும் பூரண நிலஉரிமை இருக்கும், இஷ்டப்பட்ட போது சங்கத்திலிருந்து விலகிக் கொள்ளலாம் என்று இனிக்க இனிக்கப் பேசி வந்தார்கள்.

கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்களின் கொள்கைகள், விதி முறைகள் சம்பந்தமாக இப்போது, மத்திய கூட்டுறவு சமுதாய அபிவிருத்தி இலாக்கா தயாரித்துள்ள அறிக்கையில் 'கூட்டுறவுப் பண்ணையில் சேரும் விவசாயி ஐந்தாண்டுகளுக்கு விலக முடியாது' என்று கண்டிருக்கிறதாம்.

ஒரு விவசாயியை ஐந்தாண்டுகள் கூலிக்காரனாகச் செய்து விட்டால், பிறகு அவன் மீள்வது ஏது? ஆயுள் முழுதும் அடிமையானாற் போலத்தான்.

கூட்டுறவுப் பண்ணைகள் அமைத்து, விவசாயிகளின் வாழ்வை வளம் கொழிக்கச் செய்யப் போகிறோம் என்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள். இந்தப் பசப்பு வார்த்தைகளில் மயங்கும் விவசாயிகளுக்கு நிரந்தரமான அடிமை வாழ்வு தான் கிட்டும்.

என்ன சேதி?

சோஷலிஸப் பிரசாரம்

பிரதமர் நேரு, கான்பூரில் பேசிய போது, சுதந்திரக் கட்சி காலத்தோடு ஒட்டாத கட்சி யென்றும் காட்சிப் பொருளாக வைக்கத் 'தகுதி'யுள்ள கட்சி யென்றும் குறிப்பிட்டார்.

சோஷலிஸம் பிறந்த ஜெர்மனியில் சோஷலிஸக் கட்சியே தனது பழைய சோஷலிஸக் கொள்கைகளை மியூஸியத்திலே வைத்து விட்டு, சுதந்திரக் கட்சியின் அடிப்படைக் கொள்கையை மேற்கொண்டு விட்டது.

பிரிட்டனில் சோஷலிஸக் கட்சியான தொழிற் கட்சியை நான்கு ஆண்டுகள் பதவியில் ஏற்றிப் பார்த்த மக்கள், அடுத்த தேர்தலில் சுதந்திரக் கட்சியின் கொள்கைகளைக் கொண்ட கன்ஸர் வேடிவ் கட்சியையே பதவியில் ஏற்றியிருக்கிறார்கள்.

இன்னும் ஐரோப்பாவில் சோஷலிஸச் சார்புள்ள நாடுகளெல்லாம் தனி நபர் சுதந்திரத்தை ஆதரிக்க ஆரம்பித்திருக்கின்றன.

பிரத்தியட்ச நிலை இப்படி இருக்க, சுதந்திரக் கட்சி காலத்தோடு ஒட்டாத கட்சி என்று பிரதமர் கூறுவது உண்மைக்குப் புறம்பானதாகும். கம்யூனிஸ்ட் மோகத்தில் சிக்குண்டு அவர் இந்தச் சோஷலிஸத் திட்டத்தைப் பிரசாரம் செய்கிறார்.

ஈழத்து எழுத்தாளர்களுக்குப் பரிசு

நமது பாரத நாட்டில் சாகித்திய அகாடமியைப் போல் இலங்கையில் சாகித்திய மண்டலம் என்ற அமைப்பின் கீழ் இலங்கை அரசினர் தமிழ், சிங்கள மொழிகளின் இலக்கிய ஆசிரியர்களைக் கௌரவித்து வருகிறார்கள். தமிழைப் பொறுத்த வரை நீண்ட காலம் ஆர்வமாக மட்டும் தேங்கி, விளைவாகப் பயன் தராமல் இருந்த இலங்கை சாகித்திய மண்டலம் இப்போது நான்கு ஈழத் தமிழ் இலக்கிய ஆசிரியர்களைக் கௌரவித்திருக்கிறது. இச்செய்தி அறிந்து மட்டிலா மகிழ்ச்சி கொள்கிறோம்.

ஆறுமுக நாவலரின் மரபில் வந்த புலவர் அருளம்பலனார் எழுதிய பதிற்றுப் பத்து உரை நூலுக்கும், பேராசிரியர் கி. இலட்சுமணன் எழுதிய இந்தியத் தத்துவ ஞானம் என்ற நூலுக்கும், திரு சோ. சிவபாதசுந்தரம் எழுதிய 'புத்தர் அடிச்சுவட்டில்' என்ற நூலுக்கும், திரு டொமினிக் ஜீவா எழுதிய 'தண்ணீரும் கண்ணீரும்' என்ற சிறு கதைத் தொகுதிக்கும் பரிசுகள் கிடைத்திருக்கின்றன. பரிசுபெற்ற இந்த ஆசிரியப் பெருமக்கள் நால்வருக்கும் இந்தியத் தமிழ் மக்கள் சார்பில் பாராட்டையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறோம்.

மயிலாப்பூர், ராயப்பேட்டை நெடுஞ்சாலையிலுள்ள வித்யா மந்திரில் நிர்மாணிக்கப் பட்டுள்ள அலங்காரப் பந்தலில் சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களும் அவரது சகோதரர் ஸ்ரீ நாராயண தீக்ஷிதர் அவர்களும் சேர்ந்து ஸ்ரீமத் வால்மீகி ராமாயணப் பிரவசனம் செய்து வருகிறார்கள். சென்ற ஆகஸ்ட் மாதம் 27-ந் தேதியன்று டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் இந்தப் புனித பிரவசன விழாவை ஆரம்பித்து வைத்தார்கள். அன்றிலிருந்து தினம் மாலையில் நடைபெற்று வருகிற ஸ்ரீராம கதையை ஆயிரக்கணக்கான மக்கள் கேட்டு ஆனந்தித்து வருகிறார்கள். 6-10-61 வெள்ளிக்கிழமை யன்று ஸ்ரீராம பட்டாபிஷேகம் நடைபெற விருக்கிறது. இந்த வைபவத்தில் பக்தர்கள் அனைவரும் பெருந்திரளாகக் கலந்துகொண்டு ஸ்ரீராமபிரானது கருணைக்குப் பாத்திரர்களாக வேண்டுகிறோம்.



டாக்டர்கள் மில்க் ஆப் மக்னீஷியாவையே சிபாரிசு செய்கிறார்கள் — மிதமாக பேதி ஆவது, அமிலத்தை எதிர்த்து பூர்ண நிவாரணமளிப்பதில் சக்தி வாய்ந்தது.



உலகத்திலுள்ள ஆயிரக்கணக்கான டாக்டர்களையும், சிகை வைத்திய நிபுணர்களையும், பிரசவ வைத்தியர்களையும், ரண சிகிச்சை வைத்தியர்களையும் "நீங்கள் உங்கள் நோயாளிகளுக்கு பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியாவை சிபார்சு செய்கிறீர்களா?" என்று கேட்டதற்கு அவர்களில் அனேகர் "ஆம்!" என்று பதிலளித்தார்கள்.

ஆம், குழந்தைகளுக்கும், பிரசவம் மற்றும் ரண சிகிச்சை பெற்ற நோயாளிகளுக்கும் கூட பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா மிகவும் பலன் தரக்கூடியது என்று டாக்டர்கள் கருதுகிறார்கள்.

இதில் ஆச்சரியமொன்றுமில்லை!


பேதி மருந்து ஆனாலும் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா நிதானமாகவும், செம்மையாகவும், இதமாகவும் வேலை செய்கிறது; ஜீரண உறுப்புகளை பலவந்தப்படுத்துவதில்லை. அமிலங்களை அடக்கும் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா வயிற்றுக் கோளாறு, வாயு, நெஞ்செரிச்சல் மற்றும் மலச்சிக்கலுடன் வரும் இதர அமில உபாதைகளிலிருந்தும் நிவாரணமளிக்கிறது.

எந்தவிதமான பேதி மருந்தும் இம்மாதிரி சுகமான பரிபூரண நிவாரணமளிக்காது!


உங்கள் டாக்டரைக் கேளுங்கள்! ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்கவேண்டியது

பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா

REGD. TRADE MARK



இரைப்பையில் மிதமிஞ்சிய அமிலத்தால் ஏற்படக்கூடும் அஜீரணத்திலிருந்து உடனடியாக நிவாரணம் பெற எங்கும், என்றும் இன்பமான, இனிப்பான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா வில்லைகளை உட்கொள்ளுங்கள். 4 வில்லைகள் கொண்ட கையடக்கமான பாக்கெட்களிலும், 75, 150 கொண்ட புட்டிகளிலும் கிடைக்கும்.



பூரண விநியோகஸ்தர்கள்:

டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் பிரைவேட் லிமிடெட்

மணிபல்லவம்

14. கற்பூர நறுமணம்



நா. பார்த்தசாரதி

'இப்போது ஞானவீரர்களையே எதிரிகளாகத் தேடிக் கொண்டிருக்கிறேன். ஆனால் முன்பு நான் உடல் வலிமையை நம்பிக் கொண்டிருந்த காலத்தில் எதிரிகளாக வந்திருக்க வேண்டியவர்கள் பலர் இப்போது வந்து தொல்லை கொடுக்கிறார்கள்' - என்று சொல்லி விட்டு வளநாடுடையார், நீலநாகர் ஆகியோரோடு இளங்குமரன் புறப்பட முற்பட்ட சமயத்தில் சிறிதும் எதிர்பாராத சந்திப்பொன்று அங்கே நிகழ்ந்தது.

"எதிரே வருகிறவர்கள் எல்லாம் எதிரிகளானால் இதோ உங்களுக்கு ஒரு புது எதிரி" என்று கூறிக்கொண்டே விசாகை அவனுக்கு முன்னால் தோன்றினாள். இளங்குமரன் முகம் மலர்ந்து வியப்புடன் அவளைப் பார்த்தான். 'என்ன அற்புதம்! சில விநாடிகளுக்கு முன்புதானே இவளை நினைத்தேன்? மனக் கண்களுக்குத் தோன்றியவள் உடனே புறக் கண்களுக்கும் தோன்றுகிறாளே! திருநாங்கூரிலிருந்து இவள் எப்போது இங்கே வந்தாள்?' என்று எண்ணிக் கொண்டே எதிரே நடந்து வரும் விசாகைக்குத் தன் பார்வையே வணக்கத்தைச் சுமந்து செல்லும் விதத்தில் நோக்கினான் இளங்குமரன்.

இவ்வளவு பரிசுத்தத்தைத் தாங்கிக் கொள்ள இந்த உலகத்தில் இடமில்லை, இடமில்லை என்பது போல் - இந்த மண்ணுக்குத் தகுதியில்லை தகுதியில்லை என்பது போல் ஒதுங்கி ஒதுங்கி நடந்து கால்களை அதிர ஊன்றாமல் அசைந்து அசைந்து வந்து கொண்டிருந்தாள் விசாகை. பூமாலை சரிந்து நழுவுகிறாற் போல மண்ணிற் பதியாது மிதக்கும் நடை அது. தெளிந்த நீரில் பால் கலப்பதுபோல அவள் வந்ததுமே அந்த இடத்தில் பிரகாசம் பரவியது. 'இந்த மண்ணில் ஊன்றி நடக்க மாட்டேன்' - என்பது போலவும், பிரவாகத்தில் மிதக்கும் பூவைப் போலவும் விசாகை வருகிற தூய்மையிலேயே மனம் தோய நின்றான் இளங்குமரன். 'இரும்பில் தோன்றும் துரு இரும்பையே அழித்து விடுவது போலச் சஞ்சலம் மன உறுதியை அழித்து விடும்' - என்று விசாகை என்றோ தனக்குக் கூறிய சொற்களை இப்போது நினைத்துக் கொண்டான் அவன். 'அப்படிச் சஞ்சலம் எனக்கு ஏற்படும்போதெல்லாம் இவள் எதிரே தோன்றுகிறாளே' என எண்ணியவனாக, "திருநாங்கூரி

லிருந்து எப்பொழுது புறப்பட்டீர்கள், அம்மையாரே? சிறிது நேரத்துக்கு முன்னால்தான் உங்களை நினைத்துக்கொண்டேன். நீங்களே வந்து விட்டீர்கள்'' என்று கேட்டான் இளங்குமரன்.

''இங்கு நான் வந்த நேரம் நல்ல நேரமில்லை போலும்! நீங்கள் காயமுற்ற நெற்றியும் கலங்கிய கண்களுமாக எங்கோ புறப்பட்டுக் கொண்டிருக்கிறீர்களே?'' என்றாள் விசாகை.

''காயம் பட்டதும், கலங்கியதும் உண்மை. ஆனால் உங்கள் முகத்தைப் பார்த்ததும் என்னுடைய கலக்கங்கள் அழிந்து பழைய தெளிவை நான் உணர்கிறேன்'' என்றான் இளங்குமரன்.

அங்கே அட்சய பாத்திரத்தோடு வந்த விசாகையைக் கண்டதும் வளநாடுடையாரும், முல்லையும் என்ன நினைத்துக் கொண்டார்களோ தெரியவில்லை. படைக்கலச்சாலைக்கு வந்து அப்புறம் சந்திப்பதாகக் கூறி நீலநாகரிடமும், இளங்குமரனிடமும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டுப் போய் விட்டார்கள் அவர்கள்.

விசாகை தான் அன்று அதிகாலையில் தான் திருநாங்கூரிலிருந்து புறப்பட்டதாகவும், இந்திரவிழா முடிகிறவரை காவிரிப்பூம் பட்டினத்தில் தங்கியிருக்கப் போவதாகவும் கூறினாள். ஒதுங்கி நின்றிருந்த நீலநாகர் அன்போடு அருகில் வந்து, ''சுகமாய் இருக்கிறாயா, அம்மா?'' என்று விசாகையை விசாரித்தார்.

''எல்லாரும் சுகமாயிருக்கிற வரை என்னுடைய சுகத்துக்கு ஒரு குறைவும் இல்லை ஐயா!'' என்று அவரை நோக்கிக் கைகூப்பினாள் அவள்.

''நீயும் எங்களோடு வந்து ஆலமுற்றத்திலேயே தங்கிக் கொள்ளலாமே, அம்மா? திருநாங்கூர்ப் பூம்பொழிலிலிருந்து யார் வந்தாலும் இங்கே ஆலமுற்றத்து விருந்தாளிகளாயிருக்க வேண்டும் என்பது தான் என் ஆசை'' என்றார் நீலநாகர். விசாகை புன்னகை பூத்தாள்.

'' இல்லை ஐயா! இந்த நகரத்தில் எங்கள் சமயத்தாருக்கு உரிய இந்திர விகாரம் என்னும் பௌத்தப் பள்ளியில் நான் போய்த் தங்கிக் கொள்வேன். நாளைக்குக் காலையில் மீண்டும் உங்கள் இருவரையும் நாளங்காடியில் இதே இடத்தில் சமயவாதிகளின் கூட்டத்துக்கு நடுவே சந்திப்பேன். இப்போது எனக்கு விடைகொடுங்கள்'' என்று வணங்கினாள் விசாகை. அன்று காலையில் நாளங்காடியில் இளங்குமரனுக்கு ஏற்பட்ட துன்பங்களைப் பற்றி விசாகையிடம் சொல்லலாமென நினைத்திருந்த நீலநாகர் இப்போது அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டார். அவரும் இளங்குமரனும் அவளுக்கு விடை கொடுத்தனுப்பினார்கள். காவிரிப்பூம்பட்டினத்துக்கு வந்ததும் வராததுமாக இந்தத் துன்பச் செய்திகளை அவள் அறியவேண்டாமென்றே நீலநாகர் அவளிடம் இவற்றைக் கூறாமல் தம் எண்ணத்தை மாற்றிக் கொண்டார். விசாகை விரைவாக விடைபெற்றுக் கொண்டதற்குக் காரணமும் இப்படிப் பட்டதுதான். இளங்குமரனும் நீலநாகரும் ஏதோ கவலை நிறைந்த சூழ்நிலையில் இருப்பதாக அவள் அனுமானம் செய்து கொள்ள முடிந்ததனால் அவர்களைத் தனியே விட்டு விட்டுப் புறப்படுவதுதான் நல்லதென்று புறப்பட்டிருந்தாள் அவள்.

''புறப்படு தம்பி! இந்தக் கோலத்தோடு இன்னும் இங்கே நிற்க வேண்டாம். இப்படிக் கலகலப்பான பொது இடங்களுக்கு அதிகமாக வந்து பழகுவதை விரும்பாத என்னை நீதான் உன் பாதுகாப்புக்காக இங்கே அடிக்கடி வரச் செய்கிறாய். நேற்றும் உன் பொருட்டு இங்கே வந்து கூட்டத்தோடு கூட்டமாக நின்று கொண்டிருந்தேன். இன்றைக்கு வரவேண்டாமென்று நினைத்திருந்தேன். உன்னைத் தனியே இங்கு அனுப்பிய பின் எனக்கு மனம் கேட்கவில்லை. பிள்ளைப் பூச்சி குடைவது போல் மனத்தில் ஏதோ வேதனை குடைந்தது. சிறிது நேரத்தில் நானும் புறப்பட்டு வந்து விட்டேன். தெய்வ சித்தம் எவ்வளவு பெரிய உயிர் உதவிக்காக என்னை இங்கே புறப்படுவதற்குத் தூண்டியிருக்கிறது, பார்த்தாயா? நான் வந்திரா விட்டால் என்ன நிகழ்ந்திருக்கும் என்று நினைவை நிகழாததோடு இணைத்துப் பார்த்தால் உடல் சிலிர்க்கிறது தம்பி!''

''வருந்தி அழைத்தாலும் வாராதன வாரா. பொருந்துவன போமின் என்றால் போகா. நம் கைகளில் என்ன ஐயா இருக்கிறது? விதிக்கு ஊழ் என்று தமிழில் பெயரிட்டிருக்கிறார்கள். 'ஊழ்' என்றால் வரிசை முறை என்று பொருள். செய்த வினைகளை நிறுத்தி நிறுத்து நிறைவுக்கு நேர்ந்தபடி பயன்கள் வரிசையாக வருவதற்கு எவ்வளவு பொருத்தமாகப் பெயர் அமைந்திருக்கிறது, பார்த்தீர்களா?'' என்றான் இளங்குமரன். முன்பு அவனைத் தாங்கிக் கொண்டிருந்த போதும், இப்போது அவனைத் தழுவினாற் போல் அவனருகில் நடக்கிற இந்தச் சமயத்திலும் அவன் உடம்பிலிருந்து கற்பூரத்தின் நறுமணம் கமழ்வது போல நீலநாகர் உணர்ந்தார்.

இப்படிப் பேசியவாறே இவர்கள் நடந்து கொண்டிருந்தபோது, செவிகளில் மகர குண்டலங்கள் அசைய மார்பில் புலமையைப் பாராட்டி மன்னர்கள் அளித்த இரத்தின கண்டிகைகள் ஒளிரத் தங்க நிறப் பட்டு ஒரு தோளைத் தழுவினாற் போலச் சரிந்து இலங்க பிராகிருத மொழியிலும் பாலி, வட மொழிகளிலும், வல்லவரான பண்டிதர் ஒருவர் எதிரே வந்து இளங்குமரனின் கையிலிருந்த ஞானக் கொடியைப் பார்த்து விட்டுப் பசி கொண்டிருந்த சிங்கம் கண் முன் இரை கண்டாற் போன்ற ஆவலோடு நின்றார். அவர் வலக்கையில் சுவடிகள் இருந்தன.

கம்பீரமான தோற்றமும் தோளாலும், சடையாலும் மட்டுமின்றி அறிவாலும் மிகுந்து தோன்றிய அழகும் கொண்டு அந்தப் பெரும் புலவர் வந்து நின்றதும் இளங்குமரன் அவரை வணங்கினான். அவ்வாறு வணங்கும் போது 'இவருடைய அறிவுக்கு என் வணக்கமும் அகம்பாவத்துக்கு என் அநுதாபமும் உரியனவாகுக' என்று மனத்தில் இரண்டையும் நினைத்துக் கொண்டே அவன் வணங்கினான். அந்த வணக்கத்துக்குப் பதில் வணக்கமும் செலுத்தாமல் 'என்னடா சிறு பிள்ளையே' - என்கிற விதத்தில் சிரித்தது ஞான சிம்மம். 'நெற்றியில் இரத்தக் காயமும் மனத்தில் கலக்கமுமாகப் பசித்துத் தளர்ந்து இருக்கிறாயே! இப்போது எதற்கு வம்பு? இவரிடம் நாளைக்குச் சந்தித்து வாதிடலாம் என்று சொல்லி விட்டுப் புறப்படு. இன்று காலைப் போதுக்கு இத்தனை வம்புகள் போதும்' - என்று இளங்குமரன் காதருகில் மெல்லச் சொன்னார் நீலநாகமறவர்.

"ஐயா! நீங்கள் கூறுவது நல்லதானாலும் இப்போது இந்தப் புலவரை நான் அலட்சியம் செய்வதற்கில்லை. நோயாளிக்கு மருந்தளித்து அந்த நோயைப் போக்க வேண்டிய மருத்துவன் நோய் கண்ட போதெல்லாம் நோய் கண்ட இடமெல்லாம் தயங்காமல் உதவுவதில் தான் தொழிலால் கிடைக்கிற மெய்யான மன நிறைவு அவனுக்கு உண்டு. அறிவும் மருந்தைப் போன்றதுதான். இப்போது இந்தப் புலவருக்கு வந்திருப்பது அகங்கார நோய். இதை நேர் எதிரே கண்டு உணர்ந்த பின்பும் இவரை இந்த நோயோடு இப்படியே நலியவிட்டு விட்டு நான் மேலே செல்வது நல்லதன்று. ஞானத்தை அடக்கி வைத்துக் கொள்ளாமல் மலர்ந்த பூவைப் போல் எல்லார்க்கும் நுகரப் பயன்பட்டுக் கற்பூரம்போல மணந்து கொண்டே பிரகாசிக்க வேண்டும்" - என்று மெல்லிய குரலில் நீலநாகருக்குச் சொல்லி விட்டு எதிரே நின்றவரை அநுதாபத்தோடு பார்த்துக் கொண்டே, "புலவர் பெருந்தகையே! உங்கள் போரைத் தொடங்கலாம்.." என்றான் இளங்குமரன்.

முன்பு அவன் சரீரத்திலிருந்து உணர்ந்த கற்பூர மணத்தை இப்போது அவன் சொற்களிலிருந்தும் உணர்வது போன்ற பிரமையை நீலநாகர் அடைந்தார்.

15. மலையோடு வாதம்

அவனை அழைத்த முதற் சொல்லிலேயே ஏளனம் ஒலிக்க அலட்சியமாக அழைத்தது அந்த அறிவுச் சிங்கம்.

"குழந்தாய்! ஒன்று, இரண்டு, மூன்று எனப்படும் எண்கள் எண்ணுவதற்கு மட்டும் பயன்படும் குறிகளா? அல்லது அவைகள் குணங்களாதலும் உண்டா?"

"ஐயா! எண்கள், ஒன்று, இரண்டு, மூன்று, என எண்ணுவதற்குரிய குணத்தைப் பெற்றுப் பொருள்களை எண்ணும் தொழிலைச் செய்யும்போது குறியீடுகள். ஒருமை, இருமை, மும்மை என எண்ணும் தன்மையாகிய மூலப் பண்பாகவே நிற்கும் போது குணங்கள். எண்ணுவதைக் குணமாகச் சொல்லும்போது சங்கை என்று சொல்கிறார்கள் தருக்க நூலார். அணியாகச் சொல்கிறார்கள் அலங்கார நூலார். கருவிகளாகச் சொல்கிறார்கள் கணித நூலார். எண்களில் ஒருமைதான் அழிவில்லாதது என்பது தருக்க நூல்களின் முடிவு- ஒருமைக்கு மேல் யாவும் எல்லையற்றவை. எல்லை யற்றவை யாவையோ அவை அளக்க முடியாதவை. ஒன்று இரண்டு, மூன்று என எண்ணத் தொடங்கி ஒவ்வொன்றாக வளர்த்து வளர்த்துக் கொண்டு போய் எண்ணும் ஆற்றல் இறுதியாகச் சோர்ந்து முடங்கிய முடிவான மூலைக்குக் 'கோடி' என்று பெயரிட்டு விட்டுத் தளர்ந்து போனார்கள். தெரு முடிகிற இடத்துக்குத் 'தெருக் கோடி' என்று பெயர் சொல்கிறாற் போல் எண் முடிகிற இடத்துக்கும் கோடி என்று பெயர். ஒருமை அல்லாதது எல்லாம் பன்மை என்பது எங்கள் தமிழ் வழக்கு. ஒருமை, இருமை, பன்மை என்பது வடமொழி வழக்கு. எண்களில் ஒன்று தான் நித்தியம், ஏனையவை அநித்தியம் என்ற கருத்து காத்தியாயனர், தொல்காப்பியர்,


இப்பொழுது
நடைபெறுகிறது
சென்னை
காஸினோ
பிரபாத்
சரஸ்வதி
மற்றும் தென்னாடெங்கும்
CHITHRALAYA
சித்ராலயா
அளிக்கும்
ஸ்ரீதரின்
தேன் நிலவு
ஒளிப்பதிவு
ஏ. வின்சென்ட்
இசை
ஏ. எம். ராஜா
பாடல்கள்
கண்ணதாசன்
ELEGANT

பாடியகாரர் எல்லோருக்கும் உடன்பாடு. பதினொன்று என்பதை ஒன்றை மிகுதியாக உடைய பத்து என்றும், முப்பத்து மூன்று என்பதை மூன்றை மிகுதியாக உடைய முப்பது என்றும் காத்தியாயனர், தொல்காப்பியர், ஆகியோர் பிரிப்பர்!......என்றால் அளக்க முடியாதவற்றை அளப்பதற்குத்தான் தருக்கத்தில் பரிமாணம் என்று மற்றொரு குணம் வகுத்தார்கள். ஒன்று, இரண்டு என எண்ணி அளக்க முடியாமல் நுண்மை, பெருமை, குறுமை, நெடுமை எனக் கருதியே அளக்க முடிந்தவற்றைப் பரிமாணத்தால் அளக்க வேண்டும்.''

''நல்லது! நீயும் ஏதோ விவரங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறாய். இதோ, இந்தக் கேள்விக்குப் பதில் சொல். ஒருமை அல்லாதன எல்லாம் பன்மை என்பது தவிர ஒருமையிலும் பன்மை உண்டோ?''

''உண்டு! ஒன்றில் இரண்டு அரைப் பகுதிகளும் நான்கு கால் பகுதிகளும், எட்டு அரைக்கால் பகுதிகளும் கூறு படுத்தினால் இன்னும் பல பகுதிகளும் அடங்கி யிருக்கின்றன. ஒருமையிலும் பின்ன வகையால் பன்மை காணலாம். ஆனால் பின்னப்படும்போது பொருளின் குணம் சிதையுமாதலால் முறைப்படி அவற்றைப் பன்மை என ஒப்புக் கொள்ள இயலாது. குணம் பொருளுக்கு உரியதாகச் சொல்லப்பட்டது. ஒன்றாயிருந்த பொருள் இரண்டாகவும், நான்காகவும், எட்டாகவும், சிதைந்த பின் அவற்றை எண் என்னும் குணத்தால் அளப்பது நியாய மாகாது ஐயா! தருக்கத்தில் பொருள் சொல்லிய பின்பு தான் குணம் சொல்லி யிருக்கிறார்கள்.''

பக்கத்தில் நின்ற நீலநாகருக்கு ஒரே ஆச்சரியம். 'இந்தப் பிள்ளையை நாங்கூர் அடிகள் மறுபிறவி எடுக்கச் செய்து அனுப்பினாற் போல அறிவின் அவதாரமாய் ஆக்கி அனுப்பி விட்டாரே!' - என்று எண்ணி எண்ணி வியந்தார் அவர்.

பல ஆண்டுகளுக்கு முன்னால் ஆலமுற்றத்துப் படைக்கலச் சாலையில் 'மாமரத்துக் காய்களின் சாயலைக் கீழே நீர்ப்பரப்பில் பார்த்துக் கொண்டே குறி தவறாமல் இளங்குமரன் அம்பெய்து வீழ்த்திய நாளில்; 'குறி தவறாமல் பார்க்கும் கண்களுக்கு வில்லாற்றல் வளர்வதைப் போல் குறி தவறாமல் நினைத்து நினைத்து அடைய வேண்டிய இலட்சியம் எவ்வளவு தொலைவில் இருந்தாலும் அதற்கருகில் போய் விடுகிற மனம் உடையவனுக்குத் தவத்தினால் சித்திகள் எல்லாம் கிடைக்கும். அந்தத் தவம் இந்தப் பிள்ளையிடம் இருக்கிறது' என்று இளங்குமரனைக் காண்பித்து மற்ற மாணவர்களுக்கு முன்னால் தான் அவனைப் புகழ்ந்த வார்த்தைகள் இன்று தன் முன்னாலேயே நிதரிசனமாக அர்த்தம் பெற்று விளங்குவதை நீலநாகர் உணர்ந்தார்.

அந்தப் பன்மொழிப் புலவர் தமது தோளிலிருந்து வழுகி நழுவும் பட்டுப் போர்வையையும், மனத்திலிருந்து வழுகி நழுவப் பார்த்த அகம்பாவத்தையும் இவ்வளவு விரைவாக விட்டு விடத் துணியாமல் ஒரே சமயத்தில் இழுத்து நிறுத்திப் போர்த்திக் கொண்டவராக மேலும் இளங்குமரனைக் கேட்டார்:

''பாகதமும், பாலியும், தெய்வ மொழியும் உலக மெல்லாம் புகழ் பெற்றிருக்கின்றன. வேங்கடத்துக்கும், குமரிக்கும் நடுவிலுள்ள சிறிய நிலப் பகுதியில் மட்டும் தானே உங்கள் தமிழ் வழங்குகிறது! பௌத்த சமய கிரந்தங்கள் பாலியில் மிகுதியாயிருக்கின்றன.

தீட்சாமங்கலம் ஸ்ரீ ராமநாத தீட்சிதர்



சமீபத்தில் குடும்பத்துடன் ஸ்தல யாத்திரை சென்றிருந்த சென்னை புரசைவாக்கம்வாசியான தீட்சாமங்கலம் ஸ்ரீ ராமநாத தீட்சிதர் முக்தி ஸ்தலமாகிய காசியில் இறைவனடி சேர்ந்தார். குழந்தைப் பருவத்திலேயே அவர் இளம்பிள்ளைவாதத்தினால் இரண்டு கால்களின் சக்தியையும் அடியோடு இழந்துவிட்டார். எனினும், அதற்காக அவர் மனம் சோர்ந்து விடாமல் இருந்த இடத்திலிருந்து கொண்டே வேதங்கள், சாஸ்திரங்கள், ஜோதிடம் முதலியவற்றில் பிரமிக்கத்தக்க பாண்டித்தியம் பெற்று விளங்கினார். ஸ்ரீ தீட்சிதரிடம் பலரும் வேத சாஸ்திரங்கள், வேத பாஷ்யம் முதலியவற்றில் கல்வி பெற்றனர்கள். இரவு பகலாக வேத, சாஸ்திர ஆராய்ச்சியில் லயித்திருந்த அவர், சீடர்கள் எந்த நேரத்தில் வந்தாலும் அலுப்பு சலிப்பின்றி அவர்களுக்குக் கற்பிப்பதையே தமது முழு முதற் கடமையாகக் கொண்டிருந்தார். அவரது மறைவு, ஆஸ்திக உலகுக்குப் பெரும் நஷ்டமாகும்.

தரிசனங்கள் தெய்வ மொழியில் இருக்கின்றன. இப்படியெல்லாம் இருக்கும் போது தமிழ் மொழிக்கென்று தனியாக எழுத்து, இலக்கணம் எல்லாம் எதற்கு? பாலி வடிவிலோ, தெய்வ மொழி உருவிலோ, தமிழையும் எழுதி விட்டால் என்ன...?''

''சுவாமி! என்னிடம் இந்தக் கீழ்மை நிறைந்த கேள்வியைக் கேட்டதற்காகத் தெய்வங்கள் உங்களை மன்னிக்கவேண்டும் என்று உங்கள் அறியாமைக்காக உங்கள் பொருட்டு நான் பிரார்த்தனை செய்கிறேன். எழுத்து என்பது சப்தத்தின் ஆடை. அது இல்லா விட்டால் சப்தம் நிர்வாணமாக நிற்கும். ஒவ்வொரு மொழிக்கும் அதன் எழுத்துக்கள் ஆடை. அவற்றை நீக்குவது மானபங்கம் செய்வதற்கு ஒப்பானது. அகத்தியரும், தொல்காப்பியரும், திருவள்ளுவரும் எந்த எழுத்துக்களைத் தங்கள் தெய்வக் கைகளால் எழுத்தாணி பிடித்து எழுதினார்களோ அந்த எழுத்துக்கள் கண்ணில் தெரிவதாலேயே இன்னும் என் கண்கள் சூரிய ஒளியில் குளித்தது போல் புனித மடைகின்றன. இந்த நகரின் ஆலமுற்றத்துக் கோவிலில் இருக்கிற தெய்வ பிம்பம் எப்படிப் பல ஆயிரம் ஆண்டுகளாக வணங்கப்பட்டு வணங்கப்பட்டு ஒவ்வொரு தலைமுறையின் பக்தியையும் ஏற்றுத் தாங்கிக் கொண்டு தன் தெய்வ சக்தியை வளர்த்துக் கொண்டிருக்கிறதோ, அப்படியே தமிழும் பல கோடித் தலைமுறைகளின் பழக்கத்தில் எழுத்தும் சொல்லுமாக வணங்கப்பட்டு, வணங்கப்பட்டு மந்திரமாக நிறைமொழியாக வளர்ந்து நிற்கிறது! அதன் எழுத்துக்களை மாற்றலாமென்று நினைப்பதே பல தலைமுறைகளாக வணங்கப்பட்டு வரும் தெய்வ பிம்பத்தைக் கோவிலுக்குள்ளிருந்து வெளியே எடுத்து எறிய நினைப்பதற்கு ஒப்பாகும்.''

இளங்குமரன் எவ்வளவோ சான்றாண்மையையும் சம சித்தத்துவத்தையும் பெற்றிருந்தும் அந்த வட தேசத்துப் புலவரின் இந்தக் கேள்விக்கு இப்படி மறுமொழி கூறியபோது சற்றே கண்கள் சிவந்து முகம் சிவந்து உதடுகள் துடித்திட உணர்ச்சி வசப்பட்டு விட்டான்.

''கோபப்படாதே, குழந்தாய்! வாதம் செய்கிறவன் சுயமாக உணர்ச்சி வயப்பட்டால் அந்தக்கணமே வாதத்துக்குரிய விஷயம் உணர்ச்சியிழந்து போகும் என்பதும் தருக்கத்தின் முறைகளில் ஒன்றல்லவா? வாதி தன்பலம் காட்டினால் வாதம் பலமில்லாதது என்றாகிவிடும். இப்போது உன்னை வேறொரு கேள்வி கேட்கிறேன். இதிகாச நாயகர்களாகிய இராமன், தருமன், கண்ணன், இவர்களைக் காவியக் குணங்களுக்காக வணங்குகிறாயா? அற்புதச் செயல்களைச் செய்தவர்கள் என்பதற்காக வணங்குகிறாயா?''



''அற்புதச் செயல்களைச் செய்கிறவர்கள் வணங்கத் தகுதியுடையவர்களானால் இதோ இந்த நாளங்காடியில் இத்

திர விழாக் கூட்டத்திலே வயிற்றுப் பிழைப்புக்காகக் கண்கட்டி வித்தை காட்டிக் கொண்டிருக்கும் சாதாரண மாந்திரீகர்களையும் வித்தைக்காரர்களையும் கூட நான் வணங்க வேண்டியிருக்கும். வியாசரும், வான்மீகியும், காவிய குணங்களால் தூய்மையாய் வரைந்து நம் முன் நிறுத்தும் நாயகர்கள் சுயமாகவே தங்களுக்குள்ள தெய்விக ஆற்றலோடு தங்களை வரைந்த மகாகவிகளின் தெய்விக ஆற்றலையும் பெற்றுப் பால் வைத்திருந்த பேழையில் தேன் வைத்திருந்த பேழை கவிழ்ந்தாற்போல இரட்டைச் சுவைகள் இணைந்து நேர்ந்த தெய்வங்களாய்த் தோன்றுகிறார்கள். ஆனால் பாமரர்களுக்குக் கதை சொல்லும் பௌராணிகர்களுடைய இராமனை என்னால் வணங்க முடியவில்லை, வியப்பதற்கு மட்டும் தான் முடிகிறது. காவியத்தில் வருகிற இராமன் வில்லை ஒடிப்பதற்கு ஒரு கணத்தில் நூற்றுள் ஒரு பங்கு நேரம் கூட ஆகவில்லை என்று கவி சொல்கிறார். வில்லை எடுத்ததையே காண முடிந்ததாகவும், ஒடித்ததைக் கேட்க மட்டுந்தான் முடிந்ததாகவும் கூறிய கவியைக் கற்கும்போது, 'ஒடிப்பதற்கு ஆகிய நேரத்தை உணரவும் முடியவில்லை. உணரவும் முடியாத சிறிய அணு அளவு நேரம் அது' என்று எண்ணி அதைச் செய்த காவிய நாயகனை என்னால் வணங்க முடிகிறது. பௌராணிகருடைய இராமனோ வில்லை ஒடிப்பதற்கே மூன்று நாள் ஆகிறது. முடிசூட்டு விழாவுக்காகக் கதை கேட்பவர்களிடமிருந்து பௌராணிகருக்குக் கிடைக்க வேண்டிய கணையாழியும் பிறவும் செய்யப் பெற்று வருகிற வரை அவருடைய இராமன் தாமச ராமனாய் வில்லைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒடித்துக் கொண்டே இருக்கிறான். காவிய குணங்களைப் பெற்ற தெய்வ கணங்களாக இருப்பதனால் தான் இதிகாச நாயகர்களை அவர்களுடைய காவிய குணங்களுக்காகவே நான் வணங்குகிறேன். காவிய குணங்களுக்குப் 'பாவிகம்' என்று பெயர். அவை எல்லார்க்கும் பொதுவான ஞான நிதி. அவை எந்த ஒரு தனிக் காவிய கருத்தாவுக்கும் தனிச் சொத்து இல்லை. பாரதத்தில் தருமன் வந்த பின் தருமம் செய்கிற மனிதனைக் காவிய நாயகனாக வைத்து யாருமே காவியம் செய்யலாகாதென வாதிடுவது பேதைமை.''

எதிரே மகர குண்டலங்கள் அசைய, மணிமாலை சுடர் விரிக்க, நின்றவருடைய கண்களில் நீர் மல்கிற்று. அவருடைய கம்பீரமான உடல் நடுங்குவதையும், சிலிர்ப்பு அடைவதையும் பார்த்து இளங்குமரனுக்கும், நீலநாகருக்கும் ஒன்றுமே புரியவில்லை. அவர்கள் வியப்புடனே அவரைப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே இன்னும் வியப்பானதொரு காரியத்தை உடனே செய்யத் தொடங்கினார் அவர்.

(தொடரும்)



மாற்றம்

எல்லார்வி

தாம்பரம் நிலையத்தில் ரயில் நின்றது. பெட்டிகளில் பாதிக்கு மேல் காலியாகி விட்டன. மக்களின் ஆரவாரம் கருப்புரியாத ஓசையை எழுப்பிவிட்டது. ஜிலு ஜிலு என்று வீசிய இளங்காற்று கோமதியின் மதிமுகத்தைத் தழுவி அவள் துயிலைக் கலைத்தது. எதிர்ப் பலகையில் அமர்ந்து பெண்ணின் பேரழகைப் பெருமிதத்தோடு பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்த கமலம், மகளிடம் தோன்றிய சலனத்தைக் கண்டு, ''கோமு...! விடிந்து விட்டதே! எழுந்திருக்கவில்லை?..... தாம்பரம் வந்தாயிற்று. உம், உம் எழுந்து முகத்தைக் கழுவிக் கொள்ளம்மா'' என்றாள்.

கோமதி கண்ணைத் திறந்தாள். எழுந்து நாற்புறமும் நோக்கினாள். தாயை நிமிர்ந்து பார்த்தாள். பொருள் இன்றிப் புன்முறுவல் பூத்தாள். பிறகு எழுந்து முகம் கழுவிக் கொள்ளச் சென்றாள். ரயில் வேகமாக ஓடத் தொடங்கியது.

'....செல்லமாய் வளர்ந்து விட்டாள். கபடு சூது தெரியாது. கணவனிடமும் குறை இல்லாமல் சுகமாய் வாழ வேண்டும்' என்று தாயார் மனசுக்குள் எண்ணிக் கொண்டாள்.

முகம் கழுவிக் கொண்டு திரும்பி வந்த கோமதி பெட்டியைத் திறந்து அலங்காரப் பொருள்களை எடுத்தாள். நொடிக்குள் வசீகரமாகச் சிங்காரித்துக் கொண்டாள். உள்ளத்தில் என்ன என்னவோ எண்ணங்கள்.

''நெஞ்சிலே என்னவோ திக்திக் என்கிறது, அம்மா!''

'''அசடு வழிகிறது போ. அதெல்லாம் அந்த நாளில். பால் மணம் மாறுவதற்குள் கல்யாணம். பலநாட்கள் கழித்துத் தலைவிசை. வீடு நிறைய மைத்துனர்மார், நாத்திமார், ஓரகத்திமார், மாமனார் மாமியார். புத்தம் புதிய பலரின் நடுவே போயிருந்து நல்ல பெயர் எடுக்க வேண்டுமே என்று கவலை. பெண்கள் அழுதுகொண்டே . புக்ககம் போவார்கள். இப்பொழுதுதான் அந்தமாதிரியெல்லாம் இல்லையே! இருபதுக்கு மேல் கல்யாணம். போகிற இடத்தில் பிக்கல் பிடுங்கல் கிடையாது. வைத்தது சட்டம்!...''

'அதனாலேதான் அம்மா எனக்கு நெஞ்சில் என்னவோ திக்திக் என்கிறது' என்று கோமதி சொல்ல நினைத்தாள். சொல்லவில்லை. சுந்தரத்தின் எழில் தோற்றமும், சிரித்த முகமும் இனிய பேச்சும் எடுத்த பார்வையும் அவளை, ஆட்டி வைத்து உள்ளக் கிளர்ச்சியைத் தூண்டியபடி இருந்தன. அதே நேரத்தில் அவனுடைய-இயல்புகள் - அமரிக்கையான நடை, மிதமான பேச்சு, ஆழ்ந்த பார்வை, அழுத்தமான போக்கு முதலியன - அவளை எச்சரித்துக் கொண்டேயிருந்தன. அவனை அவள் திருமணத்தின்போது பார்த்தது தான்; கால நிலைக்கு மாறாக, ஜாடை மாடையாக ஒரு சில வார்த்தைகள் பேசினதுதான்; அதன் பின்னர் அடுத்தடுத்து உள்ள பண்டிகைகள் எதற்கும் அவன் வரவில்லை. தீபாவளிக்கும் வருவதற்கில்லை என்று எழுதி விட்டான். 'முடியுமானால் கோமதியை இங்கே கொண்டு வந்து விட்டு விடுங்கள்' என்று எழுதியிருந்தான். எல்லாருக்கும் அதிலே பெருங்குறை. கோமதியின் அப்பா விளக்கம் கூறி அனைவரையும் சமாதானம் செய்தார்.

''சம்பளத்துக்குப் பிறரிடம் வேலை செய்கிற பையன்களானால் பொறுப்பற்ற முறையிலே அடிக்கடி லீவு போட்டு விட்டுப் பெண்டாட்டியைச் சுற்றிக் கொண்டிருப்பார்கள். சுந்தரம் சொந்தமாகத் தொழில் நடத்துகிறவன். அப்படிப்பட்டவர்கள் நினைத்தபோது, சுதந்திரமாக எங்கும் போகலாமே என்று பிறர் நினைப்பார்கள். அது தவறு. முன்னேற்றத்தில் கருத்துள்ள சொந்தக் கம்பெனிக்காரர்களுக்கு கம்பெனிதான் மூச்சு!''

அப்பாவின் விரிவுரை கோமதிக்கு இனிக்கவில்லை. 'தலை வாழைக்கன்று போல் தளதளவென்று வளர்ந்துநிற்கும் மனைவியைக்காணும் ஆசையைக்கூட முறியடித்து அப்படி ஒரு தொழில் ஈடுபாடா?..' என்றுதான் எண்ணினாள். நேரில் வராதது என்ன? எழுதுகிற கடிதத்துக்குக் கூடத்தான் உடனுக்குடன் பதில் இல்லை. காரணம் - ஓய்வின்மை!

சுந்தரத்தின் இந்த இயல்புதான் கோமதியின் அடி மனத்தில் குட்டி ரகளையை எப்போதும் உண்டு பண்ணிக்கொண்டிருந்தது. அப்பாவுக்கு உடல் நிலை சற்று அநுகூலக் குறைவாக இருந்ததால் அம்மாவின் துணையோடு தலைவிசை போகிறாள். அம்மாவுக்கு அங்கே ஆயிரம் காரியங்கள். இரவே ஊர் திரும்ப வேண்டும். மறுநாள் முதல் கோமதி சுதந்திரத்தோடு தனிமையில் வாழ வேண்டும். இந்த நினைவு அவள் மனத்தில் எள்ளும் கொள்ளும் கலந்தாற் போல இன்ப உணர்வையும் இனமறியாத துன்ப உணர்வையும் மாறி மாறி உண்டு பண்ணிக்கொண்டே இருந்தது.

பல்லாவரம், பரங்கிமலை, கிண்டி - என்று நிலையங்கள் வரிசையாகத் தோன்றி மின்னலைப் போல் மறைந்து கொண்டிருந்தன.

''இதோ பார் கோமு, எட்டு நாட்களாய் எல்லாம் சொல்லி விட்டேன். முக்கியமாக ஒன்றை மட்டும் தலைப்பிலே முடிந்துகொள்.''

கோமதி திரும்பி அம்மாவைப் பார்த்தபடி உட்கார்ந்து கொண்டாள்.

''...சின்னது முதல் பெரிது வரையில் எதில் ஆகட்டும்; அவர் போகிற வழியிலே போ. மறுத்துப் பேசாதே. நாளடைவில் இருவர் மனமும் ஒன்றாகிவிடும். பிறகு கவலை இல்லை.'' தலைப்பிலே முடிந்து கொள்கிற இந்தச் செய்தியைக் கமலம் ஆயிரத்தோராவது தடவையாகச் சொல்லி முடிக்கவும் ரயில் எழும்பூர் நிலையத்தை அடையவும் சரியாக இருந்தது.

பாத்திரங்கள் முதலியன முன்பே பார்சலில் அனுப்பப்பட்டு விட்டபடியால் பெட்டி, படுக்கை, கூஜா இவ்வளவே அவர்களிடம் இருந்தன. போர்ட்டரின் தயவின்றி இறங்கினார்கள்; மேடையில் நின்று நாற்புறமும்

நோக்கினார்கள். கோமதிக்கு உள்ளத்தில் புல்லரித்தது.

''வாருங்கள் அம்மா!...''

அருகில் குரல் கேட்டுக் கமலம் திரும்பிப் பார்த்தாள். சிரித்த முகமும் குவித்த கரமுமாக, நாற்பது நாற்பத்தைந்து வயதுடைய ஒருவர் நின்றிருந்தார்.

''என்னை நினைவிருக்கிறதா? உங்கள் மாப்பிள்ளையின் கம்பெனி மானேஜர் நாராயணன். கல்யாணத்தின் போது பார்த்தது.''

''ஓ...ஆமாம், ஆமாம்; நினைவுவருகிறது.''

''அப்போது பிள்ளை வீட்டு முக்கிய சம்பந்தியாய் வந்திருந்தேன்; இப்போதும் உங்களை அழைத்துப் போக நானே வந்து விட்டேன். இந்த மாதிரி முக்கியமான காரியங்களுக்கு அவர் என்னைத்தான் நம்புவார். ஹி...ஹி.. அதோ. நம் கார் நிற்கிறது. வாருங்கள், போகலாம்.''

சிறு பெட்டிதான். அவரே தூக்கிக் கொண்டார். படுக்கையைக் கமலம் எடுத்தாள். அதையும் அவரே வாங்கிக் கொண்டார். கூஜாவைக் கோமதி எடுத்துக் கொண்டாள். அவள் முகத்தில் ஈயாடவில்லை.

''அவர்...'' கமலம் வார்த்தையை முடிப்பதற்குள், ''நேற்று ராத்திரி திடீரென்று கிளம்பிப் பங்களூருக்குப் போயிருக்கிறார்'' என்றார் நாராயணன்.

கார் கிளம்பியது. கோமதி கண்ணைத் துடைத்துக் கொண்டாள். கமலம் அவளை உற்றுப் பார்த்தாள்; உள்ளுக்குள் அங்கலாய்த்தாள்.

''அம்மாள் காலனி என்ற இடத்தில் பங்களா மாதிரி 'பஸ்ட் கிளாஸ்' வீடு. நூற்றிருபது ரூபாய் வாடகை. பார்த்துப் பார்த்து எல்லா வசதிகளும் செய்திருக்கிறார். பத்து நாட்களாக அவருக்கு இதேதான் வேலை; எப்பொழுது பார்த்தாலும் இதுவே பேச்சு!''

கமலம் திரும்பிப் பார்த்தாள். மகளின் முகம் மலர்ச்சியால் மலர்ந்திருந்தது.

கார் அம்பாள் காலனி ஆறும் எண்ணுள்ள வீட்டின் முன் நின்றது. கமலமும் நாராயணனும் மட்டும் உள்ளே சென்றார்கள். கோமதி தலைகுனிந்து வாசலில் நின்றாள். வேலைக்காரி வேலம்மாள் நொடியில் உதவினாள். கமலம் ஆரத்தி எடுத்து மகளை உள்ளே அழைத்துச் சென்றாள். நாராயணன் காரிலேயே சென்று காப்பி வாங்கி வந்து கொடுத்தார். ஓட்டல் எடுப்பைக் கமலம் மறுக்கவே, சமையலுக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் கோடித்துக் கொடுத்து விட்டு அவர் அலுவலகத்துக்குச் சென்றார்.

காலனியின் அமைப்பும், வீட்டின் பாங்கும் தாய், பெண் இருவர் உள்ளங்களையும் கவர்ந்தன. வீட்டில் பொருள்களை, சுந்தரம் பங்கிடவு செய்திருந்த கவர்ச்சிகரமான முறை மேலும் அவர்களை மகிழ்வித்தது. கோமதி இதையெல்லாம் கண்டு மனத்துக்குத் தெம்பு ஊட்டிக் கொண்டாள். தன்னை எதிர்கொண்டழைக்கக் கணவன் ரயில் நிலையத்துக்கு வரவில்லையே என்று முதலில் ஆதங்கப்பட்டவள் அவனுடைய முன்னேற்பாடுகளை வெண்ணி ரயில் நிலையத்துக்கு அவன் வராததை இப்போது பெருமையாகவே கருதினாள்.

பிற்பகலில் ஒரு முறை நாராயணன் வந்தார். கமலத்தை அவரே இட்டுச் சென்று ரயிலேற்றி விடுவதாகக் கூறிச் சென்றார். அக்கம் பக்கம் வீடுகளில் உள்ளவர்கள் சண்டைக்காரர்கள் போல் இருப்பது கமலத்துக்கு என்னவோ போல் இருந்தது. வலிய அவர்களிடம் சென்று பேசினாள். 'பெண்ணைக் கவனித்துக் கொள்ளுங்கள்' என்று கேட்டுக்கொண்டாள்; வேலம்மாளை வீட்டோடேயே இருக்கும்படி ஏற்பாடு செய்தாள். மனத் திருப்தியுடன் இரவு கிளம்பி ரயிலுக்குச் சென்றாள்.

இரவில் தனிமை கோமதிக்குப் புதிய சோதனை. பெற்றோர், உடன் பிறந்தோர்— இப்படி வீடு நிறைய 'ஜே ஜே' என்று இருந்து விட்டுப் புதிய இடத்தில், புதிய தொடர்பில் இரவில் தனிமை. நெடுநேரம் வரை தூக்கமின்றிப் புரண்டு கொண்டு கிடந்து விட்டு விடியற்காலம் கண்ணயர்ந்தாள்.

கார் வந்து நின்றது. கதவு தட்டும் சத்தம் கேட்டது. வேலம்மாள் திறந்தாள். சுந்தரம் உள்ளே வந்தான். மெய்ம்மறந்து தூங்கும் மனைவியைப் பார்த்தான். எழுப்ப மனம் வரவில்லை. ''பால் வாங்கி வை. அலுவல்களைக் கவனி'' என்று வேலம்மாளிடம் கூறிவிட்டுப் படுத்தான். உடனே தூங்கிப் போனான்.

கோமதி விழித்தெழுந்தாள். தூங்கும் கணவனைப் பார்த்தாள். மகிழ்ச்சியும் வருத்தமும் உந்த அப்பால் சென்று அலுவல்களைக் கவனித்தாள். காப்பி தயார். சுந்தரத்தை யார் எழுப்புவது? அவளுக்குத் துணிவும் வரவில்லை, மனமும் வரவில்லை. மணி ஏழாகியும் செய்வகை புரியாது தவித்தாள். சமய சஞ்சீவி போல் நாராயணனே வந்து சேர்ந்தார். சுந்தரத்தை எழுப்பித் தாம் கொண்டு வந்திருந்த சில கடிதங்களைக் காட்டி என்னவோ பேசினார். அவரை இருக்கச் சொல்லிவிட்டு உள்ளே வந்தான் சுந்தரம். கோமதி கதவிடுக்கில் தன்னை மறைத்து நாணிக்கொண்டு நின்றாள். அவன் முறுவலுடன் அவளைப் பார்த்துக் கொண்டே பல் துலக்கச் சென்றான். அப்படியே குளித்து விட்டு வேற்றுடை உடுத்துக் கொண்டு வந்து உட்கார்ந்தான்.

கோமதி அவனை வணங்கினாள். பிறகு காப்பியைக் கொண்டு வந்து வைத்தாள். அவன் அவளை நோக்கி, ''இனிப்பாக முதலில் ஏதாவது கொடேன்'' என்றான் சிரித்துக் கொண்டே. அவள் ஊரிலிருந்து கொணர்ந்த லட்டு ஒன்றை எடுத்து வந்து அவன் முன் வைத்தாள். ''அவருக்கும் லட்டு காப்பி கொடு. என் தலைவன் மாதிரி'' என்றான். அவள் அவருக்கு லட்டு காப்பி எடுத்துச் சென்றபோது அவன் தன்னுடையவற்றையும் அங்கேயே எடுத்துக் கொண்டு போனான். கோமதி நாராயணனையும் நமஸ்கரித்தாள். ''இரு இரு'' என்று சுந்தரம் எழுந்தான். துண்டை வரிந்து இடையிலே கட்டிக் கொண்டு மனைவியோடு சேர்ந்து தானும் அவரை வணங்கினான். கோமதி கணவனின் பண்புகளை எண்ணி மகிழ்ந்தாள்.

''நான் வெளியே போகிறேன், கோமதி. சாப்பாட்டுக்கு நேரங்கழித்து வந்தாலும் வருவேன்; வராமலே இருந்தாலும் இருப்பேன். நீ காத்திருக்க வேண்டாம். காலத்தில் சாப்பிட்டு விடு. என்ன வேண்டுமானாலும் இந்த வேலம்மாள் மூலம் செய்துகொள்.'' - இப்படிச் சொல்லி விட்டு நாராயணனோடு கிளம்பிச் சென்றான் சுந்தரம்.

சுந்தரம் பகல் சாப்பாட்டுக்கு வரவில்லை: நேரம் சென்றது: மாலை வந்தது. கோமதி பொழுதுபோக்காக வாயிற்புறம் வந்து நின்றாள். அடுத்த வீட்டு வாசலில் இவளைப் போல் ஒரு பெண் நின்றிருந்தாள். இருவரும் தோற்றம், அலங்காரம், பிராயம் அனைத்திலுமே ஏறக்குறைய ஒத்திருந்தார்கள்.

'ஸ்கூட்டர் வந்து அடுத்த வீட்டு வாசலில் நின்றது. அதில் வந்த' வாலிபன் அந்தப் பெண்ணை நோக்கி முறுவலித்தான்: அவளும் பதிலிறுத்தாள். இருவரும் உள்ளே சென்றார்கள். வேலையாள் ஸ்கூட்டரைத் தள்ளிச் சென்று அதற்குரிய இடத்தில் நிறுத்தினான்.

சில நிமிடங்கள் சென்றன. வாலிபனும் நங்கையும் வெளியே வந்தார்கள். ஒருவர் மீதொருவர் அன்பைப் பொழிந்து, சிரித்துப் பேசிக்கொண்டே எங்கோ சென்றார்கள். கோமதிக்கு அந்தக் காட்சி ரம்மியமாக இருந்தது. 'நமக்கும் இந்த வாய்ப்பெல்லாம் உண்டு' என்று எண்ணிக் கொண்டாள்.

மாலை சென்று இரவு வந்தது. ஆனால் சுந்தரம் வரவில்லை. கோமதியின் உள்ளம் சாம்பியது. ஆயினும் மனத்தை நெகிழவிடவில்லை. இரவு பதினொரு மணிக்குச் சுந்தரம் வந்து சேர்ந்தான். ''சாப்பாடு ஆகிவிட்டது'' என்றான். அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கினான். அவளும் சாமர்த்தியமாக முகத்தை மகிழ்ச்சி தோன்ற வைத்துக் கொண்டாள். அவன் பூ, பழம் முதலியவை கொண்டுவந்திருந்தான். அவளிடம் கொடுத்து விட்டு, ''படுக்கை யைப் போடு'' என்று கூறிவிட்டுக் குளியலறைக் குச் சென்றான்.

அன்றைய இரவு அவர்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தி வெற்றி கண்டது.

மறு நாள் காலையில் சுந்தரம் திடீரென்று பிரயாணம் செல்லக் கிளம்பினதும் கோமதியின் உள்ளம் வாடிப்போயிற்று. ''திரும்பி வர ஒரு வாரத்துக்கு மேல் ஆகும்'' என்று அவன் சொன்னபோது அவள் தலை 'கிர்'ரென்று சுழல்வது போல் இருந்தது. விடையளிக்கக் கூட வாய் வரவில்லை.

சுந்தரம் ஒரு வாரம் கெடு வைத்துச் சென்றான்: இரண்டு வாரங்களுக்கு மேல் ஆகியும் அவன் வரவில்லை. அவனுடையவனிடமிருந்து அவளுக்கு ஒரு கடிதம்கூட இல்லையே! அவள் ஏங்கினாள். தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருக்க வேண்டிய அந்த அன்பு கிடைக்காமல் போனதும் 'கண்ணிலான் பெற்றிழந்தான்' என்பது போல் ஆயிற்று. அந்த ஏக்கத்தை அவளால் தாங்க முடியவில்லை. அது உடம்பையும் பாதித்தது. கணங்கிக் கணங்கிப் படுக்கலானாள். உண்ணல், உடுத்தல் முதலியவற்றில் அசட்டை கொண்டாள். உறக்கம்—இல்லவே இல்லை.

''முதலாளி வந்து விட்டார். ஆபீஸில் இருக்கிறார். சாப்பாடு எடுத்து வரச் சொன்னார்.''—காரியரும் கையுமாக புரைவர் எதிரே வந்து நின்றான்.

'வந்து விட்டார்' என்ற சொல் பாலையில் பொழிந்த மாரி போல் இருந்தது: அடுத்த சொற்கள் வேப்பங்காயாய்க் கசந்தன. 'அங்கு வந்து தங்கியிருப்பவருக்கு இங்கே வரமுடியவில்லை. சாப்பாடு எடுத்து வர அனுப்பிய காரில் தாம் வரமுடியவில்லை. காரணம்!

ஒழிவு இல்லே. அலுவலகத்தை அப்படிக் கட்டிக் காக்கிறார்! கட்டின பெண்டாட்டி முக்கியமில்லே; அவளுடைய ஏக்கமோ, இன்ப துன்ப உணர்ச்சிகளோ பொருட்டில்லே!

உள்ளே போய் உட்கார்ந்து சிந்தனை வசப்பட்டுச் சிலேயாய்ச் சமைந்துபோன கோமதியின் உணர்வை வேலம்மாளின் குரல் தட்டி எழுப்பியது.

''ஐயா எங்கேயோ அவசரமாய்ப் போவணுமாம்; டிரைவரு பறக்கிறாரம்மா!''

கடைக்கண்ணில் துளித்திருந்த கண்ணீரை விரலால் சுண்டி விட்டு மளமள வென்று சாப்பாட்டு அடுக்குகளில் உணவுப் பொருள்களைப் பங்கீடு செய்தாள் கோமதி. அதை அவள் கொண்டு வந்து கொடுத்தபோது டிரைவர் அவள் முகத்தைப் பார்த்தான்; அவள் சமாளித்துக் கொண்டாள்.

அடுப்படியில் எல்லாம் போட்டது போட்டபடி இருந்தன. கோமதிக்கு உணவில் விருப்பம் செல்லவில்லை. படுக்கையில் போய் விழுந்தாள். கோபம் கோபமாய் வந்தது. 'போகிறது; வீடு என்று ஒன்று இருக்கிறது; அங்கே மனைவி என்று ஒருத்தி இருக்கிறாள்; அங்கிருந்து சாப்பாடு வரவழைத்துக் கொள்ள வேண்டும் என்கிற நினைப்பாவது இருந்ததே' என்று மனதுக்குள் பொருமினாள். என்ன என்னவோ எண்ணத் தொடங்கினாள். மனம், கடிவாளம் இல்லாத குதிரையைப் போல் நினைத்த திசைகளில் ஓடியது.

''கோமதி!....''

அவள் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். வாசலில் கார்; உள்ளே சுந்தரம். சிரித்த முகத்துடன் அவளை அணுகிய அவன், ''இன்னும் ஒரு மாசத்துக்கு எங்குமே போக வேண்டிய அவசியமில்லே என்று இருந்தேன், கோமதி. திடீரென்று பம்பாயிலிருந்து 'டிரங்கால்' வந்து விட்டது. உன்னிடம் சொல்லிக் கொண்டு போகத்தான் வந்தேன். ஜாக்கிரதையாக இரு. நீ விரும்பினால், அவசியமா

காங்கிரஸ் சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கும் நிலத் திட்டமானது நடைமுறைக்கு வந்து, காங்கிரஸ் வெற்றி பெற்றால் அந்த வெற்றி நாட்டில் பஞ்சத்துக்குத்தான் காரணமாகும். நாட்டில் பரவியுள்ள பண்ணைகளிலிருந்து பட்டணத்திலுள்ள கடைகளுக்குத் தான்யம் வந்து சேருவது துர்லபமாகும். ஆலைகளில் வேலை செய்பவர்களுக்கு உணவுக்குறைவும், விலை ஏற்றங்களும் பலவாறாக ஏற்படும். முடிவில் மறுபடியும் கண்ட்ரோல்கள் தாண்டவமாடும்.

—ராஜாஜி

னால் ஊருக்குக் கடிதம் எழுதி யாரையாவது துணைக்கு அழைத்துக் கொள். இந்தா, உன் கைச் செலவுக்கு வைத்துக்கொள். நான் வரட்டுமா?'' என்றான். அவள் வாய் அடைத்து நின்றாள். அவன் கொடுத்த ரூபாய் நோட்டுக்கள் அவள் கையோடு சேர்ந்து நடுங்கின. அவள் கன்னத்தை அவன் கிள்ளி விட்டுக் கோணல் சிரிப்புடன் வாசலை நோக்கி நடந்தான். அவள் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிற போதே கார் கிளம்பிச் சென்றது. அந்தக் காட்சி அவளுடைய உடம்பிலிருந்து உயிரைப் பிரிப்பது போன்ற வேதனையை அளித்தது.

இரவு ஒன்பது மணி. கோமதி வேண்டா வெறுப்பாக வயிற்றுப்பாட்டை முடித்துக் கொண்டு படுக்கச் சென்றாள். ஜன்னல் கதவைச் சாத்த எண்ணி அதன் அருகே போனாள். அடுத்த வீட்டில் ஒருகாட்சி கண்ணில்பட்டது.

அந்தப் பெண் தன் வலக்கரத்தை விரித்துக் காட்டிக் கொண்டிருந்தாள். அவள் கணவன் அதைப் பற்றி மருதோன்றி இட்டுக் கொண்டிருந்தான். இடது கையில் அவள் தானே இட்டுக் கொண்டாள் போலும். அவர்கள் இடையே என்ன சுவையான பேச்சு நிகழ்ந்ததோ இருவரும் கலகலவென்று சிரித்தார்கள். 'கொடுத்து வைத்தவர்கள், வாழ்க்கையை இன்பமாய் அனுபவிக்கிறார்கள்!' என்று எண்ணிக் கொண்டே படுத்தாள்.

'...இளம் பயிருக்கு, தழைத்து வளரவேண்டிய பயிருக்கு. அதன் வளர்ச்சிக் காலத்தில் பருவ மழை இல்லை. இளம் பயிர் வெய்யிலில் காய்ந்து உலர்ந்து கருகிப் போனபின் அதன் மீது மழை 'கொட்டி' என்ன பயன்?'

நெட்டுயிர்த்துக் கொண்டாள் கோமதி. '...இந்தச் செல்வமும் சிறப்பும் இங்கே யாருக்கு வேண்டும்? கொண்டவனின் அரவணைப்பற்ற இந்த வாழ்வு கண்ணில்லாத உருவம் போலத்தானே? இதைவிட யாராவது ஓர் ஏழைக் குமாஸ்தாவுக்குக் கழுத்தை நீட்டியிருந்தால்கூட வாழ்க்கை குதூகலமாயிருந்திருக்குமே!' என்று எண்ணினாள்.

வலப்புறம் உள்ள வீட்டில் தாயும் பிள்ளையுமாக ஒரு புதிய குடும்பம் குடியேறியிருந்தது. அந்த அம்மாள் நல்லவள்; கர்நாடகப் போக்கு உடையவள். அடிக்கடி கோமதியிடம் வருவாள். இரவலாக ஏதாவது பெற்றுச் செல்வாள். அன்பாகப் பேசுவாள்.

அந்த அம்மாளின் பிள்ளை ரங்கராஜன் வசீகரமான முகத் தோற்றமும், கட்டுமஸ்தான உடல் தோற்றமும் கொண்டவன்; அவன் சிரிப்பிலே மயங்காதவர் அபூர்வம்; இவ்வளவுக்கும் சிகரம் போல் இனிமையான குரல்; தெளிவான இசை அறிவு. அடுத்த வீட்டிலிருந்து பாட்டொலி கேட்டால் கோமதிக்குக் கைக்காரியம் நின்று விடும்.

ஒரு நாள் மாலை நான்கு மணி இருக்கும்; அன்று விடுமுறை. ரங்கராஜன் குழாயடியில் பாடியவண்ணம் சோப்புப் போட்டு முகம் கழுவிக் கொண்டான்; அலுப்புடன் தனக்குக் காப்பி போட்டுக்கொண்டிருந்த கோமதி அடுக்களை ஜன்னலண்டை வந்தாள். பாட்டைக் கேட்டுப் பரவச நிலையில் அசைவற்றுப் போய் நின்றாள்.

ரங்கராஜன் அசைப்பிலே திரும்பினான்; பலகணியருகே பாவை! அவன் கண்கள் அகன்றன; இதழ்கள் விரிந்தன. பார்வையும் சிரிப்பும் நன்றாக இல்லை.

கோமதி சட்டென்று அப்பால் சென்றாள்; அவள் உடம்பு மார்கழி மாதத்துக் குளிரில் நடுங்குவது போல் வெட வெடவென்று நடுங்கிற்று. கலந்து வைத்திருந்த காப்பியில் சர்க்கரையைப் போட்டு ஆற்றிச் சாப்பிடக் கூடத் தோன்றாமல் சுவரில் சாய்ந்து உட்கார்ந்து விட்டாள். அழுகை குமுறிக்கொண்டு வந்தது அவளுக்கு.

'இந்த அளவுக்கு அந்த ரங்கராஜனுக்குத் துணிவு வந்தது யாரால்? அப்படி, என்ன ஆண்டுக்கணக்கிலே என் கணவன் என்னைத் தனியே விட்டு விட்டுத் தேசாந்திரம் போய் விட்டாரா, நான் இப்படி ஏங்கி வாட? என்னிடம் சிறிதும் பொறுமை இல்லாததே இதற்குக் காரணம். 'இளம் மனைவியைத் தனியே வீட்டிலே வைத்து விட்டுக் கணவன் ஊரூராகப் போவது சரியில்லை; இரவும் பகலும் அலுவலகமே கதி என்று கிடப்பது சரியில்லை' என்றால், 'குடும்பப் பொறுப்புடனும் பாரதப் பண்புடனும் நடந்துகொள்ளவேண்டிய பெண் சில நாட்களுக்குள் பொறுமையை இழந்து மட்டித்தனமாக அசட்டுப் பிசட்டென்று நடந்து கொள்ளுவதும் மன்னிக்க முடியாத குற்றந்தான்....'

இப்படி அவள் எண்ணம் ஓடிக் கொண்டிருக்கும் போதே வாசலில் கார் நின்ற சத்தம் கேட்டது. அடுத்த விநாடிகளில் டக், டக் என்று பூட்சுகள் ஒலிக்க, ''கோமதி!'' என்று அழைத்தபடி சிரித்த முகத்துடன் சுந்தரம் உள்ளே வந்தான். கோமதி எழுந்து நின்றாள்;

''இனி நான் உன்னை விட்டு எங்கும் பிரிந்து போக மாட்டேன், கோமதி. கம்பெனி கூட்டுறவு ஸ்தாபனமாகி விட்டது. பொறுப்புள்ள பிரயாணப் பிரதிநிதி ஒருவரை ஏற்பாடு செய்தாயிற்று. தவிர, அச்சுதபுரம் காலனியில் அழகான சிறு பங்களாவைப் பேசிப் பணமும் பாதி கொடுத்து விட்டேன். ஆறு மணிக்கு நல்ல நேரமாம். அங்கே எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டு உன்னை அழைத்துப் போக வந்தேன். சீக்கிரம் உடுத்துக்கொண்டு சுவாமி படத்துடன் கிளம்பு.''

கோமதியின் உடம்பு இப்பொழுதும் வெட வெடவென்றுதான் நடுங்கியது. உள்ளத்துள் ஏற்பட்ட குதூகல உணர்வே இதற்குக் காரணம்.

பிரபல பல்வைத்திய நிபுணர்கள் நிரூபித்துள்ளனர்

கால்கேட் குளோரோபில்



ஈறுகளை பலப் படுத்து கிறது


வாய் நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது! "ஆல் மோல்டோப்" பரிசோதனைகளில், கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட், வேறெந்த சாதாரண பற்பசையையும்விட மிகத்தீவிரமாக வாய் நாற்றத்தை ஒழிக்கிறது என்பது நிரூபணமாயுள்ளது.

சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது! கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்டை ஒவ்வொரு முறையும் சாப்பிட்டவுடன் தேய்ப்பதால், பற்களை சொத்தையாக்கும் கிருமிகள் அழிகின்றன.

கால்கேட்டின் பிரத்தியேகமான சேர்க்கை முறையைக் கொண்ட குளோரோபிலின் பூரண பலனை அடையுங்கள்.... கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்ட் அல்லது கால்கேட் குளோரோபில் டூத் பவுடர் வாங்குங்கள்!

கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்டை தினமும் தேய்ப்பதால், தீவிரமான குளோரோபிலின் பூரண நன்மையை அடைந்து, ஈறுகள் உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க ஏதுவாகிறது. உன்னதமான இந்த குளோரோபில் டூத்பேஸ்ட், சிறந்த பற்பசை, பற்பொடி முதலியவை தயாரிப்பதில் மிக்க அனுபவங்கொண்ட உலகிலே மிகப்பெரிய ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்படுகிறது!

வேறு எந்த பற்பசையிலும்
இதைவிட அதிக வீரிய குளோரோபில்
இல்லை — குழந்தைகள் அதன்
பெப்பர்மின்ட் வாசனையை மிகவும்
விரும்புகிறார்கள்!




CTPA-G-10 TAM.

3, 4-8-10



இலங்கை, வத்துகாமம், கல்வி ஏஜண்டும் பிரபல வர்த்தகருமான திரு க. அருணாசலம் பிள்ளை அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி புஷ்பலக்ஷ்மிக்கும், வத்துகாமம் பிரபல வர்த்தகர், காலஞ்சென்ற திரு ப. மு. பழனியாண்டி பிள்ளை அவர்களின் செல்வப் புதல்வன் முத்தையாவுக்கும் வத்துகாமம் மணமகள் இல்லமாகிய புஷ்பவனத்தில் சமீபத்தில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.



கரூர் வைஸ்யா பாங்கு ஏஜண்ட் ஸ்ரீ K. V. ராகவாச்சாரி அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி சாந்தாவுக்கும் ஸ்ரீ C. R. சக்கரவர்த்தி B. Sc. (Hons.) D. I. I. Sc. (E.C.E.) அவர்களுக்கும் சமீபத்தில் கரூரில் விவாகம் விமரிசையாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!

குரலின் வெற்றி

மஹி

வண்டி புறப்பட்டதிலிருந்து புத்தகத்துக்குள் தலையைப் புதைத்துக் கொண்டிருந்த அந்தப் பெண்ணுக்கு மூச்சு வருகிறதோ என்னவோ என்றுகூடச் சந்தேகமாக இருந்தது. முதல் பக்கத்திலிருந்து விடாமல் விளம்பரத்தைக்கூட வாசித்து விடுவாள் போலிருந்தது. ஸ்டேஷன் கூச்சல் எதுவும் அவள் தவத்தைக் கலைத்து விடவில்லை. வயது சுமார் இருபது இருக்கும் என்று உருவம் சொன்னாலும் கூடச் செய்கை குழந்தைத்தனமாகத் தோன்றியது. அவளையடுத்து அவளையே ஒத்திருந்த ஓர் அம்மாள். அந்த அம்மாளுக்கு அருகில் அவளுடைய கணவர். இப்படி எதிர்ப் பெஞ்சியிலிருந்தனர். நல்ல வசதியான குடும்பம் போலிருந்தது. வெள்ளிக் கூஜாவுடன் வந்து திருநெல்வேலியில் வண்டியேறினார்கள்.

நான் அமர்ந்திருந்த பெஞ்சியிலும் நாங்கள் மூவர்தாம். என்னை அடுத்து ஒருவர், அவர் மனைவி ஆக மூவர். என் அருகில் அமர்ந்திருந்தவரின் மனைவியை எங்கோ பார்த்திருப்பதாக ஓர் எண்ணம். நான் வலுவில் சென்று பேசி வழக்கமில்லை. ஆகவே பேசாமல் வந்தேன். எனக்கு வீட்டு நினைவு. கடந்த நாலைந்து ஆண்டுகளாகவே காரியாலய அலுவலின் காரணமாக வெளியூர் சென்று விட்டுச் சரியாகத் தீபாவளி அன்றைக்குத்தான் வீடு திரும்புவது என்பது வழக்கமாகி விட்டிருந்தது. இந்த ஆண்டும் அப்படித்தான். தலை தீபாவளி நடைபெறுவதுதான் காரணமோ என்னவோ? என் மூத்த பெண் சொல்வது போல் தீபாவளி அன்று மாப்பிள்ளை மாதிரி வந்து இறங்கிக் கொண்டிருந்தேன். விடிந்தால் தீபாவளி. என்னுடன் பயணப்பட்டவர்கள் புதுசுகள் அல்லர். வயதானவர்களாகவும் தோன்றவில்லை. தீபாவளி சமயத்தில் பயணப்பட எத்தனையோ காரணங்கள்.

'ஒருவேளை அந்த இளம் பெண்ணுக்கு...' என்ற எண்ணம் வந்தது. 'ஊஹூம் அவளுக்கு அவள் பெற்றோர் இன்னும் கல்யாணம்என்றே நினைக்கவில்லை' என்று தெரியும்படி கழுத்து காலியாக இருந்தது.

உயிரில்லாமல் இருந்த அந்தப் பெண் துள்ளிக் குதித்தாள். ''அத்திம்பேரே, இந்தக் கதையைப் படித்தீர்களா? ஒரே பேத்தல்'' என்றாள்.

''உனக்கு எல்லாம் பேத்தல்தான். எதை நீ தொடக்கவில்லை'' என்றாள் அடுத்திருந்த அம்மாள். அந்தப் பெண்ணின் சகோதரி போலிருக்கிறது.

''போக்கா. உனக்கு ஒண்ணும் தெரியாது. இப்போத்தான் எல்லாம் இரவல் குரல் என்று தெரிந்து விட்ட பிறகும், யாரோ ஒரு பெண் நாடகத்துக்கு ஓர் ஆண் பிள்ளையின் குரலை இரவலாகக் கொண்டதினால் அவளுடன் நடித்த பெண்ணைப் பார்க்க வந்தவர் அவளை வேண்டாம் என்று சொல்லிப் போய் விட்டாராம். இப்படியும் நடக்குமா, அத்திம்பேரே!''

''என்ன என்ன! அந்தச் சம்பவத்தையும் கதையாக எழுதி விட்டார்களா?''

''என்ன, அத்திம்பேரே! இது மாதிரியும் நடந்ததா என்ன?''

''ஆமாம், கவிதா! அப்படியும் நடந்தது. கதை எழுதறவங்க உண்மையானசம்பவத்தை வெச்சிக்கிட்டுத்தான் எழுதறாங்க. முழுதும் கற்பனை கிடையாது. என்ன கதைன்னு சொல்லு, அப்புறம் நடந்ததைச் சொல்லுகிறேன்....''


''போங்க, அத்திம்பேரே! இது கதையா? நீங்க என்னிக்கோ எழுதினீங்கங்கறதுக்காக ஒங்களுக்கு எழுத்தாளங்க மேலே ஒரு தனி அன்பு. இந்தக் கதையைத்தான் பாருங்க. ஒரு நாடகம் நடக்கிறது. எல்லாம் பெண்களாலேயே பெண்கள் பள்ளிக்கூடத்தில் நடத்தப்படுகிறது. அந்த நாடகத்தில் கதாநாயகியாக நடிக்க இருக்கும் பெண்ணைப் பார்க்க ஒருவரை அழைத்து வருகிறார்கள். சம்பிரதாயப்படிக்கு இல்லாமல் இந்த நாடகத்துக்கே அவரை அழைத்து வருகிறார்கள். அழகை, பாட்டை, திறனையெல்லாம் காண்பித்து அந்தப் பையனிடம் 'சம்மதம் சர்ட்டிபிகேட்டு' வாங்க. அந்தப் பெண்ணுடன் நடித்தவர் ஆண் பிள்ளை என்பதைக் குரலின் மூலம் அறிந்துகொண்டு பெண் பார்க்க வந்தவர் பாதி நாடகத்திலேயே எழுந்து போய் விடுகிறார். இது எங்கேயாவது நடக்குமா? அத்தனை முட்டாளாக யாராவது இருப்பார்களா?''

''என்ன, கவிதா! ஒங்க அத்திம்பேரையே முட்டாள் கிட்டான்னு பேசறியே.''

''அப்படீன்னா நீங்கதான் இந்தக் கதையின் கதாநாயகனா?'' அந்தப் பெண் கவிதா ஒரே மடியாகச் சிரிக்கத் தலைப்பட்டு விட்டாள்.

''கேளு, கவிதா! நீ இந்தக் காலத்துப் பொண்ணு. இரவல் குரல் நல்லாத் தெரிஞ்சுக் கிட்டிருக்கே. பதினைஞ்சு வருஷங்களுக்கு முன்னாடி யாருக்குத் தெரியும்? நாடகத்துலே வர்றவங்க எல்லாம் சொந்தக் குரலாலேயே பாடி நடிச்சாங்க. 'மைக்'குக்கூடக் கிடையாது. அந்தச் சமயத்திலே ஆண் பிள்ளைக் குரலுடையவருடன் நடித்த பெண்ணை யார்தான் கல்யாணம் செய்து கொள்வார்கள்?''

''பலே! அத்திம்பேர் கூட நல்ல கதை வைத்துக் கொண்டிருக்கிறார். சரி உங்க கதையைச் சொல்லுங்கோ. அக்கா ! அத்திம்பேரின் முன் வாழ்வு ஜாக்கிரதை!'' கண் அடித்து விட்டு, அந்தப் பெண் அத்திம்பேரை நையாண்டி செய்யத் தலைப்பட்டு விட்டாள்.



பிரபல தொழிலதிபர் திரு அ. மு. மு. முருகப்ப செட்டியார் தம்பதிகள் டோக்கியோ செல்லும் வழியில் செய்கோன் வந்திருந்தபோது, இந்தோசைனா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கத்தார் அவர்களுக்குத் தேநீர் விருந்தளித்துக் கௌரவித்தனர்.

''நன்னாவே சொல்றேன். பதினைந்து வருஷங்களுக்கு முன்னே திருச்சிராப்பள்ளியிலே தான் அந்தப் பெண்ணைப் பார்க்கப் போயிருந்தேன். பெண் பார்க்க ஏற்பாடு செய்தவர் ஒரு புதுமையான ஏற்பாட்டைச் செய்தார். அந்தப் பெண் நடிக்கும் நாடகத்துக்கே என்னை அழைத்துப் போய்க் காட்ட ஏற்பாடு செய்தார். வெட்கப்பட்டுக் கொண்டு ஓரக் கண்ணால் பார்த்து விட்டதாகக் காட்டி விட்டுத் திண்டாடாமல் நன்றாகப் பார்த்து விட்டு, பாடிக் கேட்டு விட்டுச் சம்மதம் சொல்வது எனக்கும் பிடித்திருந்தது. சம்மதித்தேன்.''

''பார்த்தீங்களா, எங்க அக்காவை அரைக் கண்ணாலே பார்த்துத்தானே சம்மதம் சொன்னீங்க. நல்லா பார்த்தா இப்படி ஆபத்துத்தான். அதுதான் பெரியவங்க வெட்கத்துக்கு இடையில் நண்பர்களின் கேலிகளுக்கு இடையில் பெண் பார்க்கச் சொல்லி வைத்திருக்கிறார்கள் போலும்!''

''முழுதும் கேளு. நாடகத்தைப் பார்த்தோம். அது ஒரு காதல் கதை. நான் பார்க்கப் போயிருந்த பெண்தான் கதாநாயகி. கதாநாயகன்கூட ஒருபெண்தான் என்று கூட வந்தவர் சொன்னார். அந்தப்பெண்ணின் குரல் ஆண் பிள்ளையினுடையதாக இருந்ததுடன் அந்தப் பெண்ணைப் பார்த்தால் ஆண்பிள்ளை மாதிரியே இருந்தது. எனக்குச் சந்தேகம். எல்லாம் பெண் பிள்ளைகள் என்று நமக்காகத் தான் சொல்லுகிறார்கள், நடிப்பது ஆண் பிள்ளைதான் என்றே தோன்றியது. பெண் அழகாகத்தான் இருந்தாள். நல்ல தோற்றம். சாயமும் பவுடரும் போட்டு விட்டு விளக்கொளியில் பார்க்கும் போது ரதி மாதிரிதான் இருந்தது.''

''அக்கா! பார்த்துக்கோ. உன் எதிரிலேயே அத்திம்பேர் வர்ணிக்க ஆரம்பிச்சுட்டார். அது சரி அத்திம்பேரே. ரதியைப் பார்த்திருக்கீங்களா?''

''போடி, கள்ளி!'' என்று கடிந்து கொண்டாள் அக்காள்.

''பொண்ணு பிடிக்கத்தான் இருந்தது. அவ கூட நடிச்சது ஆணா பெண்ணான்னு தெரியாமெ எப்படிச் சொல்வது? மனப் போராட்டத்துடன் திண்டாடினேன். நாடகத்தைக்கூடச் சரியாகப் பார்க்கவில்லை. அதையும் தவிர அந்தப் பெண் காதல் காட்சிகளிலெல்லாம் அளவுக்கு அதிகமாக நெருங்கினாள். தொட்டுத் தொட்டு நடிச்சாள். இன்னும் கல்யாணமாகாத பெண் இப்படியா வெட்கத்தை விட்டு நடிப்பாள் என்ற எண்ணம். பேசாமல் எழுந்திருந்து விட்டேன். என்னை அழைத்துச் சென்றவர் எத்தனையோ சொன்னார். உள்ளே இருந்து யாரோ ஆண் பிள்ளை பேசுகிறார்கள் என்பதை அவரும் சொல்ல வில்லை. 'உடைதான் ஆண் பிள்ளையினுடையது என்றாலும் குரல்கூட ஆண் பிள்ளையினுடையதாகவேப்படி இருக்க முடியும்' என்கிற என் கேள்வி அவரிடமும் வேலை செய்தது போலிருக்கிறது. அவர் என்னை அதிகம் வற்புறுத்தவில்லை. நல்ல வேளை என்று நானும் வண்டி யேறிவிட்டேன். என்ன கதை சரிதானா...?''

''அப்புறம்?''

''அப்புறம் என்ன, உங்க அக்காளுக்கு அதிர்ஷ்டம் அடிச்சது. குரல் இரவல் என்று தெரியாத காலத்தில் அப்படியும் நடந்தது.''

''என்ன அத்திம்பேர்! பாதிக்கதை சொல்றீங்க. அப்புறம் அப் பெண் என்ன ஆனாள்?''


''எனக்கு என்ன தெரியும்? வேணுமின்னா போறப்போ திருச்சியிலே இறங்கி விசாரித்துக்கொண்டு வந்து சொல்றேன்.''

''நீங்க திருச்சியிலே இறங்கிச் சிரமப்பட வேண்டாம். நான் வேண்டுமானால் மறு பாதியைச் சொல்லி விடுகிறேன்'' என்றார் என் பெஞ்சுக்காரர். அவர் இத்தனை நேரம் பேசாமல் இருந்து கேட்டுக் கொண்டு வந்திருக்கிறார். நாங்கள் எல்லோரும் அவரையே வியப்புடன் பார்த்தோம்.

''அடேடே! அந்த மாமா விட்டுப் போன கதையை முடிக்கப் போகிறாரா! பலே! ரயில் பிரயாணம் நல்லதுதான். சொல்லுங்கோ, மாமா!'' கவிதா உற்சாகத்துடன் கதை கேட்கத் தயாரானாள். கவிதா மட்டுமென்ன, நான்கூடத்தான். கதை கேட்பது என்பது எந்த வயதிலும் நன்றாகத்தானே இருக்கிறது. சிறு வயதில் பாட்டி சொன்ன கதையிலிருந்து இன்று எழுத்தாளர் சொல்லும் கதை வரையில் கதை கேட்பது சுவாரசியமான ஒன்று தானே. என் பெஞ்சுக்காரர் சொல்லத் தொடங்கினார்.

''அன்று நாடகத்திலே கமலிதான் கதாநாயகி. காந்தாமணி கதாநாயகன். காந்தாமணிக்குக் கதாநாயகன் வேஷம் கொடுத்திருக்கவே வேண்டாம். அவள் சோம்பேறி. தனக்குக் கொடுத்திருந்த 'போர்ஷனை' நெட்டுருச் செய்யாமல் இருந்து விட்டாள். ஒத்தி

கையின்போது கூடப் பார்த்தே படித்து விட்டிருக்கிறாள். நாடகத்துக்குச் சற்று முன்புதான் அவளுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. அழுதாள், விசித்தாள். தலைமையாசிரியர் காலில் விழுந்தாள். அவர்தான் அந்த நிலையில் என்ன செய்வார்? அவர் சொன்னார்: 'யாரையாவது பின்னாலிருந்து படித்துவிடச் சொல்லுகிறேன்' என்று. 'யாரையாவது படிக்கச் சொல்லுவது என்ன? நானே படிக்கிறேனே' என்று காந்தாமணியின் அண்ணன் முன் வந்தான். அன்றைக்கு அவன்தான் திரைக்குப் பின்னாலிருந்து கொண்டு காந்தாமணியின் 'போர்ஷனைப்' படித்தான். அன்றிலிருந்துதான் குரல் இரவல் என்பது உதயமாகி விட்டதோ என்னவோ ?



பிரபல விளம்பர ஸ்தாபனமாகிய வால்டர் தாம்ஸன் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் திரு எட்வர்டு ஜே. பீல்டன் விளம்பரக் கலைக்குச் செய்துள்ள சேவையைப் பாராட்டி இந்திய விளம்பர சங்கத்தினர் தமது கட்டால் பதக்கத்தை அவருக்கு வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

''பெண்கள் ஆண் உடையில் வருவதையும் தவிர ஆண் குரலாகவும் இருக்கவே நாடகம் பலே ஜோராக நடந்து விட்டது. தலைமை யாசிரியரும் பாராட்டினார். காந்தாமணியின் அளவில் எல்லாம் வெற்றி. ஆனால் கமலிக்குத்தான் கஷ்டம் வந்து விட்டது. அன்றைக்கென அவளைப் பெண்பார்க்க வந்திருக்கிறார் ஒருவர். வந்தவர் நாடகத்திலேயே பார்த்து விட வந்திருக்கிறார். கமலி ஒரு பெண்ணுடன் நடிக்கிறாள் என்பதையே அவர் மறந்து விட்டார். ஆண் பிள்ளையுடன் கூச்சமில்லாமல் நடிக்கும் கமலியைக் கண்டு அவர் மனம் மாறி விட்டார். அவர் என்ன, எவருமே அப்படித்தான் எண்ணுவார்கள். பனை மரத்தின் கீழே இருந்து பால் குடித்தாலும் அது பார்ப்பவர்களுக்கு அப்படித் தோன்றுவதில்லையல்லவா?

''கமலியின் கல்யாணம் நின்று விட்டது. இதைக் கேட்டு விட்டுப் பின்னர் எவர்தான் அவளைப் பார்க்க வருவார்கள்? கமலியின் பெற்றோர்கள் அவளைத் திட்டினார்கள். முதலிலேயே அவர்களுக்குத் தங்கள் பெண் நடிப்பதில் விருப்பமில்லை. கமலியின் தொந்தரவினால்தான் சம்மதித்தார்கள். அப்படியிருக்கும் போது சும்மாவிருப்பார்களா? கமலியைச் சித்திரவதை செய்து விட்டார்கள். பாவம்! அவள் என்ன செய்வாள்? உண்மையறிந்த யாராவது வந்து கமலியை மணந்து கொண்டால்தான் உண்டு என்ற நிலையில்....

''யாருடைய குரலைக் கேட்டுக் காந்தாமணி ஆண் பிள்ளை என்று வந்தவர் பயந்து பின்வாங்கி விட்டாரோ, அந்தக் குரலுக்கு உடையவரே தம் தவற்றுக்காகப் பிராயச்சித்தம் செய்ய முன்வந்தார். காந்தாமணியின் அண்ணன் ரங்கன்தான் வலுவில் சென்று காந்தாவின் மூலம் பெண் கேட்டு வரதட்சிணை கூட இல்லாமல் கல்யாணம் செய்து கொண்டார். இப்போது கமலி தன் கணவனுடன் சந்தோஷமாக ஸ்ரீரங்கத்தில் குடித்தனம் செய்து வருகிறாள்.''

''என்னம்மா, சரிதானா? கதை சரியாக முடிந்து விட்டதா?''

''அடேடே! கதையை அழகாக முடித்து விட்டீர்களே மாமா?''

''கதையா? சரிதான் போ. உங்க அத்திம்பேர் கமலியின் வாழ்விலே முற்பகுதியைச் சொன்னார். அது அவளுடைய வாழ்வின் ஒரு பகுதி. நான் பிற்பகுதியைச் சொன்னேன்.''

''அது சரி, உங்களுக்கு இவ்வளவும் எப்படித் தெரிஞ்சுது? இந்தக் கதையை முன்னாடியே படிச்சிட்டீங்களா?''

''திருப்பியும் கதை என்கிறாயே அம்மா. இந்த மலர் இன்றைக்குத் தானே வந்திருக்கிறது. நான் பார்க்கவில்லை. உண்மைச் சம்பவத்தைச் சொன்னேன். என்ன கதையிலே அப்படியே யிருக்கா?''

''உம். எல்லாம் இருக்கு. ஆனால் நீங்க சொன்னதுக்கெல்லாம் மேலே கடைசியிலே ஒரு ரகசியத்தையும் இதை எழுதினவர் சொல்கிறார். அது உங்களுக்குத் தெரியுமோ?''

என் பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டு அது வரையில் பேசாமலிருந்த பெண், ''ஐயய்யையோ, இன்னும் என்னவெல்லாம் எழுதியிருக்கார்?'' என்றாள்.

''அப்படீன்னா, நீங்கதான் கமலி மாமியா? எங்க அத்திம்பேரை விரட்டத்தான் நீங்கள் இரண்டு பேரும் திட்டமிட்டு நாடகம் நடத்தினீர்களா? இது நியாயமா மாமி? பாவம்! எங்க அத்திம்பேரை ஏமாற்றி விட்டீர்களே? பாருங்கள், அத்திம்பேரே! இவர்கள் இரண்டு பேரும் உங்களை நன்றாக ஏமாற்றி விட்டனர். நீங்களும் ஏமாந்து போனீர்கள்.'' கவிதா நையாண்டி செய்வதாகத் தெரியவில்லை.

''அவர்களிடம் ஏமாறாது போனால் நான் உன் அத்திம்பேராக இருக்க மாட்டேனே?''

''அக்கா. இந்த மாமா நம்ப அத்திம்பேரை ஏமாற்றத்தான் குரல் இரவல் கொடுத்திருக்கிறார். அவரைச் சும்மா விடுகிறதா?'' கண்களைச் சிமிட்டிக் கொண்டே கவிதா கேட்டாள்.



திரு வி.க. மணி மண்டபம்

ஒரு நல்ல காரியம் நடந்த தென்றால் அதற்குக் காரண புருஷராக இருந்தவரைப் பற்றி முதலில் தெரிந்து கொள்வதுதான் முறை. சென்ற சில ஆண்டுகளாகச் சென்னை நகரின் பல பாகங்களிலும் ஓடிந்து விழுகின் ருற்போன்ற தோற்றமுடைய முதிய மனிதர் ஒருவர் திருநீறு துலங்கும் நெற்றி யுடன் கனவேகமாக நடந்து போய்க் கொண் டிருப்பதைப் பலரும் கண்டிருப்பார்கள்.

'மனிதர் ஒடிந்து விழுவது போலிருக்கி ருரே? வயதான காலத்தில் இப்படிக் கால் ஓடிய நடக்கிருரே, ஒரு 'டாக்சி' அல்லது 'ஆட்டோ' பிடித்துக் கொண்டு போகக் கூடாதோ என்று அக்கறை காட்டியவர்கள், பொதுப் பணத்தில் ஒரு நயாபைசாகூட விரய மாகக் கூடாதென்பதில் அவருக்கிருந்த சிரத் தையைக் கண்டு வியந்தார்கள்.

தூங்கிக் கொண்டிருக்கும் அவரை யாரா வது உலுக்கி எழுப்பினுல் கண்களைத் திறக்கும் முன்னரே, ''மண்டபத்தின் சுவர்கள் எழும்பி விட்டன. கூரை போட வேண்டியதுதான் பாக்கி'' என்பார். எங்கேயாவது பொதுக் கூட்டம், விழா நடைபெறுகிறதென்றால், அங்கே மணி மண்டபத்தைப் பற்றி நாலு பேரிடம் பேசுவார் அவர்; முடிந்த இடங் களில் எல்லாம் நன்கொடைகளை நயமாகக் கேட்டுப் பெறுவார். அவர்தான் திரு. வி. கலியாணசுந்தரனுர் அவர்களின் பேரன்புக் குப் பெரிதும் பாத்திரரான திரு சச்சிதானந் தம் பிள்ளை அவர்கள்.

திரு வி. க. மணிமண்டபம் வேறு ஸ்ரீ சச்சிதானந்தம்பிள்ளை என்ற நபர் வேறு என்ற எண்ணம் யாருக்கும் உண்டாகாதவண் ணம் அவ்வளவு தூரம் அந்தப் பணியிலே ஊறிவிட்டார் ஸ்ரீ சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள்.

தமது நினைவும் கனவும் பேச்சும் மூச்சும் திரு வி. க. மணிமண்டபமாகவே ஆக்கிக் கொண்ட ஸ்ரீ சச்சிதானந்தம் பிள்ளையவர்களு டைய நன்முயற்சி வீண்போகவில்லை.

மணிமண்டபம் எழும்பி விட்டது.

திரு வி. க. அவர்களின் அன்புள்ளத்தில் கட்டுண்டு அவரது ஆப்த நண்பர்களாக விளங் கியவர்கள் அநேகர். ஆனுல் சருடனும் ஒரு விருமாய்த் திகழ்ந்தவர்கள் திரு வி. க. அவர் களும், ஸ்ரீ சச்சிதானந்தம்பிள்ளை அவர்களும் தான். ஆத்மார்த்தமான அந்த அன்பு மணி மண்டபத்தை உருவாக்கும் பணியில் அவருக் குத் துணை நின்றிருக்கிறது. பிறகு கேட் பானேன்?

மௌபரேஸ் ரோடு பாலசுப்பிரமணிய பக்தஜன சபை திரு வி. க. அவர்களாலேயே தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்த் தந்தை திரு வி. க. அவர்கள் இச்சபையில் அமர்ந்து நண்பர்களுடன் அளவளாவி யிருக்கிருர்; சமரச சன்மார்க்கத்தைச் சகலருக்கும் எடுத் துச் சொல்லியிருக்கிருர்.

திரு வி. கல்யாணசுந்தரனுர் அவர்களுக்கு மிகவும் உகந்த இச்சபைக்கு அருகிலேயே திரு வி. க. மணி மண்டபம் கம்பீரமாகக் காட்சி தருகிறது.

சென்ற செப்டம்பர் மாதம் இருபத்தோ ராம் தேதியன்று இந்த மணிமண்டபத்தின் திறப்பு விழா நடைபெற்றது. அமைச்சர் திரு பக்தவத்சலம் அவர்கள் மண்டபத்தைத் திறந்து வைத்தார்கள். தமிழ்வேள் திரு பி. டி. ராஜன் விழாவுக்குத் தலைமை தாங்கினர். திரு மு. வரதராசனுர், திரு நா. பார்த்த சாரதி, ஸ்ரீமதி நீலாவதி ராமசுப்பிரமணியம் ஆகியோர் பேசினுர்கள்.

மணிமண்டபக் குழுவின் பொக்கிஷதார் திரு கே. பாலசுப்பிர மணியஅய்யர் அவர்கள் மணி மணியான வார்த்தைகளில் கனிவுடன்று நன்றி தெரிவித்தார். திரு டி. கே. சண்முகத் தின் செல்வன் பாரதியாரின் 'முருகா முருகா' என்ற பாட்டை அழகுறப் பாடினுன்.

முன்னுள் மேயர் திரு கமலக்கண்ணன் அவர்களால் அமைக்கப்பட்டிருக்கும் இம்மண் டபம் இலக்கியச் சொற்பொழிவுகளுக்கும் சமய வகுப்புகளுக்கும் இடம் தருவதுடன் கலி யாண மண்டபமாகவும் பயன்படு மென்று அறிகிருேம்.

தமிழ்த் தந்தை இயற்கையை வழிபட்ட வர். ஆனுல் நாத்திகம் பேசியவரல்லர். துற வறம் தேவையில்லை, இல்லறத்திலும் பண்பு வளர்க்கலாம் எனக் கருதியவர், அதற்காகத் துறவிகளை வெறுத்தவரல்லர்; தமிழ் மொழி இன்றைய உயர் நிலைக்குத் தழைத்து வளர அன்றைக்கே வித்திட்டவர் அவர். ஆனுல் பிற மொழிகளில் பற்றில்லாதவரல்லர்.

''எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு''

என்று வள்ளுவன் வகுத்த இலக்கணத்துக்குத் திரு வி.க. இலக்கியமாய் வாழ்ந்தார்.

அவர் மதம் அன்பு மதம். அன்பு செலுத் துவதையே தமது வாழ்க்கை நெறியாக, தருமமாகக் கொண்ட ஆசார சீலர் அவர்.

போட்டியும், பொறாமையும், சந்தேகப் பேயும், யுத்த பீதியும் சூழ்ந்துள்ள இந்த உலகுக்குத் திருகலியாணசுந்தரனுர் பெயரால் எழும்பியுள்ள மணிமண்டபம் அன்பு மார்க்கத் தைப் பரப்ப ஒரு கருவியாக விளங்கும் என எதிர் பார்ப்போமாக.

''உங்களுக்கு ரொம்ப மறதி உண்டாமே!''

''அதென்னமோ தெரியாது. அதுஞாபகம்இல்லே!''

ஃ

நிருபர் : உங்கள் வயது என்ன ?

நடிகை : இருபத்திரண்டு...

நிருபர் : உங்கள் மகள் வயதைச் சொல்ல முடியுமா ?

நடிகை : இருபத்தி நான்கு.

நிருபர் (வியப்புடன்) : அது எப்படி ?

நடிகை : அவளை நான் சினிமாவில் சேர்க்கப் போகிறதில்லே. அதனால் உண்மை வயசைச் சொல்லி விட்டேன் !

ஃ

மாப்பிள்ளைக்கு மாமனாரிடமிருந்து பார்சல் ஒன்று வந்தது. அதன் மேல் 'வைர மோதிரம்' என்று எழுதியிருந்தது. மாப்பிள்ளை அதைப் பிரிக்காமலே மாமனாருக்குத் திருப்பி அனுப்பினான். அதன் மேல் 'கண்ணுமஜாக்கிரதை' என்று எழுதியிருந்தது.


ஃ

கான்ஸ்டபிள்: டேய்! படே ஆண்டா நீ. போலீஸ் ஸ்டேஷனுக்குப் பக்கத்து வீட்டிலேயே திருடி விட்டாயே!

திருடன்: வேறு எங்கேயானும் திருடி அகப்பட்டு விட்டால் ரோடெல்லாம் இழுத்துக்கிட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வருவீங்க, அவமானமா இருக்கும். பக்கத்திலேயே திருடினால் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் ஜெயிலுக்குப் போய் விடலாம், பாருங்க!

ஃ

ஒரு புத்தகத்தின் முன்னுரை: இந்நூலாசிரியரைப் போல் ஒரு தைரியசாலியை எங்கும் காண முடியாது! அவர் மிகவும் துணிச்சல்காரர் என்பதை இப்புத்தகத்தைப் படிக்கும் போது நீங்களே தெளிவாகத் தெரிந்து கொள்வீர்கள் ! ஏனென்றால் பல புத்தகங்களிலிருந்ததை எடுத்துப் போட்டு அவர் தம்முடைய இலக்கியப் படைப்பு என்று சொல்லி இப்புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார் !



''...பிரபல நடிகை கடைசியில் தான் சொன்னபடியே பழி வாங்கி விட்டாள்!''

''ஐயையோ! என்ன டைரக்டரையா? அல்லது எந்தப் பட முதலாளியை...?''

''அவர்களையல்ல. தனக்கு வரி போட்ட அந்த வருமான வரி அதிகாரியையே கல்யாணம் செய்து கொண்டு விட்டாள்...!''

ஃ

கதாசிரியர் பட முதலாளியிடம்: நம்ம படத்தில் எப்படியும் புதுமை யிருக்க வேண்டும் என்றீர்களல்லவா? அதற்காக இப்படி எழுதியிருக்கிறேன். படத்தின் கடைசியில் கதாநாயகியே கதாநாயகனைக் கத்தியால் குத்திக் கொன்று விட்டு வில்லனைத் திருமணம் செய்து கொள்கிறாள். எப்படி?

ஃ

தொழிலாளிகளைக் கஷ்டப்படுத்தும் கட்டட மேஸ்திரி ஒரு தொழிலாளியிடம்: நீ என்னைஆபத்திலிருந்துகாப்பாற்றியதற்கு நான் உனக்கு ஏதேனும் உதவி செய்ய வேண்டும். உனக்கு என்ன வேண்டும்?

தொழிலாளி: நான் உங்களைக் காப்பாற்றியதாக மற்றத் தொழிலாளிகளிடம் சொல்லாமலிருக்க வேண்டும். அதுவே எனக்குப் பெரிய உதவி!

ஃ

''ஊரில் உள்ள ஆஸ்பத்திரிகள் எல்லாவற்றிலும் நான் இருந்தாகி விட்டது?''

''எல்லாவற்றிலுமா?''

''ஆம்! எல்லாவற்றிலும்!''

''பிரசவ ஆஸ்பத்திரியில் கூடவா ?''

''ஆமாம்!''

''ஹஹ்ஹஹா...எப்படி?''

''அங்குதானே நான் பிறந்தேன்...!''

ஃ

மனைவி : இனிமே என்னாலே பொறுக்கமுடியாது. பிறந்தகத்துக்கு ஓடிப் போய் விடுவேன் !


கணவன் : ஐயையோ! அப்படின்னு என்னாலே தனியாக இருக்க முடியாதே !

மனைவி : அப்ப என்ன செய்யப் போகிறீர்கள் ?

கணவன் : நானும் உன் கூட வந்துடறேன் !



மாடல் 0374 :
6 வால்வ் . ஆல்-வேவ் . 4 பாண்ட்
பியானோ - கீ - ஸ்விட்ச்
ஏஸி அல்லது ஏஸி/டிஸி (இரு மாடல்கள்)
யாராக இருந்தாலும் சரி....
உங்களுக்குப் பூரண
திருப்தி அளிப்பது
மர்பி
ரேடியோ
மாடல் 0322 :
6 வால்வ் . ஆல்-வேவ் . 3 பாண்ட்
ஏஸி அல்லது ஏஸி/டிஸி (இரு மாடல்கள்)


மாடல் 266:
7-வால்வ் . ஆல்-வேவ் . 5-பாண்ட்
பியானோ-கீ-ஸ்விட்ச் . ஏஸி
மாடல் 0724:
6-வால்வ்
ஆல்-வேவ்
8-பாண்ட். முழு
பாண்ட்ஸ்ப்ரெட்
ஏஸி அல்லது
ஏஸி/டிஸி
(இருமாடல்கள்)
மற்றும்
மாடல் 0737:
(ட்ரை பாட்டரி)
7-வால்வ்
மாடல் 0726:
7-வால்வ்
ஆல்-வேவ்
8 பாண்ட். முழு
பாண்ட்ஸ்ப்ரெட்
ஏஸி அல்லது
ஏஸி/டிஸி
(இருமாடல்கள்)
மாடல் 0352:
5-வால்வ் . ஆல்-வேவ் . 3 பாண்ட்
ஏஸி அல்லது ஏஸி/டிஸி
(இரு மாடல்கள்)
மாடல் 0752:
5-வால்வ்
ஆல்-வேவ்
3-பாண்ட்
ஏஸி அல்லது
ஏஸி/டிஸி
(இருமாடல்கள்)
மற்றும்
மாடல் 0751:
(ட்ரை பாட்டரி)
5-வால்வ்
மாடல் 0298:
5-வால்வ் . ஆல்-வேவ் . 3-பாண்ட்
ஏஸி/டிஸி
மற்றும்
மாடல் 0299: (ட்ரை பாட்டரி)
4-வால்வ்
murphy radio
delights
the home!

வட்டமேஜை

அமுலாகாத உத்தரவு

சென்ற 1960-ம் ஆண்டு என். ஜி. ஓ.க்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சென்னை சர்க்கார் சம்பள விகிதத்தைத் திருத்தி அமைத்து, ஒரே துறையில் பணி செய்யும் ஒரே யோக்கியதாம்சம் உள்ள அனைவரும் ஊதியத்தில் ஏற்றத் தாழ்வு இல்லாமலும், அவரவர் ஊழிய காலத்துக்கு ஏற்றவாறு சம்பள உயர்வும் கொடுக்கப்படுவர் என அறிவித்தது அனைவரும் அறிந்ததே. ஆனால் மேற்படி சட்டத்தின் பயனை ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களில் பலர் இன்னும் பெறவில்லை.

கீழ்த் தஞ்சை மாவட்டத்தில் பல ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரிடைப் பட்டுவாடா காரணத்தைக் காட்டி 'வெயிட்டேஜ்' கொடுக்காமல் அடிப்படைச் சம்பளமே நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அதனால் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக வேலை பார்த்துச் சர்க்கார் விருது பெற்ற ஆசிரியர்கூட இன்று அடிப்படைச் சம்பளமே பெறுகிறார். ஆனால் கோயமுத்தூர், தென் ஆர்க்காடு முதலிய மாவட்டங்களில் நேரிடைப் பட்டுவாடா ஆசிரியர்களுக்கும் ஊழிய காலத்தை ஒட்டி உயர்வு கொடுக்கப் பட்டுள்ளது. கோயமுத்தூர் மாவட்டத்தில் வேலை பார்த்த ஓர் ஆசிரியர் அண்மையில் தஞ்சை மாவட்டம் சீர்காழிக்கு மாற்றலில் வந்துள்ளார். தற்சமயம் மேற்படி பள்ளியில் அன்னாருக்கு மட்டும் 'வெயிட்டேஜ்' கொடுத்தும் ஏனையோருக்கு வெயிட்டேஜ் இல்லாமலும் சம்பளம் பட்டுவாடா செய்யப்படுகிறது.

சீர்காழி
27—7—61 ஜி. சம்பந்தமூர்த்தி

உதவாக்கரை உதவித் திட்டம்

எங்கள் ஊர் திருச்சி மாவட்டத்தில் காவேரிக் கரையில் நல்ல பாசன வசதியுள்ள ஒரு கிராமம். இங்கு வட்டார அபிவிருத்தி அலுவலகம் ஒன்றும் உள்ளது. அதன் ஆதரவில் பல ரக உத்தியோகஸ்தர்கள் விவசாயிகளுக்குப் பொறுக்கு விதை, உரம், பூச்சிகொல்லி மருந்து இவற்றை வழங்குவதாகச் சொல்லப் படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன் இந்த உதவிகள் அளிக்கப்பட்டதும் உண்டு. ஆனால் இவ்வருஷம் மேலிடத்து உத்தரவுப்படி விதை விநியோகம் நிறுத்தப்பட்டு விட்டது என்று அலுவலாளர்கள் கூறி விட்டார்கள்.

உரிய காலத்தில் நல்ல விதை கிடைக்கும் என்று நம்பிய பல ஏழை விவசாயிகள் தனிப்பட்ட முறையில் ஒன்றுக்கு மூன்று விலையில் விதை வாங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

இதேபோல் பர்மிட் பெற்றவர்களுக்கும் கடந்த இரண்டாண்டுகளாகக் கால் மூட்டை அமோனியா உப்புக் கிடைப்பது கூட குதிரைக் கொம்பாகி விட்டது. நாற்று விடவும், நடவுக்கும் நவீன விஞ்ஞான முறையில் யோசனை கிடைப்பதும் சிரமமாகி வருகிறது. வட்டார அபிவிருத்தி அலுவலகம் உள்ள இடத்திலேயே விவசாய உதவி இந்த இலட்சணத்தில் இருக்கிறதென்றால் மற்ற இடங்களில் கேட்கவும் வேண்டுமா?

தொட்டியம்
1—9—61 எஸ். சீனிவாசன்

ஏன் இந்த அலட்சியம்?

ஏழை விவசாயிகள் தங்கள் வாழ்வைக் கொடுத்து ஆற்றும் உழைப்பு எல்லாம் கழனிகளிலே உள்ளது; எங்கள் வட்டாரத்தில் அந்த உழைப்பு அவ்வளவும் இவ்வாண்டு அரசாங்கத்தின் கவனக்குறைவினால் பாழாகி விட்டது.

தமிழகத்தின் சில பகுதிகளைத்தான் இயற்கை பாழ்படுத்தியது. இயற்கையின் கண்ணில் படாத சில பகுதிகளையோ அரசாங்கம் பாழ்படுத்தி விட்டது.

எங்கள் பகுதிகளில் குறுவை நட்ட நடவுகள் யாவும் ஆகஸ்ட் வரை பல நாட்களாகத் தண்ணீர் இல்லாமல் வாடி வதங்கி விட்டன. இப்போது பாதி மகசூல் கூடக் கிடைக்காத நிலையில் உள்ளன. சம்பா நடுவதற்காக உழுது சேராக்கிய வயல்கள் வெடித்துப் பாழாகிவிட்டன. சம்பா நாற்றுகள் காய்ந்து கருகி விட்டன. இந்நிலையை உணர்த்த அரசாங்கத்துக்குத் தந்திகள் அனுப்பி வைத்தும் அரசாங்கம் நீர் வழங்க ஏதும் ஏற்பாடு செய்யவில்லை. அவசியத்தையும் அவசரத்தையும் அறியாது அரசாங்கம் கோடி கோடியாக விவசாய அபிவிருத்திக்குச் செலவு செய்தாலும் அதில் என்ன பயன் கிடைக்கும்?

மாயூரம்
14-8-61 வெ. ராமசாமி

அரசாங்கத் தேர்வுக்கு அநுமதி

இன்றைய நமது மாநிலக் கல்விச் சட்டப்படி, ஆசிரியர்களைத் தவிர, கல்லூரிகளில் சேர்ந்து படிக்காத ஏனையோர் உயர்நிலைப் பள்ளித்தரத்துக்கு மேற்பட்ட அரசாங்கத் தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுவதில்லை.

கற்க வேண்டிய ஆவலும், திறனும் உள்ள சிலர் வாணிபத்திலோ மற்ற அலுவல்களிலோ ஈடுபட்டிருப்பதால், கல்லூரி செல்ல முடியவில்லை. பொருளாதார வசதியின்மையால் சிலர் கல்லூரியில் சேர்ந்து கல்வி பெற முடியவில்லை. மேற்படிப்பின் ஆவலுக்கு அணையிட்டுவிட்டு ஏதாவதோர் அலுவலில் அமரலாமென்றாலோ, அவர்கள் படித்த அளவுக்கு வேலை கிடைப்பது அரிதாயிருக்கிறது.

ஆகையால் சில மேலைநாடுகளின் கல்விச் சட்டத்திலிருப்பதைப் போல, கல்லூரிகளில் சேர்ந்து படிக்காமல் தனிப்பட்ட முறையில் படிப்பவர்களும் அரசாங்கத் தேர்வுகளில் கலந்துகொள்ள வசதியளிக்கும் ஒரு சட்டத்தை நமது மாநிலமும் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும்.

காட்டுராசன்கோட்டை சீத. சிங்காரம்
12—8—61 கூ. வெ. அனந்தபத்மநாபன்

வடமொழி வினுத்தாள்

பள்ளி இறுதி வகுப்புத் தேர்வுகளில் சமஸ்கிருத வினுத்தாள் ஆங்கிலத்தில் கொடுக்கப்படுகிறது. மனப்பாடப் பகுதியில், கருத்தை ஆங்கிலத்தில் அளித்து மூலத்தை எழுதச் சொல்வதாலும், மொழிபெயர்ப்பிலும் ஆங்கில வாசகங்களை வடமொழியில் ஆக்கச் சொல்வதாலும், வடமொழியில் நல்ல தேர்ச்சியுள்ள மாணவர்களும் கூட ஆங்கிலம் புரியாத காரணத்தினுல் சரியாக விடையளிக்க முடியாத துரதிருஷ்ட நிலை ஏற்படுகிறது. இந்தக் குறையை நீக்கித் தமிழிலேயே வினுத்தாளை அமைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இம்மொழிப் பயிற்சிக்கான பாடத்திட்டத்தில், சங்கரர், ராமானுஜர் போன்றோரின் வரலாறும், மகா கவிகளைப் பற்றிய குறிப்பும், நூல் நயங்களின் சிறிய பகுதியும் சேர்ந்திருப்பின் மாணவர்கள் ஊக்கத்துடன் இம் மொழியைப் பயில வகை செய்யும்.

நெய்வேலி
28—8—61

பண்டிட் சௌரிராஜன்

நாகரிலிபியும் தமிழும்

'நாகரி லிபியும் தமிழும்' என்ற தலையங்கத்தைப் பாராட்டுகிறேன்.

தென்னகமெங்கும் சம்ஸ்கிருதம் கிரந்த வரிவடிவில்தான் எழுதப்பட்டு வந்தது. அதுமட்டுமன்று; தெலுங்கு, கன்னட, மலையாள எழுத்துக்களின் வரிவடிவங்களும் அந்தக் கிரந்த எழுத்துக்களின் வரி வடிவங்களிலிருந்து தான் தோன்றி வளர்ந்தன.

கிரந்த எழுத்துக்களின் மேல் குறுங்கோணக் குறிகளிட்டவையே தெலுங்கு; விரிகோணக் குறிகளிட்டவை கன்னடம்; மேற்கோணக் குறிகளில்லாமல் மூலை வளைக்கப்பட்டவை மலையாளம்.

சேலம்
26—8—61

நமச்சிவாயம்

பர்மிட் அலங்கோலம்

தங்கள் பத்திரிகையில் அடிக்கடி தாங்கள் "பர்மிட் முறை ஒழிக" என்று எழுதும்பொழுதெல்லாம் நான் அநேகமாக அதை ஒத்துக்கொள்ளாத நிலையில் இருந்தேன். ஆனுல் சமீபத்தில் எனக்கு ஏற்பட்ட ஓர் அனுபவம் தங்கள் கொள்கை நூற்றுக்கு நூறு சரி என்று என்னை ஒப்புக்கொள்ள வைத்து விட்டது.

எங்கள் வீட்டுத் தளம் ரிப்பேர் செய்வதற்காக சிமெண்ட் தேவைப்பட்டது. வியாபாரி தாசில்தாரின் பர்மிட் தேவை என்றூர். தாசில்தார் கர்ணத்தின் சிபாரிசு தேவை என்றூர். கர்ணம் பஞ்சாயத்து போர்டு லைசென்ஸ் தேவை என்றூர். பஞ்சாயத்தார், தளம்போடுவது போன்ற ரிப்பேர்களுக்கு லைசென்சு தேவையில்லை என்றதன் பேரில் கர்ணம் ஒரு சிபாரிசுக் கடிதம் கொடுத்தார். அதனுடன் ஒரு விண்ணப்பத்தையும் எழுதி டிபுடி தாசில்தாரிடம் அளித்தேன். அவர், "உங்கள் வியாபாரிக்குச் சரக்கு வந்ததும் வாருங்கள்" என்று கூறினூர்.

இன்றுடன் இருபது நாட்கள் ஆகின்றன. ஐந்து முறை பஸ் செலவு செய்து கொண்டு டிபுடி தாசில்தாரின் அலுவலகம் சென்றும், வேலை கெட்டதைத் தவிர பயனில்லை. இம்மாதிரியே மாதக்கணக்காக நடப்பவர்கள் அநேகர்.

மீறிக் கேட்டால் "சிமெண்ட் தேவை யாரும் வரத்தான் வேண்டும்" என்கிறூர்கள். இதனுல் கட்டுமான வேலைகளை முடிக்க நினைத்தவர்கள், மழைப் பருவம் ஆரம்பித்து விட்டதால் பலத்த அவதிக்குள்ளாகியிருக்கிறூர்கள்.

புளியம்பேட்டை ஈரோடு
21—9—61

"கிருஷ்ணு"

தொழிற்சாலையில் தேக்கம்

வட ஆர்க்காடு மாவட்டம் விண்ணமங்கலத்தில் சென்னை அரசினர், மைசூர் அரசினர், இந்திய சர்க்கார் ஆகிய மூவரும் சேர்ந்து சுமார் பதினுறு லட்சம் ரூபாய் செலவில் உரோமம் பதனிடும் தொழிற்சாலை ஒன்றைச் சுமார் ஒன்பது மாதங்களுக்கு முன் கோலாகலத்துடன் ஆரம்பித்து வைத்தனர். ஆரம்பித்த நாள் முதல் இன்று வரையில் சுமார் லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒன்றரை லட்சம் பவுண்டு எடையுள்ள ஆட்டு உரோமம் பருத்தித் தொழிற்சாலையில் தேக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது. காரணம் உரோமமாக வாங்குவோரும் இல்லை; கேட்பாரும் இல்லை.

தொழில் நிலையம் ஆரம்பித்ததிலிருந்து ஒரு பவுண்டும் விற்பனை இல்லை. தொழிற்சாலையின் நிர்வாகச் செலவோ மாதம் ஓராயிரத்துக்கு மேலாகிறது. கணக்குப் பார்த்தீர்களா, பணம் பாழாகும் விதத்தை? மேற்படி தொழிற்சாலை ஆரம்பமானதும், அதில் பதப்படுத்திய உரோமத்தை நூலாகத் திரிக்கவும், திரித்த நூலைக் கம்பளமாக நெய்யவும் இயந்திரம் நிறுவியிருந்தால் உரோமத் தேக்கம் இருந்திராது; வீண் செலவும் இருந்திராது. எனவே இந்த உரோமத் தொழிற்சாலையில் உடனடியாகக் கம்பளம் நெய்யத் தறிகளும் உரோமத்தை நூற்கும் இயந்திரமும் நிறுவ அரசாங்கம் முன்வர வேண்டும்.

வாணியம்பாடி
20—9—61

வி. என். நாத்தப்பன்

செப்டம்பர் 24-ந் தேதி இதழில் மனோகரின் "சாணக்கிய சபதம்" நாடகத்தைப் பற்றிய குறிப்பில் விஷக்கன்னி மாலா என்னும் பாத்திரம் கல்கி அவர்களின் கருத்திலிருந்து கையாடப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. விஷ கன்னிகை என்ற பாத்திரம் சுமார் 1300 ஆண்டுகட்கு முன்னுல் விசாகதத்தன் ஸம்ஸ்கிருதத்தில் எழுதிய முத்ரா ராக்ஷஸ நாடகத்தில் வந்திருக்கிறது. உண்மையில் அந்நாடகத்தில் வரும் முக்கிய துணைப் பாத்திரங்களில் இதுவும் ஒன்று.

21-9-61
மதராஸ்-4

தி. ஜானகிராமன்

நடீர் பூஜா

(சம்ஸ்கிருத நாடகம்)

காந்தன்

நம் தினசரி வாழ்க்கையில் நடக்கும் சாதாரண நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டு தயாரிக்கப்படும் சமூக நாடகங்களைத்தான் நாம் அதிகமாகப் பார்க்க முடிகிறது. சரித்திர நாடகங்களை அருமையாகத்தான் காண முடிகிறது. அதிலும் சரித்திர உண்மைகளை அப்படியே வைத்துக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகம் அருமையிலும் அருமை.

அமரகவி தாகூர் வங்க மொழியில் இயற்றிய ''நடீர் பூஜா'' என்ற சரித்திர சம்பந்தம் கொண்ட இந்த நாடகம் சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பட்டுச் சென்ற மாதம் தாகூர் நூற்றாண்டு விழாக் கமிட்டியின் ஆதரவில் சென்னை மியூஸியம் தியேட்டரில் நடத்தப்பட்டது.

சென்னை சர்வகலாசாலையின் சம்ஸ்கிருதத் துறைத் தலைவரான டாக்டர் வே. ராகவன் அவர்கள் மேற்படி நாடகத்தைச் சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்த்து, டைரக்ஷன்பொறுப்பையும் ஏற்று நடத்தி வைத்தார்.

சம்ஸ்கிருத நாடகம் என்றதும் எனக்குக் கொஞ்சம் அசுவாரஸ்யமாகத் தான் இருந்தது. ஆனால் நாடகத்தைப் பார்க்க ஆரம்பித்ததும் நான் என்னையே மறந்து விட்டேன். புத்த பிக்ஷுக்களைத்தவிர ஆண்வாடையே இல்லாத நாடகம் இது. ஆயினும் சுவை குன்றவில்லையே!

பிறவா யாக்கைப் புண்ணியமூர்த்தியான பகவான் புத்தரின் அருளாட்சியை விளக்கும் சிறந்த நாடகம் ''நடீர் பூஜா''. ராஜா பிம்பிசாரன் போதிசத்துவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அன்பு நெறியைக் கடைப் பிடிக்கத் தொடங்கிய காலத்துக் கதை. ஆனால் இளவரசன் அஜாத சத்துரு, புத்தபகவானின் விரோதியான தேவ தத்தனை ஆதரித்து, புத்த பிக்ஷுக்களுக்கு இடுக்கண் விளைவிக்கலானன். அரண்மனை நடன நங்கையான ஸ்ரீமதி, புத்தரின் பாத சேவையில் ஈடுபட்டு, பிக்ஷு ஒருவரின் உபதேசத்தினால் பதிதர்களின் பாவங்களைப் போக்குவதே புத்த பகவானின் மகிமை என்பதை உணர்கிறாள்; பகவானின் பாத சேவைக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு கடும் எதிர்ப்பையும் பொருட் படுத்தாமல் தன் ஆடலையே அப்புனித மூர்த்திக்கு வழிபாடாகச் செலுத்துகிருள். ஆபரணங்களையும், அரண்மனை வாழ்வையும் துறந்து துவர் ஆடை அணிந்து புத்த பகவானைத் தியானித்த வண்ணம் உயிர்த் தியாகமும் புரிகிருள். அந்தத் தியாகத்தின் மாண்பினால் ராணி லோகேசுவரி போன்றவர்களின் சஞ்சலமுற்ற மனமும், எதிர்த்தவர்களின் உள்ளமும் கூடப் பௌத்த தர்மத்தைத் தழுவ முற்படுகின்றன.

ராணி மேரி கல்லூரி மாணவியான குமாரி பிரியம்வதா ராகவன், நடன நங்கை ஸ்ரீமதியாக வந்து அதியற்புதமாக நடித்தார். சொந்தக் குரலில் மதுரமான சம்ஸ்கிருத சுலோகங்களைப் பாடி எல்லோரையும் பரவசப் படுத்தினர்.

ராணி லோகேசுவரியாக வந்த குமாரி மைத்ரேயி, பிக்ஷுணியாக நடித்த சி. எல். வசந்தா, மற்றும் நிர்மலா ராமதாஸ், டி. பி. விஜயலக்ஷ்மி, ஆர். ராதா, கே. பி. சியாமளா, சாந்தா, ரமா, ராமாபாய் எல்லா நடிகைகளும் வானத்தில் மின்னும் விண் மீன்களையொப்ப மேடையில் ஒளி வீசினர்.

மேடையில் தோன்றும் ஒவ்வொருவருடைய நடிப்பும் உணர்ச்சிகளைக் கொட்டும் போது நமக்கு அவர்கள் பேசும் மொழியையா கவனிக்கத் தோன்றும்! அவர்களது தேன் குரலில் வெளிப்படும் வார்த்தைகளுக்குத் தனியான பொருள் தேவையா?

மேடை ஒப்பனைகளும், உடைகளும், ராஜா பிம்பிசாரன் காலத்துப் பாணியில் அமைந்திருந்த படியினால், எல்லாப் பாத்திரங்களும் சம்ஸ்கிருதத்தில் பேசியது பொருத்தமாகவே இருந்தது. நாடக ஆரம்பமே பிராசீன முறையில் சூத்திரதாரன் வந்து கதையைச் சொல்லுகிற மாதிரி அமைக்கப்பட்டிருந்தது. வழக்கில் இல்லாத சம்ஸ்கிருத பாஷையில், கொஞ்சங்கூடத் தடுமாறாமல் நடிகைகள் பேசியது மிக மிகப் பாராட்டுக்குரியதாகும்.

இந்த அரிய நாடகத்தை நடத்திக் கொடுத்த சமஸ்கிருத ரங்காவின் நிர்வாகக் குழுவைப் பாராட்டுகிறேன். நாடகத்தில் இன்னிசை அமுதைப் பொழிந்த வித்வான் பி. கிருஷ்ணமூர்த்தி, சங்கீத பூஷணம் எஸ். ராமநாதன் (வீணை), பி. விசுவநாத ராவ் (புல்லாங்குழல்) ஆகியவர்களையும் பாராட்டுகிறேன். சமஸ்கிருத ரங்காவின் தலைவரும், நாடக டைரக்டருமான டாக்டர் வே. ராகவன் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.




நான் எதிர்பார்க்கிறேன்
... எனக்கு அடுத்த தடவை க்ளாக்ஸோ புகட்டுவதைத்தான். எல்லாக்
குழந்தைகளும் க்ளாக்ஸோவை விரும்பி அருந்தி நன்றாக வளருகின்றன.
ஏனென்றால், க்ளாக்ஸோவிலும், தாய்ப்பாலைப்போலவே, குழந்தைகள்
வலுவாகவும், ஆரோக்கியமாகவும் வளருவதற்கான
எல்லா அம்சங்களும் கலந்துள்ளன.
இலவசமாக க்ளாக்ஸோ குழந்தைப் புத்தகம்
பெற விரும்புவோர், 50 ந. பைசா தபால்
வில்லைகளை (தபால் செலவிற்காக)
கீழ்க்கண்ட விலாசத்திற்கு
அனுப்புங்கள்.
Glaxo
SUNSHINE
Glaxo
க்ளாக்ஸோ-குழந்தைகளுக்கான மிகச் சரியான பாலுணவு.
க்ளாக்ஸோ லாபரட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிட்.,
பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . நியூடெல்லி.

வர்ழும் வர்ணனைகள்

5. லா. ச. ராமாமிருதம்

எழுத்தின் பிறப்பு

கனவு ஒழுகும் கண்களுடன் இடையிடையே சிவத்தைத் திரும்பி நோக்கியபடி தன்னைச் சுற்றி விளங்கும் சிருஷ்டியை வியந்தவண்ணம் சக்தி நடந்தாள். அவளை வியந்தவண்ணம் சிவன் அவளைத் தொடர்ந்தான். சக்தியின் சாயல்பட்ட இடமெல்லாம் உணர்வும், உயிரும் பெற்று மலர்ந்தது. செடிகொடிகள்மேல் அவள் பார்வை சென்றதும், இலைகள் ஆடின. பூக்கள் கட்டின. அவள் கண்கள் வியப்புடன் வானேக்கியதும் வர்ணங்கள் பிறந்து வான வில் அமைந்தது. தென்றல் அவள் கன்னத்தை வருடியது. அவள் கனத்தைத் தரை தாங்கியதும் அதன் கடினம் குழைந்து அடிகள் புதைந்த இடத்தில் ரேகை படிந்த சுவடுகள் எழும்பின. இம்மாதிரி நடை பழகிய பின்னர் சக்தி ஒரு தென்னை மரத்தடியில் அதன் கீழே அதன் மட்டைகள் பளபளக்கத் தொட்டுக் கொண்டு தண்ணீர் அடிமணல் பளபளக்க ஓடும் ஓர் ஓடையருகில் களைப்புற்றவள் போல் சாய்ந்தாள். அவள் அருகில் சிவன் காணு ததைக் காணும் பரவச பயத்துடன் பதுங்கினன். அவள் அழகைப் பருகப் பருக அவனுள் அடைபட்டுத் திணறும் அன்பு வெள்ளம் புரண்டு, பொங்கி மடையுடைந்து உள்ள எழுச்சி வேகம் மீறி வாய்வழி வெளிப்பட்டது. உலகத்தின் முதல் ஒலி பிறந்தது. உணர்ச்சியின் உருவே ஒலியாகும். அன்பே சிவம்.

காலம் நிலைத்தது

காலம் காலமாய்க் கற்பாந்த காலமாய் அவ்விடத்தில் நடமாடியவை காற்றும் மழையும், மண்ணும் மணலுமே. மரமும், செடியும், அவையவை விதை விழுந்த இடத்தில் முளைத்து வளர்ந்து சளைத்து மறுபடியும் இளைத்தன. வானளாவியன வெல்லாம் கூனிக் குறுகிக் குன்றி மறுபடியும் தோன்றின. காற்றுச் சுழல்கையில் அதனுடன் உதிர்ந்த சருகுகள் சுற்றித் தம்



மைத் தாமே துரத்தி அலைந்தன. இரவியும், இரவும் மாறி மாறி வந்து போயும் கற்பாந்த காலமாய்க் காலம் அவ்விடத்தில் வரையே இல்லாது போயிற்று. மனிதனின் அடிச்சுவடு படாமலே கற்பாந்த காலம்.....

அபூர்வ ராகம்

வீணையின்ஸ்வரக்கட்டுக்களை விருதாவாய் நெருடிக் கொண்டிருக்கையில், திடீரென்று ஒரு வேளையின் பொருத்தத்தால் ஸ்வர ஜாதிகள் புதுவிதமாய்க் கூடி ஓர் அபூர்வ ராகம் ஜனிப்பதுபோல் அவள் என் வாழ்க்கையில் முன்னும், பின்னும், இலாது முளைத்தாள்.

நீலம் உடுத்தி இரை தின்ற பாம்பு போல் கனத்துப் பின்னல் முழங்காலுக்கும் கீழே தொங்க, நிமிர்ந்த தலை குனியாது, சமையலறையினின்று வெளிப்பட்டு வந்து. நமஸ்கரித்து மையிட்ட கண்களை மலர விழித்துப் புன்னகை புரிந்து நின்றாள். அவ்வளவுதான்.

அவள்தான் நான் கண்ட அபூர்வ ராகம். சில விஷயங்கள் நடந்து விடுகின்றன. கால காரணங்களற்று அவை நேர்ந்ததற்கு, நேர்ந்ததுதான் சாட்சி.

அம்மாதிரி முன்னும் பின்னும் அற்றது எங்கள் சந்திப்பும் - வாழ்வும்.

வளையல்காரன்

அவன் விரல்கள் ஜாலம் நிறைந்த விரல்கள். விரலுக்கு விரல் தனித்தனி உயிர் கொண்டு, வாய் வார்த்தையினும் அர்த்தம் நிறைந்த விரல்கள். மிருதுவாய் நீண்டு நுனி சிறுத்து, நயமும் நுட்பமும் நலுங்கும் விரல்கள். அவன் கை மேல் வளைந்து சுருண்டு பதுங்கிக் கொஞ்சி நெகிழ்த்தி வளையலை வெகு லாகவமாய்ச் செலுத்தின.

இதழ்கள்

உலகம் அவர்களைப் பெரிய பூக் கிண்ணம் போல் ஏந்திற்று. அதன் நடுவில் புயல் அலைக்கும் கோசக் காடுகளின் அடர்ந்த இருளில் இருவரும் வழி தப்பி ஒருவருக்கொருவர் தேடித் துணையாகித் தவித்

தனர். இருளில் மின்னல் கொடிகள் பிறந்து இறங்கி அவன் உடலை ஊடுருவின. தகதகப்பில் நெற்றியும், கண்ணின் மேலிமையின் அடிப்புறமும், தோள்களும் இடையும் தகிதகித்தன. உயிர் மீன் குட்டிபோல் துள்ளித் துள்ளி எழுந்து மீண்டும் உடல் தட்டில் துடித் துத் துடித்து வீழ்கையில் உடல்கள் அதிர்ந்தன. நினைவு கழன்று வெள்ளத் தோடு சென்றது. எப்பொழுது நினைவு மீண்டதோ, தெரியவில்லை. ஆனால் கண்ணிமைகளின் அடியில் நினைவு மலரும் குளிர்ச்சிதான் தெரிந்தது. இமைகள் இதழ்களாய் அவிழ்ந்து திறந்தன. தான் மலர்ந்தாற்போல் தனி மணம், நெஞ்சை ஒழித்துப் பெருக்கி வைத்தாற்போல் ஓர் அமைதி. வானில் நட்சத்திரங்கள் குடலையிலிருந்து பூக்கள் சரிந்தாற்போல் கண் வீச்சுக்கு எட்டியவரை அடர்ந்து வாரி இறைத்திருந்தன. அவற்றின் தண்ணொளி அவன்மேல் அருள் போல் இறங்கிற்று. யாருடைய வருகைக்காக இந்த மோனக் காவல்; இந்த அபரிமித மலர்ச் செறிவு? இதில் தெரியும் தனித் தூய்மை? எவன் வந்து நெஞ்சின் வாயிற் படியில் நின்றால் அப்படி அவன் நின்றதும் அவன் பாதங்களில் இடுவதற்காகப் பத்திரமாய்த் தன்னோடு தன்னற்றதாய் வைத்துக் கொண்டிருக்கும் தன்னர்ப்பணம்.

திருமூலர் தவமொழி

ராஜாஜி - சோமு

26

இறைவனுடைய சர்வ வியாபகத் தன்மையையும் அவனுடைய படைப்புத் தொழிலையும் பாடிப் பரவுகிறார் திருமூலர். எங்கும் நிற்கும் பரம்பொருள் இந்த மனித உடலைப் படைத்து அதனுள் உயிரைச் செலுத்திப் பாதுகாவலும் செய்கிறது. தோற்பையிலே காற்றை அடைத்துப் பிறகு அதைத் திறந்து விடுவது போல் இறைவன் உயிரின் தோற்றமும் மறைவுமாகிய திருவிளையாடலைச் செய்கிறான்! இதைப் பாடுகிறார் முனிவர்.

எட்டுத் திசையும்
அடிக்கின்ற காற்றுஅவன்

எட்டுத் திசைகளிலும் அதாவது எந்தத் திக்கிலேயும் வீசி அடிக்கிற காற்று, இறைவனே! அவனுடைய சொரூபந்தான் காற்று.

வட்டத் திரை,அனல்
மாநிலம் ஆகாசம்

அவனே இந்த உலகை வளைத்துச் சூழ்ந்து நிற்கிற வட்டமான கடல். திரை என்றால் திரைகடல். அனல் அதாவது நெருப்பும், மாநிலமாகிய இந்தப் பூமியும், ஆகாசமும் ஆகிய ஐந்தும் இறைவனே.

ஓட்டி உயிர்நிலை
என்னும்இக் காயப்பை
கட்டி அவிழ்க்கின்ற
கண்ணுதல் காணுமே!

[உயிர் நிலை என்னும் இக் காயப்பை—உயிருக்கு நிலையமாக விளங்குகிற இந்த உடம்பாகிய தோற்பை, ஓட்டி—அந்தத் தோற்பையை ஒன்று சேர்த்து. கட்டி—உயிரை அதற்குள்ளே செலுத்திக் கட்டி ஒரு ஜீவனாக்கி. அவிழ்க்கின்ற—பிறகு அதை அவிழ்த்து விடுகின்ற. கண்ணுதல்—நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமானே. காணுமே—உணர்ந்து கொள்வீராக!]

எட்டுத் திசையும்
அடிக்கின்ற காற்றவன்
வட்டத் திரைஅனல்
மாநிலம் ஆகாசம்
ஓட்டி உயிர்நிலை
என்னும்இக் காயப்பை
கட்டி அவிழ்க்கின்ற
கண்ணுதல் காணுமே!

உலகத்தின் தோற்றமும் இந்த உடம்பின் தோற்றமும், இந்த உடம்புக்குள்ளே உயிர் நிற்பதும், பிறகு பிரிவதும், எல்லாமே ஈசன் திருவிளையாடல் என்பதைப் பாடி, மேலும் சொல்லுகிறார்.

குசவன் திரிகையில்
ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்றது
எல்லாம் வனைவன்

[திரிகை—சக்கரம்.]

குயவன் மண்ணைப் பிசைந்து சக்கரத்திலே ஏற்றி வைத்துச் சுற்றுகிறான். எந்த வடிவத்தில் எத்தன்மையில் பாண்டங்கள் செய்ய எண்ணுகிறானோ, அந்தப் படியெல்லாம் குயவன் வடிவு தந்து ஆக்குகிறான் அல்லவா? இறைவனுடைய படைப்பும் அங்ஙனமே!

குசவனைப் போல்எங்கள்
கோன்நந்தி வேண்டில்

[வேண்டில்—சங்கற்பித்தபடி.]

பாண்டங்களைப் பல உருவங்களிலே பல தன்மைகளிலே ஒரே மண்ணைக் கொண்டு செய்கிற குயவனைப் போல, எம்பெருமானாகிய நந்தி வேண்டில், அதாவது அவனுடைய சங்கற்பத்தின்படி.

அசைவில் உலகம்
அதுஇது ஆமே

[அசைவில்—அசைவில்லாத அதாவது தனக்கென்று சுயமான சக்தியோ உயிரோ இல்லாத உலகம்; ஜடப் பொருள். கோன் நந்தி வேண்டில்—இறைவனுடைய சங்கற்பத்தினால். அது இது ஆமே—நாம் காணும் பல்வகை உயிர்களாகத் தோற்றம் கொண்டு நிற்கிறது. அதாவது பற்பலவான தோற்றங்கள் அனைத்தும் அவனுடைய சங்கற்பம்.]

இறைவன் வேண்டில் என்றால், இறைவன் திருவுள்ளத்திலே கோரிய மாத்திரத்தில் என்று பொருள்.

குசவன் திரிகையில்
ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்ற
தெல்லாம் வனைவன்
குசவனைப் போல்எங்கள்
கோன்நந்தி வேண்டில்
அசைவில் உலகம்
அதுஇது வாமே!



யார் மணமகன்!

இயற்கைக் காட்சிகளுக்கு இணையற்று விளங்கும் திருவனந்தபுரம் மெர்ரிலாண்ட்ஸில் தயாரிக்கப்பட்ட படமாதலால் குன்றுகளுக்கும், வளைந்து செல்லும் மலைப் பாதைகளுக்கும் பஞ்சமில்லை. ஆனால் கதையில் சாரமில்லையே! படத்தைப் பார்த்ததுமே இது ஓடுமா, ஓடாதா என்ற சிந்தனை மனத்தில் ஓட ஆரம்பிக்கிறது. ஆனால் ஓடும் என்ற நம்பிக்கைக்கு இடமில்லை. படத்தில் கண்டிக்கும் படியாக எதுவும் இல்லை என்பது உண்மைதான். ஆனால் மகிழ்ந்து பாராட்டும் படியாகவும் ஒன்றும் இல்லையே!

ஒரே மாதிரி உருவ ஒற்றுமையுடன் இருந்த இரட்டைப் பிள்ளைகளான பாபு, சேகர் என்ற அண்ணன் தம்பிகளின் கதை. இரட்டைப் பிள்ளைகள் இணைபிரியாத நட்புக் கொண்டவர்களா யிருப்பார்களென்று உலக வழக்கில் கேட்டிருக்கிறோம். ஆனால் சினிமா உலகில் இந்த வழக்கு அடியோடு மாறி விடுகிறது. சினிமாப் படங்களில் வரும் இரட்டையர்கள் ஒருவருக்கொருவர் விரோதமான இயல்பு கொண்டவர்களாகத்தான் இருப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்களே! பாபு மூத்தவன், நல்லவன். சேகர் இளையவன், துர்க்குண சிகாமணி. பாபு சேகரைத் திருத்த முயன்று கடைசி வரையில் தோல்வி அடைகிறான். ஆனால், காதலில் வெற்றியடைகிறான். கூனூர் தேயிலை எஸ்டேட் முதலாளியின் மகள் சரோஜா பாபுவைக் காதலிக்கிறாள். சேகர் மட்டும் சும்மா இருந்து விடவில்லை. நளினியைக் காதலிக்கிறான்; அதோடு நின்று விடவில்லை. அவள் வீட்டிலேயே பணத்தைத் திருடி விடுகிறான். சகோதரர்களின் உருவ ஒற்றுமை காரணமாகக் குழப்பங்கள் நிகழ்கின்றன; பாபு சரோஜா கல்யாணம்கூட மேற்படி குழப்பங்களினால் நின்று விடுகிறது. கார் ஓடுகிறது; மோட்டார் சைக்கிள் ஓடுகிறது. ஆனால் படம்....!

படத்தில் நடனம் இருந்தாக வேண்டும் என்று படாதிபதிகள் பிடிவாதமாக இருக்கும் வரையில் நாம் நமக்குப் பிடிக்காவிட்டால் கூடக் கோர நடனங்களைச் சகித்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். ஆள் மாறாட்டத்தை வைத்துக் கொண்டு படத்தில் 'சஸ்பென்ஸ்' வைக்க முயன்று தோல்வியடைந்திருக்கின்றனர். இரட்டைப் பிள்ளைகளை ஆரம்பத்தில் பார்த்ததுமே படத்தின் நிகழ்ச்சிகள் யாவும் தெரிந்து விடுகின்றன.

பாபு, சேகர் இரண்டு பாத்திரங்களையும் டி. கே. பாலசந்திரன் ஏற்று இரட்டை வேடங்களில் வருகிறார். ஆகவே, குடித்து விட்டுக் கூத்தடிக்கவும், கண்ணியமாகக் காதலித்துக் காரில் செல்லவும் கடற்கரையில் காற்று வாங்கவும் அவருக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. ஏதோ ஒருவாறு இரண்டு வேடங்களிலும் நடித்திருக்கிறார். சண்டையும் போடுகிறார். கடைசியில் சரோஜாவைக் கல்யாணமும் செய்து கொள்கிறார்.

கேரள நட்சத்திரமான குமாரி மட்டும் நடிக்கவில்லையென்றால், இந்தப் படத்தில் கவர்ச்சிக்கே இடமில்லாமற் போயிருக்கும். கடற்கரையில் நகையைப் பறிகொடுத்ததிலிருந்து கடைசியில் காதலனின் கரம் பற்றிய வரையில் நன்றாகவே நடித்திருக்கிறார்.


எஸ்டேட் முதலாளியாக வரும் டி. பாலசுப்பிரமணியம், தம் வழக்கமான நடிப்பைக் கைவிடவில்லை.

வி. கே. ராமசாமி வந்து சத்தம் போட்டும், சாயிராம் வக்கீலாக வந்து ஹாஸ்ய வெடிகள் தீர்த்தும், கடற்கரையில் மீனவப் பெண்களும் ஆண்களும் நடனம் ஆடியும், சி.கே. சரஸ்வதி வழக்கம் போல் ஓயாமல் கணவனை மட்டந் தட்டிப் பேசியும், கடல் அலைகள் இடைவிடாது மோதியும், பிரபல பின்னணிப் பாடகர்களான பி. சுசீலா, ஏ. எம். ராஜா முதலியவர்கள் பாடியும் படம் மனத்தில் நிற்கவில்லையே! ஏன், ஏன்!

திரைக்கதை, பாட்டின் மெட்டுக்கள், காட்சிகளின் திருப்பங்கள் எதிலுமே புதுமை இல்லாததுதான் காரணம்.

யார் மணமகன்? அந்தோ, பரிதாபம்!

பிளாஸ்டிக்கின் இந்த அழகிய வீட்டிற்கான சாமான்களை உபயோகித்து



நாகரீகமாகவும் உல்லாசமாகவும் இருங்கள்

சௌகர்யத்திற்கும், நீண்ட நாள் உழைப்பதற்கும்-பிரைட் பிளாஸ்டிக் சாமான்களைப் போல் வேறொன்றும் இல்லை. இவை நவீன இல்லங்களில் எல்லோராலும் உபயோகிக்கப்படும் சிறந்த சாமான்கள். வர்ணமயமான, நீண்ட நாள் உழைக்கக்கூடிய மற்றும் சௌகர்யமான இந்த சாமான்களை நீங்கள் ஒரு முறை உபயோகிக்கத் தொடங்கினால், இவைகளை நீங்கள் எப்பொழுதுமே உபயோகிக்க விரும்புவீர்கள். அழகான வர்ணங்கள், நேர்த்தியான தயாரிப்பு மற்றும் சிறந்த தன்மை முதலானவைகளுக்கு பிரைட் என்ற பெயரைப் பார்த்து வாங்குங்கள்-பிரைட் தான் வேண்டுமென்று கேளுங்கள்.

Brite

பிரைட் பிளாஸ்டிக்ஸ்

பிரைட்டே உங்கள் சரியான தேர்ந்தெடுப்பு


பிரைட் பிரதர்ஸ் பிரைவேட் லிட்., 156-A, தார்தேவ் ரோட், பம்பாய்-7.

BB-6-29 TAM.

புது வெள்ளம்

அத்தியாயம் பத்தொன்பது

உரிமைக் குரல்



குமாரவேலின் குமாரன் செல்வரத்தினமும் தன்னுடைய நண்பன் பெருமாள்சாமியும் வெவ்வேறு திசைகளில் விரைந்து செல்வதைக் கண்ட முருகையன், 'இரண்டு பேரும் இரு வேறு துருவங்கள்' என்று நினைத்துக் கொண்டான். செல்லமாக வளர்ந்த செல்வப் பிள்ளை ஒருவன்; ஏழையாக வளர்ந்த புரட்சிக்காரன் மற்றொருவன். 'இந்தப் பெரியபாளையம் கிராமந்தான் இருவரையுமே உருவாக்கிக் கொண்டிருக்கிறது; இதன் முடிவு என்ன ஆகுமோ?' என்று முருகையன் நெடுமூச்செறிந்தான்.


சாலை வழியே சென்றவன் வயல் வரப்புக்களில் திரும்பி ஒரு களத்து மேட்டில் உட்கார்ந்தான். அந்தக் களத்து மேட்டுக்கப்பால்தான் அவனுடைய பழைய நன்செய்க் காணிகள் இருந்தன. அவற்றைப் பற்றி இப்போது நினைத்துப் பயனில்லை.

பெரியபாளையம் இயற்கை வளத்தில் எப்போதுமே செழிப்புடன்தான் தோற்றமளிக்கும். இப்போதும் அப்படித்தான் இருந்தது. நீர் வளத்தில், நிலவளத்தில், அறுவடையில் அது முதல்தரமான கிராமந்தான். மண்வளத்தில் குறைவில்லை. மன வளத்துக்குத்தான் பஞ்சம் வந்து கொண்டிருந்தது.

''யாரது, சின்னையாவா?...கும்பிடறேனுங்க!'' என்ற குரல் கேட்டுத் திரும்பினான் முருகையன். தலைத் துணியை எடுத்துக் கையில் மடித்துக் கொண்டு, மரியாதையுடன் கும்பிட்டுக் கொண்டு நின்றான் ஒரு வயதான கிழவன். சிவப்பிரகாசத்திடம் உழைத்து வந்த பண்ணையாட்களில் முக்கியமானவன் அவன்.

''என்ன கருப்பையா, அடையாளமே தெரியாமல் மெலிஞ்சு போயிட்டியே? உடம்புக்கு என்ன?'' என்று கவலையோடு கேட்டான் முருகையன்.

கருப்பையாவுக்கு உடனே பதில் சொல்ல நா எழவில்லை. முருகையனையே நன்றாக உற்றுப் பார்த்துவிட்டு, ''நான் உங்களைக் கேட்க வேண்டிய கேள்வியை நீங்க என்னைக் கேக்கிறீங்க'' என்றான். ''வயசுப்பிள்ளையும்வளரவேண்டிய பயிருமாயிருக்கிற நீங்களே வாடிக் கிடக்கிறப்ப, நான் எப்படி இருந்தா என்ன ஐயா? துரும்பாப் போயிட்டீங்களே!''



கருப்பையாவின் குரல் தழுதழுத்தது. பிள்ளைப் பருவத்தில் முருகையனைத் தூக்கி வளர்த்தவன் அவன்.

முருகையன் அவனிடம் சிரித்து மழுப்பி விட்டு, அவனுடைய நலனையும் குடும்ப நலனையும் விசாரித்தான். கருப்பையாவின் தலை கீழே கவிழ்ந்தது.

சற்று நேரம் மௌனமாக இருந்து விட்டு, ''எனக்கு இந்த உலகிலே இருக்கப் பிடிக்கலே, ஐயா! குடும்பத்தைக் கூட்டிக் கிட்டு எங்கேயாவது கண்காணாச் சீமைக் குப் போய்க் கூலி வேலை செய்யலாம்னு பார்க்கிறேன். கண்டிச் சீமைக்கு எங்களை யாராவது கப்பலேத்தி அனுப்பினால் உதவியாயிருக்கும்'' என்றான்.

கருப்பையாவின் சொற்களையும் அவனது குரலில் ஒலித்த கலக்கத்தையும் கேட்டுத் திடுக்கிட்டான் முருகையன். காவேரி மண்ணில் பிறந்தவனா, கண்டிச் சீமைக்குப் போகத் துடிக்கிறான்!


''கருப்பையா! கண்டிச் சீமையும் ரங்கூன் சிங்கப்பூரும் முன்னால் இருந்ததைப் போல் இல்லை. முன்பு நம்மவர்களை ஆசை காட்டிக் கூப்பிட்டவர்களே நம்முடைய உழைப்பால் தங்கள் நாடுகளை வளர்த்துக் கொண்டு, இப்போது வெளியே பிடித்துத் தள்ளப் பார்க்கிறார்கள். நாமும் வெளிநாடுகளுக்கு இனி கூலிகளாய்ப் போகக் கூடாது.''

கண்டிச் சீமை ஆசையும் நிறைவேறாத ஆசை என்று தெரிந்தவுடன் கருப்பையா வானத்தை அண்ணாந்து பார்த்தான். பார்த்துக் கொண்டே பேசினான்: ''ஐயா, பரம்பரை பரம்பரையா உங்க குடும்பத்து உப்பைத் தின்னு வளர்ந்தவங்க நாங்க. மனசிலே விகல்பமில்லாமல் நிலத்திலே பாடுபட்டோம். எங்க வயத்துக்குச் சோறும் இடுப்புக்குத் துணி

யும் நீங்க கொடுத்துக்கிட்டு வந்தீங்க...இந்தக் குமரவேல் ஐயா கிட்டே நிலம் போனபிறகு, நாங்க வயிறாரக் கஞ்சி குடிக்கிறதையே மறந்திட்டோம். எத்தனை நாட்கள்தான் இப்படிக் கண்ணிலே உசிரை வைச்சிக்கிட்டு நாங்க பாடுபட முடியும்? நிலத்திலே எங்களை எருவாப் போட்டு உழுதுக்கிட்டு வர்றாரையா !''

விரைவில் நல்ல காலம் வந்து விடுமென்று அவனுக்கு ஆறுதல் கூறி அனுப்பினான் முருகையன். நாட்டுக்கு விடுதலை கிடைத்தவுடன் நாட்டிலுள்ளவர்கள் எல்லாரும் நல்ல மனிதர்களாக மாறி விடுவார்கள் என்று அவனுக்கொரு நம்பிக்கை பிறந்தது!

வீட்டுக்குத் திரும்பிச் செல்லுவதற்குள் நன்றாக இருட்டி விட்டது. குடியானவத் தெரு மூலையில் உழவர்கள் பலர் கூடியிருப்பதையும் அவர்களுக்கு மத்தியில் நின்றுகொண்டு பெருமாள்



சாமி ஆவேசமாகப் பேசுவதையும் கவனித்தான்முருகையன். தானும் கூட்டத்தில் ஒருவனாக உட்கார்ந்து கொண்டு உற்றுக் கேட்டான்:

பெருமாள்சாமியின் பேச்செல்லாம் குமரவேலைப் பற்றியும், அவருடைய கையாட்களைப் பற்றியுமே இருந்தன. குமரவேல் தம்முடைய பெயரில் மாத்திரமில்லாமல், தம்முடைய ரகசியக் கையாட்கள் சிலருடைய

பெயரில் பங்கீட்டு வியாபாரம் செய்யச் சலுகைகள் பெற்றிருந்தாராம். எப்படி யெல்லாம் அவர் மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவிலும் துணியிலும் கள்ளத்தனம் செய்கிறார் என்பதைஅவன் அச்சமின்றி நெஞ்சுக் குமுறலோடு விளக்கிக் கொண்டிருந்தான். அவருக்குப் பக்க பலமாக நின்ற அதிகாரிகள் சிலரையும் அவன் விட்டு வைக்கவில்லை.

கூட்டம் முடிந்தது. கூடியிருந்த மக்கள் ஆத்திரத்துடன் குமரவேலைத் திட்டிக் கொண்டு தங்கள் வீடுகளுக்குக் கலைந்து சென்றார்கள். பெருமாள்சாமி யிடம் சென்று அவனைத் தனியே அழைத்தான் முருகையன்.

''இப்படிப் பேசுவதால் என்ன பலன், பெருமாள்சாமி?''

''வாய்ப் பந்தல் போடும் வெற்றுப் பேச்சுக் கோமாளியல்ல நான். அடுத்தாற்போல் என்ன செய்கிறேனென்று பார்!'' என்று முழங்கினான்.

''நீ என்ன செய்தாலும் அதை அமைதியோடு செய். ஊர் இரண்டுபட்டு ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டால், நம்மை ஆளும் வெள்ளைக்காரர்களுக்கு எதிரே நாம் ஒன்று திரண்டு நிற்க முடியாது. அதை நீ மறந்து போய்விடாதே!''

''முருகையா! அடிமைத்தனம் என்பது வெள்ளைக்காரனோடு போய்விடும் என்று நினைக்காதே. நம்மில் செல்வம், செல்வாக்கு, அதிகாரம் உள்ளவர்கள், அவை இல்லாதவர்களைச் சுரண்டி வாழ்ந்தால் அதற்குப் பெயரும் அடிமைத்தனந் தான். பஞ்சத்தை உற்பத்தி செய்யும் இந்தக் குமரவேல் போன்றவர்களைக் கொழுக்க வைப்பதற்காகவா நாம் சிறைக்குப் போய் வந்தோம்?''

ஒரு கணம் யோசித்தான் முருகையன். ''காந்தியடிகளுக்கு இவையெல்லாம் நம்மை விட நன்றாகத் தெரியும், பெருமாள்சாமி! முதலில் நாட்டிலுள்ள எல்லாப் பிரிவினரையும் ஒன்றுசேர்த்து விடுதலை பெற்று விட்டால் பிறகு நமக்குள் ஒரு நீதியுள்ள வாழ்க்கை முறையை வகுத்துக் கொள்ளலாம் என்பதுதான் அவர் திட்டம்.''

''அது வரையில் என்றால் இந்த அக்கிரமத்தைப் பொறுக்க முடியாது'' என்றான் பெருமாள்சாமி.

''அப்படியானால் ஒரு காரியம் செய். வீண் கிளர்ச்சியைத் தூண்டி விடாமல் குமரவேலைக் கையும் களவுமாகப்பிடித்து அதிகாரிகளிடம் புகார் செய். நானும் உன்னோடு இதில் ஒத்துழைக்கிறேன்.''

''அகப்பட்டுக் கொள்ளாமல் திருடுவதுதான் இவர்களுடைய தனித்திறமை. அப்படியே அகப்பட்டுக் கொண்டாலும் அநியாயமாகச் சேர்த்த பணத்தில் அரைக்கால் பங்கை வீசியெறிந்து தந்திரமாகத் தப்பித்துக் கொள்ளுவார்கள். நாம்தான் பிறகு அகப்பட்டுக் கொள்ளுவோம்.''

முருகையனுக்குப் பெருமாள்சாமியின் முரட்டுத்தனம் பிடிக்கவில்லையென்றாலும் அவன் கூறிய உண்மைகள் மறுக்க முடியாதவைகளாகத் தோன்றின. குமரவேலின் வளர்ச்சி கடந்த ஐந்தாறு வருடங்களுக்குள் மிகப் பயங்கரமான அளவுக்கு உயர்ந்தது. ஆனால் அதே சமயம் பலரை அவர் பள்ளத்தில் தள்ளி விட்டிருந்தார். சிறிய மிராசுதார்கள் சிலரும், சில்லறை வியாபாரிகள் சிலரும் இருந்த இடமே தெரியவில்லை. நாணயமாகத் தொழில் செய்தவர்கள் நசித்துப் போய் முணுமுணுத்துக் கொண்டிருந்தார்கள்.

மறு நாள் முற்பகலில் நூற்றுக்கணக்கான ஏழைகளைத் திரட்டிக் கொண்டு பெரியபாளையம் தெருக்களில் முழக்க

திரு அழ. வள்ளியப்பா அவர்களின் 'மலரும் உள்ளம்' என்னும் குழந்தைக் கவிதைகளின் இரண்டாம் தொகுதியைக் கல்வி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் சமீபத்தில் வெளியிட்டார். இவ் விழாவில் பங்கு கொண்டவர்களைக் காணலாம்.



தலை அலங்கரிப்புக்குத்

தகுந்த ஹேர் ஆயில்

அடர்த்தியான, பளபளப்பான கருங்கூந்தல் படைத்த ஸ்திரீ நாள் தவறாமல் எண்ணெய் தடவிக் கூந்தல் வாருவது சகஜம். மயிர்க்கால்களுக்குக் கணிசமான எண்ணெய் சேருவதே அவளுடைய கூந்தல் அழகின் ரகசியமாகும். அதனால்தான் மண்டையோட்டுக்கு வளமூட்டத்தக்க எண்ணெயைத் தேர்ந்தெடுப்பதில் அவள் அதிக கவனம் செலுத்துகிறாள்.

டாடாவின் ஹேர் ஆயில்கள் மண்டையோட்டை வளப்படுத்தி, ஆரோக்கியமான, அடர்த்தியான கூந்தல்வளர உதவுகின்றன.

டாடாவின் கோகோனட் மற்றும் கேஸ்டர் ஹேர் ஆயில்கள் நறுமணமூட்டப்பட்டு, மூன்று வித சைஸ்களில் கிடைக்கின்றன.





டாடாவின் ஹேர் ஆயில்கள்

THOY-12-TAM

மிட்டுக் கொண்டு ஊர்வலம் வந்தான் பெருமாள்சாமி. ''உணவுப் பொருளைப் பதுக்காதே, உயர்ந்த விலைக்கு விற்காதே! வஞ்சகம் செய்யாதே, வயிற்றிலடிக்காதே!'' போன்ற கோஷங்கள் கூட்டத்தாரின் அடி வயிறுகளிலிருந்து எழும்பின.

முதலில் கூட்டத்தை ஒதுங்கி நின்று பார்த்துக்கொண்டிருந்தான்முருகையன். அந்தக் கூட்டத்திலிருந்தவர்கள் அனைவருமே அவனைப் போன்றவர்கள் என்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. அவன் படித்த ஏழை; அவர்கள் படிக்காத ஏழைகள். ஒட்டிய வயிறுகளும் குழி விழுந்த கண்களும் பரட்டைத் தலைகளுமே எங்கும் காட்சியளித்தன. கூட்டத்தில் முருகையனின் பழைய பண்ணையாள் கருப்பையாவும் இருந்தான். அவனைக் கண்டவுடன் ஏனோ முருகையனுக்கு உடல் சிலிர்த்தது. தன்னையும் மறந்து கூட்டத்துக்குள் கலந்துகொண்டு நடந்தான். சூழ்ந்தோரின் ஆவேசம் அவனையும் பற்றிக் கொண்டு விட்டது.

குமரவேலின் வீட்டுக்கு முன்பாக வந்தவுடன் கூட்டத்தாரின் ஆத்திரம் எல்லையை மீறியது. பதுக்கப்பட்ட சாமான்கள் அவர் வீட்டிலிருந்தது அனைவருக்கும் தெரியும். பெருமாள்சாமி கூட்டத்தினரைக் கட்டுப்படுத்த வில்லை. வீட்டுக்குள் புகுந்து கலவரம் செய்து விடுவார்கள்போல் தோன்றியது.

வெளியில் பதறிக் கொண்டு ஓடி வந்த குமரவேல், ''அயோக்கியப் பயல்களே! உங்களைஎன்னசெய்கிறேன்,பாருங்கள்!'' என்று கத்தினார்.

அவ்வளவுதான்! அவர் மீது பாயத் துடித்தார்கள் கிராமவாசிகள். முருகையன் ஓடிப் போய் அவருக்கு ஏதும் நேராதிருக்கக் குறுக்கே நின்று கொண்டான். கூட்டத்தினரை அதட்டிக் கட்டுப்படுத்த முயன்றான்.

''அவருக்கு உங்களுடைய உணர்ச்சியைக் காட்டி விட்டீர்கள். இனி நீங்கள் திரும்பிப் போகலாம்!'' என்று கூறினான் முருகையன்.

''முடியாது! சூறையாடுவோம்!'' என்றான் பெருமாள்சாமி.

இந்தச் சமயத்தில் படீரெனக் கதவைத் திறந்து கொண்டு செல்வரத்தினம் வீட்டுக்குள்ளிருந்து வெளியில் வேகமாக ஓடி வந்தான்.

அத்தியாயம் இருபது

மரித்துவிட்ட மனச்சாட்சி

வந்தவர்கள் திரும்பிச் சென்ற பிறகு சிடுசிடுப்போடும் அவமான உணர்ச்சியோடும் வீட்டுக்குள் நுழைந்தார் குமரவேல். அதுவரையில் கூட்டத்தாருக்குப் பயந்து நடுங்கிக் கதவுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த அவர் மனைவி நாகம்மாள் அவரைச் சுட்டு விடுவது போல் பார்த்தாள். படமெடுத்துச் சீறினாள் அவள்.


''அப்பவே சொன்னேனே கேட்டீங்களா?'' என்ற பல்லவியில் தொடங்கி, ''நீங்க செய்யிற வேலை அளவுக்குமீறி மோசமாப்போயிக்கிட்டிருக்கு. ஊர்ச் சனங்கள் பேசுற பேச்சைக் காது கொடுத்துக் கேட்க முடியலே!'' என்றாள். ''எல்லாரும் நம்பளைக் கரிச்சுக் கொட்டறாங்க. ஊர்க்காரங்க வயிறு எரிஞ்சா எப்படி நம்ப இங்கே குடியிருக்க முடியும்? - இப்ப அவுங்க நம்ப வீட்டிலே புகுந்து ரகளை செய்திருந்தால் நம்ப மானம் மரியாதை யெல்லாம் என்ன ஆகிறது ?'' என்று அடுக்கிக் கொண்டு போனாள்.

''மானம் மரியாதையைப் பார்த்தால் நம்ப வாழ முடியாதடீ, வாழ முடியாது!'' என்று திருப்பிக் கத்தினார் குமரவேல். ''மத்தவங்களைப் பற்றி நினைச்சுக் கிட்டிருந்தால் இப்ப எப்படி உனக்கு ஐம்பது பவுனிலே காசு மாலை பண்ணிப் போட முடியும்? எப்படி உம் மவனை இன்ஜினீயர் வேலைக்குப் படிக்க வச்சு, அவனுக்குக் கார் வாங்கிக் கொடுக்க முடியும்? எப்படி நீ மாடி வீட்டிலே மகராசி போலக் குடியிருக்க முடியும்?'' -ஆம், அவர்கள் இப்போது முன்பு சிவப்பிரகாசத்துக்குச் சொந்தமாக இருந்த மாடி வீட்டில்தான் குடியிருந்தார்கள்.


தன் பெட்டிக்குள்ளிருந்த காசு மாலையைப் பற்றிப் பேச்சு வந்தவுடன் பெட்டிப் பாம்பாக அடங்கினாள் நாகம்மாள்.

''என்னமோ பொறாமைக்காரப் பயல்கள்தான் நம்பநல்லாயிருக்கிறது பொறுக்காமல் குலைக்கிறாங்கன்னா, நீ வேறே ஆரம்பிச்சிட்டியே!'' என்று தம்முடைய அறைக்குப் போய் நாற்காலியில் விழுந்தார் குமரவேல்.

நாகம்மாளும் சமையல் அறைக்குப் போனாள். அவளுக்கு மூன்றே மூன்று முக்கியமான பொருள்களின் மேல் ஆசை. தங்கம், பட்டு, வைரம்! இவை



மதராஸ் போர்ட் டிரஸ்டின் அக்கௌண்ட்ஸ் சூபரிண்டெண்ட் திரு சாமிநாதனின் புதல்வி சௌ. ஜயலக்ஷ்மி திரு சந்திரமௌளியை மணம் புரிந்தார்.



புதுதில்லி சார்ட்டர்ட் அக்கௌண்டெண்ட் இன்ஸ்டிட்யூட்டின் காரியதரிசி திரு ஈ.வி. சீனிவாசனின் புதல்வி சௌ. சரோஜா திரு நாராயணனை மணந்தார்.

களைத் தன் வீட்டுக்கு ஒரு மருமகள் வருவதற்குள் எவ்வளவு அதிகமாகப் போட்டு அனுபவிக்க முடியுமோ, அவ்வளவும் போட்டு அனுபவிக்கத் துடித்தாள். செல்வரத்தினத்தைத் தவிர அவர்களுக்கு வேறு குழந்தைகள் இல்லாததாலும், அவனும் படிப்புக்காகப் பல ஆண்டுகள் வீட்டை விட்டுப் பிரிந்திருந்ததாலும், நாகம்மாள் தன்னை அந்த வீட்டுச் செல்லப் பெண் என்றே நினைத்துக் கொண்டிருந்தாள். குமரவேலோ அழுக்கு வேஷ்டியும், கிழிந்த பனியனும், பரட்டைத் தலையும், காசைப் பற்றிய சிந்தனையுமாகத்தான் எப்போது மிருப்பார். கணவன் மனைவி இருவரையும் ஒன்றாகப் பார்ப்பவர்கள் அவரை அவளுடைய வேலையாள் என்றுதான் மதிப்பிட வேண்டும்.

சற்று முன்பு நடந்த நிகழ்ச்சி குமரவேலுக்குத் தாங்க முடியாத எரிச்சலைத் தந்து கொண்டிருந்தது. அதுவரையில் கிராமத்துக் குடியானவர்கள் பலர் அவரைத் தொலைவில் கண்டாலே, விலகி விலகி நின்று கைகூப்பி வாய் புதைப்பார்கள். கூனிக் குறுகி நின்று கூழைக் கும்பிடு போடுவார்கள். கடைக்கு வந்தாலும் ஏதோ தர்மத்துக்குக் கேட்பது போல் பயந்துகொண்டு சாமான்களைக் கேட்பார்கள்.-'அற்பப் புழுக்களைவிடக் கேவலமானவர்களுக்கு இவ்வளவு ஆணவமா? காக்காய்க் கூட்டத்தின் மேல் ஒரு கல்லெடுத்துப் போட்டு அதைக் கதிகலங்க அடித்திருக்க வேண்டும்! போலீஸைக் கூப்பிட்டிருக்க வேண்டும்!'

''மண்ணைத் திங்கிற புழுவை விட மோசமான பயல்கள்!'' என்று தம்மை மறந்து முணுமுணுத்தார் குமரவேல்.


''புழுவாவது மண்ணைத் தின்று வாழ முடிகிறதப்பா!'' என்றான் அவரருகில் வந்து நின்ற செல்வரத்தினம். ''புழுக்கள் பட்டினியால் சாவதில்லை; பசியால் வாடுவதில்லை. மனிதர்களுக்கு மட்டுந்தானப்பா இந்தக் கொடுமை.''

திடுக்கிட்டுத் தம்முடைய மகனைத் திரும்பிப் பார்த்தார் குமரவேல். ஒரு கணம் அவனுடைய முகத்தில் பதித்த விழிகளை அவர் அகற்றவில்லை. அவருடைய பார்வை என்னவோ போலிருந்தது செல்வரத்தினத்துக்கு.


மௌனத்தைக் கலைத்தார் குமரவேல்: ''ரத்தினம்! இத்தனை பேர் வந்து கத்தினார்களே, அது ஒண்ணும் எனக்கு அவமானமாகத் தோணலை. அவன்களோட சேர்ந்துக்கிட்டு, அவன்களுக்கு முன்னாலே நீயே நான் செய்யறது தப்புன்னு சொல்லிக் காட்டினே பார், அதை என்னாலே மறக்க முடியாதுடா, மறக்க முடியாது! பெற்ற தகப்பனை அவமதிக்கிறதுக்குத் தான் உன்னைப் படிக்க வச்சு, ஆளாக்கி, இந்த நிலைமைக்குக் கொண்டுவந்தேனா?''

செல்வரத்தினத்தின் மனத்தில் கரீரென்று முள் குத்தினாற் போலிருந்தது. அவருடையசெயல்களை அவன் ஆதரிக்காவிட்டாலும் அவர் தன் தந்தை என்ற பாசத்தை ஒருபோதும் மறந்ததில்லை.

''இதோ பார்!'' என்று மீண்டும் தொடங்கினார் தகப்பனார். ''நான் ஒண்ணும் தப்புச் செய்யறதா நினைக்கிலே. ஊர் உலகத்திலே நாலு பேர்கள் எதைப் பெரிய அளவிலே செஞ்சுக்கிட்டிருக்காளோ அதைத்தான் நானும் குறைஞ்ச அளவிலே செய்யறேன். நம்ப ஊரு சின்னஞ்சிறு பட்டிக்காடா இருக்கிறதுனாலே, நான் செய்யறதெல்லாம் வெட்டவெளிச்சமா ஊருக்குத் தெரியுது. பெரிய பெரிய ஊரிலே எல்லாம், சாமர்த்தியம் உள்ளவனும் சந்தர்ப்பம் கிடைச்சவனும் இப்ப இதைத்தான் செய்துக்கிட்டிருக்



விஜயவாடா அகில இந்திய ரேடியோ புரோகிராம் எக்ஸிக்யூடிவ் திரு கோவிந்த ராஜுலுவுக்கும் சௌ. பத்மாவதிக்கும் திருமணம் நடைபெற்றது.



நாகப்பட்டினம் திரு வைத்தியநாதய்யர் அவர்களின் புதல்வர் திரு சேதுராமனுக்கும் சௌ. வஸந்தாவுக்கும் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.

கான். நம்ம ஊரிலே உள்ள அஞ்சாறு வியாபாரிகளுந்தான் பங்கீட்டு லைசன்ஸ் வேணும்னு மனு எழுதிப் போட்டாங்க. அவங்களுக்கு உத்தரவு வாங்கறதுக்குத் திறமையில்லே. எனக்குத் திறமை இருந்திச்சு. பார்க்க வேண்டியவனைப் பார்த்துச் சரிக்கட்ட வேண்டியவனைச் சரிக்கட்டி, வெள்ளைக்காரனுடைய யுத்த நிதிக்குப் பணம் கொடுத்து உத்தரவு வாங்கிட்டு வந்திருக்கேன். அதெல்லாம் கணக்கிலே எழுதக்கூடிய செலவா? அதுக்கெல்லாம் சேர்த்துத்தானே லாபம் சம்பாதிக்கணும்?''

''எனக்கென்னவோ இதெல்லாம் கொஞ்சமும் பிடிக்கவில்லே'' என்றான் செல்வரத்தினம்.

தம்முடைய மகன் மிகவும் அபாயகரமான வழியில் போய்க் கொண்டிருப்பதாகவும் அவனை உடனே தடுத்து நிறுத்த வேண்டுமென்றும் முடிவு செய்துகொண்டார் குமரவேல்.

''ரத்தினம்! அந்தக் காலத்திலே நான் பிழைக்கறதுக்கு என்ன கஷ்டப் பட்டிருப்பேன்னு உனக்குத் தெரியாது. இப்ப மாத்திரம் என்ன?....ராத்தூக்கமில்லாமல், பகல் தூக்கமில்லாமல், வேளா வேளைக்குச் சோறு தண்ணியில்லாமல் நான் வேறே யாருக்காக இவ்வளவு பாடுபடறேன்னு நினைக்கிறே? எல்லாம் நீயும் உனக்குப் பிறக்கப் போற பிள்ளை குட்டிகளும் நல்லா இருக்கணும்னுதான்!''

''இனிமே அந்தக் கவலை உங்களுக்கெதுக்கப்பா? என்னைத்தான் படிக்க வச்சு வேலை வாங்கிக் கொடுத்திட்டீங்க. எனக்கு வரப்போற சம்பளமும் குறைந்த சம்பளமில்லே. பின்னாலே உத்தியோக உயர்வும் கிடைக்கும். என் சம்பளத்தைக் கொண்டு என் குடும்பத்தை நான் பார்த்துக்கிறேன்.''

''என்ன சொன்னே?'' என்று தேள் கொட்டியது போல் பதறிக் கொண்டு கேட்டார் குமரவேல். ''உன்னுடைய சம்பளத்தைக் கொண்டு நீ கவனிச்சுக்குவியா? இதுக்குத்தானா உன்னை இந்தப் படிப்புப் படிக்க வச்சேன்? ஒரு தொழிலையும் அதிகாரத்தையும் சேர்த்துக் கொடுக்கக் கூடிய படிப்புடா இது!''

செல்வரத்தினம் ஒன்றும் புரியாமல் விழித்தான். அவன் அந்தக் கல்வியை ஆர்வத்தோடு கற்றுக் கொண்டவன். அதைக் கொண்டு நாட்டுக்குப் பல நன்மைகள் செய்து, அதற்குக் கிடைக்கும் சம்பளத்தால் மதிப்போடு வாழ முடியும் என்றும் நம்பினான்.

''தம்பி! இனிமேல்தான் நீ முக்கியமாகத் தெரிஞ்சுக்க வேண்டிய விஷயமிருக்கு. நான் உன்னை இந்தப் படிப்பு படிக்க வைச்சதுக்குக் காரணம் யார் தெரியுமா? பட்டணத்திலே பொன்னம்மா தங்கச்சி இருக்கே, அதோட புருஷன் நல்லமுத்துதான். அவர் ஏதோ ஒரு சமஸ்தானத்திலே பெரிய இன்ஜினியரா இருந்து, அந்த சமஸ்தானத்திலே கால் பங்கை விலைக்கே வாங்கிட்டார். பிறகு பட்டணத்துக்கு வந்து நாலு பங்களாவும் ரெண்டு காருமா வாழ்ந்துக்கிட்டிருக்கிறார். அவரோட பிள்ளைகள் வேறே இப்ப வாரிக் கொட்டிக்கிட்டிருக்காங்க. - சம்பளத்தை மாத்திரம் வச்சுக்கிட்டு இவ்வளவு சம்பாதிச்சிருக்க முடியாது ரத்தினம்! தர்ம நியாயம் பேசுற உத்தியோகஸ்தர்கள் பலர் இருக்கத்தான் செய்யறாங்க. ஆனால் அவுங்க கடைசிக் காலத்திலே எப்படியிருக்காங்கன்னு பார்த்தா..பாவம்!''

''போதும் அப்பா! இதையெல்லாம் நான் தெரிந்துகொள்ளவே வேண்டாம்'' என்றான் செல்வரத்தினம்.

''பிழைக்கிற வழியைத்தாம்பா முதல்லே தெரிஞ்சுக்கணும். தொழில் திறமையிருந்தாப் பத்தாது; சத்தியத்தைக் கடைப்பிடிக்கணும்னு முடியாது; என் கையிலே அதிகாரமிருந்தா நான் இப்படியா இருப்பேன்? எதுக்கு நான் இவ்வளவும் சொல்றேன்னு, உன்னைக் கொண்டுதான் நம்ப குடும்பம் முன்னுக்கு வரணும். - அந்தப் பட்டணத்துத் தங்கச்சி பொன்னம்மாளுக்குச் சித்திரான்னு ஒரு பொண்ணு இருக்கே உனக்குத் தெரியுமா?''

செல்வரத்தினத்தின் புருவங்கள் நெரிந்தன. சித்திராவை அவன் மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பார்த்தது நினைவுக்கு வந்தது.

''எதற்காக உனக்குக் கார் வாங்கிக் குடுத்திருக்கேன்? நம்ப குடும்பத்தோட வளர்ச்சி அந்தக் குடும்பத்தாரோட கண்ணில் படணும், நீ உத்தியோகம் பார்க்கிற இடத்திலே உன்னோட மேலதிகாரிகள் உன்னை மதிக்கணும், இன்னும் இப்படிப் பல காரியங்களை நீ சாதிக்கணும்கறதுக்குத்தான்.''

குமரவேல் தனக்குப் புத்திமதிகள் சொல்வதாக முதலில் நினைத்த செல்வரத்தினம் பிறகு அவற்றைச் சதியாலோசனைகள் என்று நினைத்துக்கொண்டான். அவருடைய பேச்சுக்களுக்கிடையில் வந்த சித்திராவைப் பற்றிய குறிப்பு மட்டிலும் அவனுக்குப் பிடித்திருந்தது.

மறுகணமே அதையெல்லாம் மறந்துவிட்டு, ''கூட்டம் வந்து விட்டுப் போனதே, அதற்கு என்ன வழி செய்வது?'' என்றான். நல்லவிதமான மனமாற்றத்தையேஅவன் எதிர்பார்த்தான்.

''என்ன செய்யறது?..அந்தப் படிச்ச முட்டாள்கள் ரெண்டு பேரையும் திரும்பவும் ஜெயிலுக்கு அனுப்பறது! பெருமான்சாமிக்குத்தான் ஏழைக் குறும்புன்னு, அந்த முருகையன் பயலுக்குக் கெட்டும் புத்தி வரலியே? அவன் எங்கிட்ட என்ன பாடுபடப் போகிறான், பார்!'' என்றார் குமரவேல்.

''அப்பா!....அப்பா!'' என்று துடித்தான் செல்வரத்தினம். ''அவனுக்கு நீங்க செய்திருக்கிற துரோகம் போதும் அப்பா! இனிமேலும் ஏதாவது செய்திங்க, நான் நல்லாயிருக்க மாட்டேன். கடவுளுக்கே இது அடுக்காது அப்பா! உங்க மகனை அவர் நல்லா வைத்திருக்க மாட்டார்...!''

இதைக் கேட்ட குமரவேலின் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் மின்சாரம் பாய்ந்தது. அதிர்ச்சி தாங்காது நாற்காலியில் குலுங்கி விழுந்தார். என்றும் அவருக்குத் தம்முடைய மகன் கூறியது தவறென்று தோன்றியதே தவிர, தம்முடைய தவறு தெரியவில்லை. அவருடைய மனச்சாட்சி முதலில் மரத்துப் போய்க் கொண்டு வந்தது; பிறகு மரித்தே போய் விட்டது.

செல்வரத்தினத்தை அவர் மீண்டும் ஏறிட்டுப் பார்த்த போது அவன் அங்கில்லை. களத்து மேட்டிலிருந்த முருகையனின் வீட்டை நோக்கி வேகமாக நடந்து கொண்டிருந்தான். (தொடரும்)


நான் பலவீனமடைந்து களைப்புற்று வீட்டு வேலைகள் செய்ய முடியாமல் சிரமப் பட்டேன்.
எங்கள் அடுத்த வீட்டு மாமி தினமும் இரண்டு வேளை போர்ன் வீடா அருந் தவேண்டுமென்று சொன் னாள்.
அவர்களுடைய டாக்டரும் அதையேதான் சொன்னா ராம். நானும் அதைக் கடை பிடித்தேன். சக்தியும் பல மும் பெற்றேன்.
இப்பொழுது உடம்பும் முன் போல நன்றாகிவிட்டது.
எல்லாம் போர்ன்-வீடா தந்த சக்தி.
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURY SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
நான் என் வேலைகளை சக்தியுடன் செய்து வருவதற்குக் காரணம்
Cadbury's
BOURN-VITA
சக்திக்கும் வலிமைக்கும்

அன்பே ஆரமுதே

அத்தியாயம் இருபத்தேழு

வீட்டு வாசலில் காலிங்பெல் பித்தானை அமுக்கிப் பத்து விநாடிகளுக்கெல்லாம் கதவு திறந்தது.

''அடே! நீயா!...இப்ப ஏது வண்டி!'' என்று கைப்பையையும் சின்னப் பெட்டியையும் வாங்கிக் கொண்டு உள்ளே நடந்தாள் சித்தி அவயாம்பாள்.

''இப்பத்தான் எழுந்திண்டியா ?''

''விடியற்காலமே எழுந்தாச்சு. வெந்நீர் கொதிக்கறது. பில்டரிலே விட்டேன். மணியடிக்கறது. யாருது? பால் புட்டியைக் கூட வச்சுட்டுப் போயிட்டானே, பால்காரன்னு நெனச்சிண்டே வந்தேன். நீ நிக்கிறே. இப்ப ஏது ரயில்?''

''விமானத்தில் வந்தேன் சித்தி!''

''விமானத்திலா?'' என்று ஆச்சரியமாகப் பார்த்தாள் சித்தி. ''பெரிய பெட்டி எங்கே? ஹோல்டால் எங்கே?''

''மெட்ராஸிலே இருக்கு.''

''என்ன ஆச்சரியம்டா!'' என்று வியந்தாள் சித்தி.

''என்ன சித்தி?''

''ராத்திரி நீ விமானத்திலே வந்து இறங்கறாப்பல சொப்பனம் கண்டேண்டி. அப்படியே வந்துட்டியே!''

''அப்படியா?''

ஆமாண்டின்னா. நேத்தி சாயங்காலம் கல்லூரித் தலைவர் வந்தார். நீ இன்னும் வரலியான்னு கேட்டார். இல்லியே, பதினஞ்சு நாளாகுமே வரத்துக்கு என்றேன். இந்தமாதிரி உன்னைப் புரொபசராப் போட்டிருக்கு. கங்குலி வேலையை விட்டு விட்டுப் போகிறாள். ருக்மிணியை அந்த வேலைக்குப் பிரமோஷன் பண்ணியாச்சு. அதைத் தெரிவிக்கணுமேன்னார். தபாலுக்கு நேரமாகி விட்டது. எனக்கு உடனே தந்தியாவது கொடுக்கலாமா என்று தோன்றியது. அவர் விலாசத்தை எழுதி வாங்கிண்டு போனார். சம்பளம் எழுநூறு ரூபாய் போட்டிருக்காளாம். எனக்கு உடனேயே சுப்புசாமியை 'டிரங்கால்' பண்ணியாவது சொல்லணும்னு தோன்றியது. ராத்திரியிலே எழுப்புவானேன், காலமேயாவது பண்ணிக்கலாம்னு நினைச்சுண்டே படுத்துக் கொண்டேன். ராத்திரி இரண்டு மணியிருக்கும். நீ விமானத்திலே பறக்கறாப்பல இருந்தது. அப்புறம் முழிச்சிண்டேன். ஏதோ விமான சத்தம் கேட்டது. கொஞ்ச நேரம் கழிச்சு மறுபடியும் படுத்துத் தூங்கிப் போய் விட்டேன்... இப்ப நீ விமானத்திலே தூங்க முடிஞ்சுதோ ?''

''இல்லே சித்தி!''

''ராத்திரி முழுக்கத் தூங்கலியா!''

''முடியலே.''

''சரி பல்லைத் தேய். பாலை அடுப்பிலே வைக்கிறேன்'' என்று எழுந்தாள் சித்தி அவயாம்பாள்.

பல் தேய்க்கப் போன ருக்மிணி குளித்து விட்டு வந்ததைக் கண்டு அவயாம்பாளுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

''என்ன இப்பவே குளியல்?''

''சுப்புசாமி வீட்டிலே குளிக்காமல் படுக்கையை விட்டுக் கூட எழுந்திருக்க முடியாது. காக்கா மாதிரி நாலு மணிக்கு எழுந்து குளித்து விடணும் அவருக்கு. மற்றவர்களும் குளித்து விடணும்.... நல்ல பழக்கம்தானே. உடனே மறந்து விடணுமா அதை!''

''பேஷ்! பேஷ்! சுப்புசாமி அப்படி மாறிப் போயிட்டாரா இப்ப?'' என்று கேட்டாள் சித்தி.

''மாறிப் போயிட்டார்னா? முன்னெல்லாம் இப்படி இல்லையா அவர்?''

''வயசானால் வைதிகம், ஆசாரம் எல்லாம் வர வழக்கம்தானே? அது தான் சொன்னேன்'' என்று குனிந்தவாறே சொல்லிக் கொண்டு பாலில் டிகாக்ஷனை விட்டாள் சித்தி.

ருக்குவுக்கு அவளை உற்றுப் பார்க்கத் தோன்றியது. சாதாரணமாக யாரையும் பற்றி அபிப்பிராயம் சொல்ல மாட்டாள் சித்தி. சொன்னால் அடித்தளத்தில் ஏதாவது நிச்சயமாக இருந்துதான் தீரும். உடனே கிளறினால் ஒன்றும் வராது. இருபத்தைந்து வருஷங்களாக அவளோடு நெருங்கிப் பழகிய அனுபவத்தில் அந்தச் சமயம் பேசாமலிருப்பது தான் உசிதமாகப்பட்டது அவளுக்கு.

நாகம்மாள், சந்திரா - எல்லோரையும் பற்றி விசாரித்தாள் சித்தி. சந்திராவின் படிப்பு, கலியாணம் பற்றியும் விசாரித்தாள். காப்பிக் கடை முடிந்து, ஹாலில் வந்து உட்கார்ந்ததும், ''பெட்டி படுக்கையெல்லாம் ரயிலில் வருகிறதா?'' என்று கேட்டாள்.

''அதெல்லாம் மெட்ராஸிலேயேதான் இருக்கப் போகிறது, சித்தி!''

''அப்படின்னா?''

''நாமதான் அங்கே போகணும்.''

''என்ன சொல்லறே நீ!''

"எனக்கு மெட்ராஸிலே நல்ல வேலையாய்க் கிடைத்து விட்டது."

"கல்லூரியிலேயா?"

"ஆமாம்."

"இதை விடவா நல்ல வேலை?"

"ஆமாம் சித்தி."

"சம்பளம்!"

"இப்ப வாங்குகிற சம்பளம்தான் இருக்கும்."

"இங்கே எழுநூறு ரூபாய் கொடுக்கறேங்கறு. அதை விட்டுட்டு, ஐந்நூறு ரூபாய்க்கு அங்கே போகணுமா? அதுவும் இருக்கும்னுதானே சொல்லறே."

"இங்கே எழுநூறும் அங்கே ஐந்நூறும் ஒன்றுதானே."

"அதுக்காக? இங்கே பேராசிரியர் வேலை. மேலே ஒருத்தர் இல்லை. அதுவும் இல்லாம என்ன பட்டணம் வேண்டிக் கிடக்கு. ஏக நெருக்கடி! குடிக்கறதுக்கு, குளிக்கிறதுக்குத் தண்ணீர் கிடையாது. குழாயைத் திறந்து வச்சுப்பிட்டு, கன்னத்திலே கையை வச்சிண்டு உட்கார்ந்து கிடக்கணும். இங்கே யமுனை ஜலம் குடி குடின்னு ராவில்லை, பகலில்லை-அப்படிக்கொட்றது. இதை விட்டுட்டு என்ன பட்டணமாம் பட்டணம்! ஓர் ஆழாக்கு நல்ல பாலுக்கு வக்கு இல்லையாம் அங்கே! மாட்டை வாசல்லே கொண்டுவந்து கறடா என்னால், செத்த கன்னுக்குட்டியை திலைப்படியிலே போட்டு, விடிஞ்சதும் விடியாததுமா திவ்ய தரிசனம் காண்பிப்பான்."

"செத்த கன்னுக்குட்டியைத்தானே காண்பிக்கிறான்? இங்கே செய்கிற மாதிரி கன்னுக்குட்டியைப் பசு மாட்டுக்கு முன்னாலே, வாசலிலேயே கொன்று பால் கொடுப்பதில்லையே."

"நீ என்ன சொல்லறே?"

"பசுவென்றால் நிஜப் பசுவைச் சொல்லவில்லை. நிஜக் கன்றைச் சொல்லவில்லை நான். விகல்பமாக. [illegible] உழைத்திருப்பான். உயர்வு கொடுக்கிற சமயத்தில் அவனை உதைத்துத் தள்ளி விட்டுத் தங்கை பிள்ளை, மாமா பிள்ளை, மச்சினி பெண் என்று யாரையோ எங்கிருந்தோ கொண்டு வந்து போடுகிறார்களே. அந்தப் பசுவைப் பற்றித் தான் சொல்கிறேன்."

"இது உங்க மெட்ராஸிலே மட்டும் இல்லையா? மாமா, மச்சினி பிள்ளையில்லா விட்டால், வேறு என்னமோ சொல்லி யாரையாவது கொண்டு போடுவான். மனுஷன்னு பொறந்தால் வேண்டியவாளுக்குச் செய்யத் தான் செய்வான் டில்லி என்ன, லண்டன் என்ன...?"

"சித்தி! டில்லியிலே இன்னும் மொகலாய தர்பாரின்



ஆவி குடியிருந்து கொண்டே தானிருக்கிறது என்று எங்கள் பிரின்ஸ்பல் அடிக்கடி சொல்லுவாள். அது சரியா யிருக்கிறது'' என்றாள் ருக்மிணி.

''என்ன?''

''டில்லியிலே முப்பத்தஞ்சு நாற்பது வருஷங்கள் இருந்து இருந்து, இது தர்ம பட்டணம், பாலும் தேனுமாக ஓடுகிற சொர்க்கம் என்று உன்னைச் சொக்குப் பொடி போட்டு வைத்திருக்கிறது பார். உங்க மெட்ராஸ் என்று சொல்லக் கிளம்பி விட்டாயே.''

''ஆமாம் நாற்பது வருஷங்கள் இருந்தாச்சு. இது என் ஊர்தானே. அதிலே என்ன ஆட்சேபம்?''

சித்தியைக் கரைப்பது பெரும்பாடாகத்தான் இருந்தது. அவள் மாதிரியே ஆயிரம் பேர்கள் சொன்னார்கள். அவளுடைய சிநேகிதர்கள், சகபாடிகள் எல்லாம் அவள் யோசனையைக் கேட்டு வியந்து போனார்கள்; அயர்ந்து போனார்கள். டில்லி சமூகத்தில், பெரிய இடத்துச் சமூகப் பெண்மணியான ஸ்ரீமதி அன்னபூரணி திகைத்தே போய் விட்டாள்.

''மெட்ராஸில் போய் எப்படி இருக்க முடியும் உன்னால்? நம் காரியத்தை நாம் பார்க்க விட மாட்டார்களே. ஜன்னலிலிருந்தும், வாசல்படியிலிருந்தும், வேலிக்கப்பாலிருந்தும் உன்னைப் பார்த்துக் கொண்டே யிருப்பார்களே. யார் எப்படிப் போனால் என்ன என்று இருக்க மாட்டார்களே! எனக்கு மெட்ராஸ் என்றால் நெஞ்சு கலங்குகிறது. ஹாரிபிள்'' என்று பெரிய இடத்து மனிதர்கள் தட்டிக் கொடுக்கிற தோரணையில் கழிவிரக்கமாகச் சொரிந்தாள் அன்னபூரணி.

''பார்க்கட்டுமே - எல்லாரும் நம்மைப் பார்க்கிறார்கள் என்றால் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்றாவது நமக்குத் தோன்றுமல்லவா? ஜாக்கிரதை என்ன, நல்லவர்களாக இருக்கக்கூடத் தோன்றும். தப்புக் காரியம் செய்கிறபோது தானே பிறர் கண்ணைக் கண்டு நாம் பயப்படுகிறோம்?''

''ருக்மிணி! நீயா இப்படிப் பேசுகிறாய்? எந்தப் பிசாசு உன்னுள் புகுந்து கொண்டிருக்கிறது!''

''இல்லை அன்னபூரணி! சுற்றியுள்ள ஜனங்கள் எவ்வளவுக்கெவ்வளவு குறைவாகக் கவனிக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு நமக்குச் சபலமும், அசட்டுத் துணிச்சலும் அதிகமாகத் தானே செய்கின்றன? அந்த விகிதம் குறையக்குறைய இந்த விகிதம் அதிகமாகவில்லை? குக்கிராமம், பஞ்சாயத்து டவுன், முனிசிபாலிடி, சென்னப்பட்டணம், பம்பாய்- இப்படி வரிசைப்படுத்திப் பாரேன்.''

அன்னபூரணியின் கண் அகன்றது. ''கலியாண வயசிலே, 'நான் தேர்ந்தெடுத்தாயிற்று என் அகமுடையானை; அவனைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்' என்று அடம் பிடிக்கிறதே பெண்கள், அது மாதிரி யல்லவா பேசுகிறாய். கஞ்சியோ கூழோ சாப்பிட்டுக் கொண்டு அவனோடுதான் வாழ்வேன் என்று நாடகத்திலே பெண்கள் சொல்லுமே அது மாதிரி யல்லவா பேசுகிறாய்'' என்று மாய்ந்து போனாள் அவள்.

ருக்மிணியை அந்த உபமானம் சற்றுத் தூக்கி எறிந்தது. சிரித்து மழுப்பி அவளிடம் விடைபெற்று வந்தாள்.

கல்லூரித் தலைவர் கூட அவளை விடுகிற வழியாயில்லை. ''இந்த வாத்தியார் வேலையை அரசாங்க தூதர் வேலை என்று நான் சொல்லவில்லை. இதற்கு டில்லி காபூல் என்று போக வேண்டியதில்லை தான். ஆனால் பதினைந்து வருடம் பழகின இடத்தை விட்டுச் சொந்த வீட்டை விட்டு யாராவது போவார்களோ? இன்னும் ஐந்து ஆறு வருஷங்கள் பொறுத்துக் கொண்டால், பிரின்ஸிபாலாகவே ஆவதற்கு வாய்ப்பு இருக்கிறதே. நீங்கள் மெட்ராஸ்காரர் என்றே நம்ப முடியவில்லையே. ஊரிலிருந்து வந்து வேரைப் பிடித்தார்களானால் உச்சாணிக் கிளைக்கு ஏறி உட்காருகிற வரையில் ஓய மாட்டார்களே. இதைவிடப் பெரிய ஸ்தானம் கிடைத்தாலும் பரவாயில்லை. கங்குலி மாதிரி உங்களுக்குக் கூட அயல்நாடுகளுக்குப் போக வாய்ப்பு ஏற்படுமே. ஒரு நாட்டை இன்னொரு நாட்டவர்கள் தெரிந்துகொள்ளத் துடிக்கிற காலம் இது! இல்லாவிட்டால் சமாதானம், நல்லெண்ணம் எல்லாம் நாசமாய்ப் போய் விடும் என்று பணத்தைக் கொடுத்து அங்கு போங்கள் என்று உபசாரம் செய்கிறார்கள்! டில்லியில் இருந்தால் நியூயார்க்கும் டோக்கியோவும் கொல்லைத் தலைமாடு மாதிரி. இதை விட்டு விட்டுப் பட்டிக்காட்டு மெட்ராஸுக்குப் போகிறேன் என்கிறீர்களே. என்னைத் தெரியுமோ? நானும் உங்களைப் போல்மத்தியப்பிரதேசத்தில் எங்கேயோ சின்னப் பள்ளிக்கூடத்தில் வாத்தியாராகத் தானிருந்தேன். அப்புறம் சைக்கிள் கடை வைத்தேன். மாமா டில்லியில் வியாபார இலாக்காவில் வேலையாக இருந்தார். இங்கே வந்து விடு என்றார், வந்தேன். நாலுதடவை டெட்ராய்க்கும், பர்மிங்ஹாமுக்கும் போனேன். ஜெர்மனிக்கு இரண்டு தடவை போனேன். நாலு தொழிற்சாலையில் கால் கால் முதலாளியாகி விட்டேன். அது போகிறது. இது என்ன அர்த்தமில்லாத கய




பண்டிகைக்காக பிரத்யேக
பாவாடைகள், பட்டாடைகள்!



வனப்பூட்டும் விதவித வண்ணங்கள்-
எழிலூட்டும் பற்பல மோஸ்தர்கள்-
மற்றும் விசேஷ அமைப்புகளுடன்
கூடிய இதர பட்டாடைகள்

நீங்கள் இன்றும் என்றும் விரும்பி வாங்குவது
"ராதா ஸில்க்" பட்டாடைகளே



ராதா ஸில்க்ஸ்
"தன் பில்டிங்" மவுண்ட் ரோடு, சென்னை-2

ராதா ஸில்க் எம்போரியம்
14, சன்னதி தெரு, மைலாப்பூர், சென்னை-4

R.S.E.-993

பல் சிதைவுகளையும்
வாய் நாற்றத்தையும்
ஈறு உபாதைகளையும் **நிறுத்துங்கள்**

பளிச்சென்று ஒளிவீசும் வெண்மையும்
ஆரோக்கியமுமான பல் வரிசைகளை
அடைய வேண்டுமானால்

போர்ஹான்ஸ்

பற்பசையை உபயோகியுங்கள்



ஈறுகளின் உறுதிக்காக என்றே டாக்டர்
ஆர். ஜே. போர்ஹான்ஸ் கண்டுபிடித்து
அளிக்கும் விசேஷத் துவர்ப்புப் பொருள்
கலந்துள்ள பற்பசை இது ஒன்றுதான்.

Geoffrey Manners & Co. Ltd.

TAM. 3.29

புராணம். எதற்காகச் சொல்ல வந்தேன் என்றால் டில்லி வந்தவர்கள் சுருள் படியில் கால் வைத்தாற்போல் ஏறிக் கொண்டே இருக்க வேண்டும். ஏறாமல், உயராமல் இருக்க முடியாது. திடீரென்று யாராவது அதிலிருந்து கீழே குதிப்பார்களோ! அடிபட்டு மனது இனதெல்லாம் சிராய்த்து ஒடிந்து விடுமே'' என்று அவர் தாம் கண்ட டில்லியின் சொரூபத்தை விசுவரூப தரிசனம் கண்டதுபோல வர்ணித்துக் காட்டினார்.

ஒவ்வோர் எதிர்ப்புக்கும் வியப்புக்கும் பிடிவாதம் இறுகிக் கொண்டேதான் வந்தது. இவ்வளவு பேருடைய நல்லெண்ணத்தையும் அன்பையும் சம்பாதித்துக் கொண்டிருக்கிறோமோ என்று அவருக்கு வியப்பாக இருந்தது.

கடைசியில் ஒரு இனுசாக ருக்மிணியை விடுவிப்பதாக ஒப்புக்கொண்டார் கல்லூரியில் நிர்வாகத் தலைவர். அன்றே இரவோடு இரவாக உட்கார்ந்து கணக்குப் போட்டு அவருக்குச் சேர வேண்டிய சம்பளம், சேமிப்பு எல்லாவற்றையும் தயாராக எடுத்து வைத்து விட்டார். 'மறுநாளே மற்ற ஆசிரியைகள், பிரமுகர்கள், முக்கியமான பெற்றோர்களுக்கெல்லாம் சொல்லி அனுப்பினார். அவளுக்கு ஒரு பிரிவுபசாரமும் நடத்தினார். இருபத்தைந்து வருஷங்கள் டில்லியில் இருந்துவிட்டு ஏன் இவள் போகிறாள் என்று எல்லோருக்குமே பொதுவாக வியப்பாகத்தானிருந்தது. அதாவது அங்கேயே நிலைத்து விட்ட தெற்கத்தியர்களுக்கு. வடக்கத்தியர்கள் எங்கோ கண்காணாத இடத்திலிருந்து வயிற்றுக்கில்லாமல் பிழைக்க வந்த மனுஷ்ய ஆத்மா, ஏதோ கொஞ்சம் சேர்த்துக்கொண்டு மறுபடியும் சொந்த ஊரில் மனுஷியாகத் தலைதூக்கி நிற்கும் ஆசையுடன் போகிறது என்ற ஓர் அனுதாபத்துடன், ''ஐயோ பாவம்— ''ஐயோ பாவம்—பிழைத்துப் போகட்டும்'' என்று பெரிய தன்மையுடன் விடை கொடுத்தார்கள்.

''ருக்மிணி! பதினைந்து வருஷங்களுக்குமேல் ஸர்வீஸ் ஆகியும் உங்களுக்கு இன்னும் வயசாகவில்லை என்று ஒரு சமாதானத்தால் தான் உங்களைப் போக விடுகிறேன். இல்லாவிட்டால் உங்களை இலேசில் விட்டு விடுகிற நிர்வாகி அல்ல நான். கலியாணம் பண்ணிக் கொள்ளாமல் ஒரு தொழிலுக்கு உழைப்பவர்கள் ரொம்ப அரிது. ஆனால் பெண்பிள்ளைகள் தான் இந்தச் சாதனையில் தேர்ந்திருக்கிறார்கள். அதுகூட இப்பொழுது வர வரக் குறைந்து வருகிறது. தவறென்று நான் சொல்லவில்லை. ஒருத்தர், இரண்டு பேர் பிடிவாதமாக இருப்பதைப் பார்த்துப் பிரமித்துப் போயிருக்கிறேன். உங்களைப் பார்த்துக்கூட அப்படித்தான் பிரமிக்கிற வழக்கம். இப்பொழுது போகிறேன் என்று பிடிவாதம் செய்கிறீர்கள். உங்கள் சேவையைப் பெறும் பாக்கியம் பெற்றவர்களுக்கு, மாணவர்களுக்கெல்லாம் என் பொறாமை உரித்தாகுக'' என்று தம் அறையில் அவளுக்கு விடை கொடுத்துப் பாக்கிப் பணத்தை யெல்லாம் 'செக்'காக எழுதி அவளிடம் கொடுத்தார் நிர்வாகத் தலைவர். தம் காரில் அவளை வீட்டில் கொண்டு விட்டார். காப்பியைச் சாப்பிட்டு விட்டு விடைபெற்றுக் கொண்டார்.

அவர் காரில் ஏறிக் கடைசி முறையாக விடைபெற்றுக் கொண்டு செல்லும் பொழுது வாசலில் நின்று கையை உயர்த்தி வழியனுப்பினாள் அவள். 'இத்தனை சொல்லியும் கேட்காமல் போய் விட்டாயே' என்று பொறுமல் தான் அவருடைய புன்னகையின் கீழே தெரிந்தது. வெறும் மரியாதையும் வருத்தமும் வயதானவர்கள் குழந்தைகளின் பிடிவாதத்தைப் பொறுத்துக் கொள்ளும் விரக்தியும் தான் அந்த மலர்ச்சியில் தெரிந்தன.


கார் போனதும் திடீரென்று கால் இற்று விட்டாற் போலிருந்தது அவளுக்கு. அப்படியே வாசல் வராந்தாவில் இருந்த ஸ்டூல் மீது உட்கார்ந்து விட்டாள். கூட்டத்தில் தவறிப் போன குழந்தையைப் போல அச்சம் புகுந்து வயிற்றைக் கிளறியது. அத்தனை கூட்டத்துக்கும் நடுவில் ஒரு தனிமையும் கதியின்மையும் குழந்தையை வாட்டுவது போல் அவளை நடுங்கித் துவள அடித்தன. உட்கார்ந்த இடத்தைவிட்டு நகர முடியாமல் அறைந்து கிடந்தாள்.

சற்று நிதானப்பட்ட பிறகு, ''உனக்கென்ன பைத்தியம் பிடித்திருக்கிறதா?'' என்று குரல் கேட்பது போலிருந்தது.

இந்தத் தனிமையின் அதிர்ச்சி வெகுநேரம் நீடித்தது. புதுடில்லியின் அழகு இப்பொழுது முழுமாற்றுடன் அவள் நெஞ்சில் உரைத்தது.

அன்றிலிருந்து நாலு நாட்கள் புதுடில்லிச் சாலைகளைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தாள் அவள். கோகுலத்துப் பசுக்கள் போல் மதர்த்து ஓங்கிக் கிடந்த நெடுமரங்களையும் அவை பாடிய புள்ளின இசைகளையும் கேட்டுக் கொண்டே நின்றாள், நடந்தாள். வேப்பஞ்சாலை, நாவல் சாலை இந்த இரண்டிலும் அவளுக்குப் பிடிப்பு அதிகம். வாழ்ந்த வீட்டை விற்பவர்கள் விற்ற பிறகு நாலு நாட்கள் இருந்து மனசைக் குழப்பித் தேற்றிக் கொள்ளுவது போல்

இருந்தது அவள் நிலை. டால்கடோரா தோப்பிலும் ஒக்ளா விலும் விடியற் காலையிலேயே சென்று பட்சிகள் பாடிய அமுதத்தைப் பார்த்துச் செவிகளை நிரப்பிக் கொண்டாள். குதுப்மினார் மீதும் ஜந்தர் மந்தர் மீதும் ஏறி விட்டு வந்தாள். மரத் தடியில் பனிக்கட்டி மேல் வைத்து விற்கிற கரும்புத்துண்டு களைச் சேர் சேராக வாங்கிக் கொண்டு வந்து மென்று உமிழ்ந்தாள். உதிக்கும் சூரியனின் கதிர்பட்டு மின்னும் காக்கைச் சிறகையும் அணிலின் முதுகையும் மா—வேம்பின் தளிர்களையும் முருங்கைப் பூக்களையும் பார்த்தவாறு உட்கார்ந் திருந்தாள். வாதரட்சையின் ரத்தப் பூவையும் ஜகரண்டாவின் நீல முடியையும் பார்த்துக் கொண்டே நின்றாள். நாலு நாட்கள் ஆகிவிட்டன. சாமான்களெல்லாம் கட்டி கூட்ஸில் ஏற்றியாகிவிட்டது. மத்தியானச் சாப்பாட்டையும் காப்பியையும் தம் வீட்டில் முடித்துக்கொண்டு அப்படியே ரயில் ஏறிவிடலாம் என்று அழைத்திருந்தார் விஷ்ணு சிவன்.



''உம், லைசென்ஸ் எங்கே? எடுத்து என்னிடம் கொடுங்கள்.''

''தருகிறேன்... ஆனால் அப்புறம் திருப்பி என்னிடமே கொடுத்துவிட வேண்டும். அது என்னுடையதல்ல. வாங்கி வந்தவர்களிடம் ஜாக்கிரதையாகத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்!''

''அதுமட்டுமில்லை. உங்களுக்குப் பிரிவுபசாரம் நாலைந்து இடங்களிலே நடந்தது. எல்லாரும் உருக்கமாகப் பேசினார்கள். ஐயோ போகிறீர்களே என்று கண்ணீர் விட்டார்கள். உங்களுக்கும் இப்படி உடம்போடு வளர்ந்து விட்ட ஊரையும் நண்பர்களையும் பிரிவது மனத்துக்குச் சிரமத்தைக் கொடுத்திருக்கும். அழுதுகூட இருப்பீர்கள். போகிற போதாவது சிரித்த முகத்துடன் போகலாமே என்று கூப்பிட்டேன்'' என்று அழைத்தார் விஷ்ணுசிவன். ருக்மிணி அதைக் கேட்டு வாய் விட்டுச் சிரித்தாள். அப்படி அவள் சிரிப்பது அபூர்வ சம்பவம். ஆனால் விஷ்ணுசிவன் பேசும் போதெல்லாம் யாருமே அப்படித்தான் சிரிப்பார்கள். டில்லியில் பல பேர்கள் ஏதாவது ஜலதோஷமோ ஜுரமோ வந்தால், சிறிது நேரம் விஷ்ணுசிவனைப் பார்த்துப் பேசிவிட்டு வருவது வழக்கம். குப்புற எழுந்து சிரிக்கச் சிரிக்க அடித்துச் சொஸ்தம் பண்ணி அனுப்பி விடுவார் அவர். சிரிக்கச் சிரிக்கப் பேசுவாரே தவிர, அவர் உண்மைதான் பேசுகிற வழக்கம். சங்கீதம், ஓவியம், நடிப்புமூன்றிலுமே தேர்ந்தவர் அவர். தேர்ந்தவர் என்றால் சித்திஅடைந்த அளவுக்குத் தாமே பாடாவிட்டாலும், எழுதா விட்டாலும், நடிக்கா விட்டாலும் அசல் எது போலி எது என்று எளிதில் எடைபோட்டு விடுகிற செவியும் கண்ணும் சுவையும் படைத்தவர். பயப்படாமல் சொல்லவும் சொல்லி விடுவார். தென்னாட்டிலிருந்து டில்லிக்குச் செல்லுகிற பல துறைக் கலைஞர்கள் அந்தத் தமிழர்களின் தேசாபிமானத்தைப் பயன்படுத்திக் கொண்டு அசட்டுச் சாக்காகக் கடை விரித்தால் அவர் மனசு மண்டையில் மண்டையில் போட்டுக் கொள்ளும். 'யார் யாரோ புது ஆட்களுக்கு முன்னாலே எல்லாம் நம் மானத்தைக் கப்பல் ஏற்றுகிறார்களே' என்று விம்மி விம்மிச் சீறுவார். கம்பனும், பாரதியும், தியாகையரும், தீட்சிதரும் பிறந்த மண்ணில் இந்த நெருஞ்சியையும் நாகதாளியையும் எப்படிப் பயிராக்கினார்கள்? அதை இங்கே வேறு வந்து விற்கிறார்களே என்று வெடுக் வெடுக்கென்று சொல்லியும் விடுவார். அதே போல, இந்தியாவின் கழிவிடங்களில் மட்டும் திரிந்து விட்டு இந்தியர்களுக்குக் கலையும் தெரியாது, சுவையும் கிடையாது என்று கூறிப்போகும் வெளிநாட்டு ராசிக்ய இன்ஸ்பெக்டர்களின் எழுத்துக்களைத் திருமறையாக ஓதிக் கொண்டிருக்கும் புருவத் தூக்கிகளையும் இலேசில் விட்டுவிட மாட்டார். ஓட ஓட விரட்டுவார். இதனால் நண்பர்கள் பெருகின அளவுக்கு எதிரிகளும் பெருகி யிருந்தார்கள் அவருக்கு.

அவருடைய பெண்ணுக்கு 'டியூஷன்' சொல்லிக் கொடுக்கப் போனதிலிருந்துதான் ருக்மிணிக்கு அவரோடு பழகும் வாய்ப்புக் கிடைத்தது. இத்தனை நேர்மையும் வெகுளித்தனமும் அவரைத் தனியாளாகவே நிறுத்தியிருப்பதை உணர்ந்தாள் அவள். இவ்வளவு ஹாஸ்யம், நட்பு எல்லாம் இருந்தும் ஏதோ ஒரு தனிமை அவரைச் சுற்றிப் பீரோக்களுக்கு எண்ணெய் கட்டினாற் போல்

பாத்தி கட்டியிருந்ததைக் கண்டு அவனுக்குப் பரிவும் வியப்பும் ஏற்பட்டிருந்தன.

அன்று வேறு யாரையும் அழைக்கவில்லை அவர். ருக்மிணியையும் சித்தியையும் தவிர வெளி விருந்து என்று வந்திருந்தவர் அவர் பெண்ணுக்கு வீணை கற்றுக் கொடுக்கும் வித்துவான் ஒருவர்தான். விஷ்ணுசிவனுக்குச் சாப்பிட ஆள் பஞ்சம் கிடையாது. எப்பொழுதும் நண்பர்கள் அல்லது உறவினர்களின் பிள்ளைகள் யாராவது வேலை தேடும் நிமித்தமாக அவர் வீட்டில் மூன்று மாதங்கள் முகாம் போட்டிருப்பார்கள். வேலை கிடைத்ததும் வெளியேறி விடுவார்கள். அப்படி இரண்டு பையன்கள், இரண்டு பெண்கள், தங்கை ஒருத்தி—எல்லாரும் ருக்மிணிக்கு வழியனுப்பு விருந்தில் கலந்து கொண்டார்கள். சாப்பிட்டானதும், டில்லியிலுள்ள பிரமுகர்கள், பாராளுமன்றத்தார்கள். பத்திரிகையாளர்கள்,—மேதைகள், பக்திமான்கள், தலைவர்கள் இப்படி வகைக்கு நாலு பேர்களாகப் பொறுக்கி, அவர்கள் பேசுவது போல, நடப்பதுபோல, உபதேசம் செய்வது போல, பாடுவது போல, பக்தியில் உருகுவது போலெல்லாம் ஒரு கச்சேரியாகவே நடத்திவிட்டார் விஷ்ணுசிவன். ருக்மிணிக்கு வயிறு வலித்தது. விலா இழுத்துக் கொண்டது. கன்னம் வலித்தது. அப்படிச் சிரித்தாள்.

ரயில் ஏறுகிறவரை சிரிப்பு மூட்டிக் கொண்டே யிருந்தார் அவர். இருநூறு மாணவிகளுக்கு மேல் அவளை மாலை போட்டு வழியனுப்ப ரயிலடியில் நின்று கொண்டிருந்தார்கள். கல்லூரி நிர்வாகி வந்திருந்தார். ஸ்ரீமதி அன்னபூரணியும் வந்திருந்தாள். சாமான்களை முதல் வகுப்பில் ஏற்றி இடத்தில் வைக்க உதவின நாலைந்து குட்டிகள் கீழே இறங்கியதும், 'ம்' என்று பெருமூச்சு விட்டாள் சித்தி.

''என்ன?'' என்று கேட்காமலேயே பார்த்தாள் ருக்மிணி.

''இவ்வளவு குட்டிகளும் கண்ணுலே ஜலம் விடலே. அப்படித் தவிக்கிறது. உசிராயிருக்கா அத்தனை பேரும். எல்லாத்தையும் உதறிவிட்டு, மண்ணைத் தட்டிண்டு கிளம்பறதுன்னு, அது என்ன லட்சணமோ, என்ன சமர்த்தோ....?''

அவள் பேசி முடிப்பதற்குள் கீழே இறங்கி மாணவிகளோடு கலந்து விட்டாள் ருக்மிணி.

வண்டி புறப்பட ஒரு நிமிஷமிருந்தது.

''பாண்டவாதிகளெல்லாம் ஆண்ட ஊரு. சனாதன தர்மம் இன்னும் செழித்துக் கொண்டிருக்கிற ஊரு. வர்ணாசிரம தர்மத்தை அழியாமல் காப்பாற்றிக் கொண்டிருக்கிற ஊரு. பிராம்மண, க்ஷத்திரிய என்ற பழைய படிசஞ்சி திட்டத்தை விட்டு, முதல்தர, இரண்டாந்தர, மூன்றாம்தர, நாலாம் தர' என்று அதிகாரிகளைப் பாகுபாடு பண்ணி, என்னோடு ஒன்று கலந்துவிடாமல், அதே சமயம் காவல்காரன் வேலைக்காரனையும் நாலாந்தர அதிகாரி என்று கௌரவப் படுத்தி, ஜீவதயையும் கெடாமல், வர்ணாசிரமமும் இடிந்துவிடாமல் 'பொது' விதரணையாக ஏற்பாடு பண்ணி விவகாரம் செய்கிற தர்ம க்ஷேத்திரம். அதை விட்டு விட்டுப் போகிறேன் என்கிறீர்கள். நல்லது. யார் போனாலும் வந்தாலும், நாங்கள் எங்கள் தர்மத்தை விடமாட்டோம். சாம்ராஜ்ய பட்டணம். இங்கே தர்மத்துக்கும் வர்ணத்துக்கும் நாசமே வராது'' என்று விஷ்ணுசிவன் டில்லியின் பெருமைகளை எடுத்துரைத்தார். அவரோடு நின்றிருந்த முதல் ஜாதி அதிகாரியும் சிரித்தார். எல்லாரும் சிரித்தார்கள். விஷ்ணுசிவனும் இரண்டாயிரத்தைந்நூறு ரூபாய் சம்பளம் வாங்குகிற முதல் ஜாதி அதிகாரிதான். இன்னொரு முதல் ஜாதி அதிகாரியை வைத்துக் கொண்டு அவர் பேசிய குத்தல் பேச்சு ருக்மிணிக்குப் புரியாமல் இல்லை.

வண்டி ஊதிக்கொண்டு மெதுவாக நகர்ந்தது. (தொடரும்)


மிருதுவாக மணமுடன் இருக்கச் செய்து புத்துணர்ச்சியளிக்கிறது..
Binaca
TALC
குளித்த பின்னர் 'பிஞகா டால்கம்' பயன்படுத்துவதால் ஒருவித இன்பமும், புத்துணர்ச்சியும் கொள்ளச் செய்து பட்டுபோன்ற மேனியை உண்டாக்கும்.
நாள் முழுதும் வியர்வை நாற்றத்தைக் கட்டுப்படுத்தவல்ல 'பிஞகாவின்' மென்மையான மணம் எப்பொழுதும் சூழ, சூழ்ந்து, சூழ்ந்து சுகந்தரும்.
CIBA
பிஞகா
டால்க் டியுடோரண்ட் சேர்ந்துள்ளது

நல்ல சகுனம் நோக்கிச் செல்லடா!

கோமதி சுவாமிநாதன்

(சாரங்கன் தெருவில் பல குடித்தனங்கள் உள்ள ஒரு வீட்டு வாசல். குடித்தனக்காரரில் ஒருவனை சங்கரன் வெளியில் புறப்படத் தயாராக வாசலில் வந்து நிற்கிறான். எதிரே அவனுக்கு அறிமுகமான அப்பன் வருவதைக் கண்டு தலையைச் சொறிந்துகொண்டு உட்காருகிறான்.)

அப்பன்: என்னடா சங்கு? எங்கே கிளம்பிக் கொண்டிருக்கிறாய்?

சங்கரன்: (காதில் போட்டுக் கொள்ளாதவன்போல்)....சே! சே!....மகாமட்டமான தெரு! மனுஷன் நினைச்சா வெளியிலே கிளம்ப முடியாமல் எத்தனை அபசகுனங்கள். ஒரு அபசகுனம் எங்கே போறேன்னு வேறே கேட்டு வைக்கிறது! போகிற காரியம் உருப்பட்டாற்போலத்தான்...

அப்பன்: என்ன முணு முணுக்கிறாய்? எங்கே போறேன்னு பளிச்சுன்னு சொல்லேன்.

சங்கரன்: சொல்றேண்டா! சமுத்திரத்திலே போய் விழலாம்னு போறேன். நீ எதிரே வந்துட்டியோல்லியோ? சமுத்திரத்திலே ஜலம் 'கம்ப்ளீட்'டா வற்றியிருக்கும்...!

அப்பன்: கொஞ்சம் வேகமாக நட! ஒரு வேளை உன்னை மூழ்கடிக்கிற அளவுக்காவது ஜலம் மிஞ்சியிருக்கும்! ஆனால் ஒரு விஷயம். நீ கைமாற்று வாங்கியிருக்கிற இரண்டுரூபாயைக் கொடுத்து விட்டுப் போய்விடு!

சங்கரன்: அப்படிப் போகிறதாக இருந்தால் கொடுத்துத் தொலைத்துவிட்டே போகிறேன். இல்லாத போனால் அடுத்த ஜன்மத்திலே கூட நீ கிரெடிதன் என்று சொல்லிக் கொண்டு வந்து கடன் வசூலிக்கக் கழுத்தை அறுப்பியே?

அப்பன்: சங்கு! இப்போ புரியறது! நான் இந்தத் தெரு வழியாக வந்தது தப்பிதம் என்கிறாய்? உனக்குச் சகுனம் ஆகலே. அதுவும் நல்லதுக்குத்தான் உட்காரு.

[திண்ணையில் உட்காருகிறான்]

சங்கரன்: இந்தா! என்னிடம் வெற்றிலே சீவல் இல்லே. நீ உட்கார்ந்து ஏமாந்து போகாதே!

அப்பன்: நான் தரேண்டா! நீ போடு ஒரு தடவை. உள்ளே போய்க் கொஞ்சம் சுண்ணாம்பு மாத்திரம் எடுத்துக்கொண்டு வா.

சங்கரன்: இந்தத் திண்ணைக்கு வெள்ளை அடிச்சு இரண்டு மாசம்தான் ஆகிறது! சும்மா வெற்றிலையை இரண்டு தேய்ப்பு சுவரில் தேய்த்து மென்று தின்னு.

அப்பன்: அறுந்த விரலுக்குச் சுண்ணாம்பு கொடுக்காத கஞ்சன்னு நீதாண்டா!

சங்கரன்: உன் சமாசாரம் எனக்குத் தெரியாதாடா! உள்ளே போய்ச் சுண்ணாம்பு கொண்டா என்பாய். இரண்டு எட்டுப் போனதும் 'அப்படியே கொஞ்சம் சீவல் இருந்தால் பார்' என்பாய். புகையிலை வரை வந்து கொள்ளையடிக்காமல் போக மாட்டாய். இந்த ஓசி வெற்றிலே போடுவதற்காகவாவது நீ பேசாமல் நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்டு ஒத்திகைக்கு வந்து கொண்டிருக்கலாம். என்னவோ ரொம்பப் பிகு பண்ணிக் கொண்டு போனே!

அப்பன்: ஏன்டா! என்னையும் உன்னைப் போல நினைச்சுண்டுட்டியா? இந்த அப்பன் ஏமாந்த சப்பன் இல்லேடா! நாடகத்திலே வரும் எந்தக் கிழட்டு வேஷமாயிருந்தாலும் அதற்கு அப்பன் தானா அகப்பட்டான்? தாத்தா பார்ட்டா கூப்பிடு, அப்பனை! கொள்ளுத் தாத்தா பார்ட்டா, போடு அப்பன் தலையிலே! நீங்க மாத்திரம் காதல் டயலாக் பேசிக் கொட்டி முழக்கணும்! நான் கைத்தடி பிடிச்சுத் தட்டுத் தடுமாறி நடக்கணும்! காலம் மாறிப் போச்சுடா சங்கு!

சங்கரன்: நம்ப பஞ்சு ஒருத்தன்தான் இப்படி முனகிக் கொண்டிருந்தான்னு நினைச்சேன்! நீயும் அவன் கோஷ்டியிலே சேர்ந்துட்டியா? உன் கிழட்டுக் குரலுக்கு வாலிப வேஷம் ஏற்காதேடா? மேலும் உனக்கு வேட்டி நுனியைக் கையில் பிடித்துக் கொண்டால்தான் டயலாக் வரும். கதாநாயகன் வேஷம் போட்டுக் கொண்டால் பாண்ட் போட்டுக் கொள்ளணுமே!

அப்பன்: பாண்டு மாட்டிக்கிறேன். இல்லே மேளத்தை மாட்டிக்கிறேன். அதற்காக அந்த மடையன் வீட்டுக்கார வேஷத்தைப் போட்டுப்பேன்னு நினைத்தாயா?

சங்கரன்: அதுதான் வேண்டாம்னு போயிட்டியே? டைரக்டர் உன்னைக் கெஞ்சி அழைத்து வேறு 'ரோல்' கொடுப்பாருன்னு நினைத்தாய். 'காசி யாத்திரையா கிளம்புகிறீர் மாப்பிள்ளை! சரி, சரி சீக்கிரம் புறப்படும்! கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் கரெக்டா பன்னிரண்டு மணிக்குப் புறப்பட்டு விடுகிறது' என்று சொல்லக்கூடிய மாமனார் மாதிரி நிமிர்ந்து நின்னுட்டான் டைரக்டர் பாவி!

அப்பன்: ஹூம்! அப்படி ஒண்ணும் நடக்க வேண்லேன்! என்னை அவங்களே கூப்பிட்டு அனுப்பிச்சு ஜமீன்தார் வேஷம் கொடுத்திட்டாங்க! இன்னிக்குப் பத்து மணிக்கு ஒத்திகைக்கு வரச் சொன்னாங்க. அப்புறம் ஒத்திகையை ராத்திரி எட்டு மணிக்கு ஒத்திப் போட்டுட்டாங்கன்னு தகவல் வந்தது! நான் இப்போது சகுனத்தடையாக இங்கே வரலேன்னா நீ இந்தக் கொளுத்துகிற வெயிலிலே மயிலாப்பூருக்குக் கிளம்பியிருப்பே!

சங்கரன்: நீ மறுபடியும் நுழைஞ்சுட்டியா? இன்னும் இரண்டு மூன்று வாரங்களுக்கு வெற்றிலே புகையிலைச் செலவு மிச்சம்! அப்பன்! என்ன இருந்தாலும் நீ வேண்டாமென்ற பார்ட்தான் உனக்குப் பொருத்தமானது!

[சங்கரன் குடியிருக்கும் வீட்டுக்குச் சொந்தக்காரர் சதாசிவம் உள்ளிருந்து வந்து வாசற்படியில் நிற்கிறார்.]

அப்பன் (சங்கரனுடன் பேச்சைத் தொடர்ந்து): வீட்டுக்காரர்தானே?

சங்கரன்: ஆமாம்! ரொம்பத் தங்கமான பாத்திரம்! அத்தனை பேரும் நல்லவன் நல்லவன் என்று இந்தக் காலத்தில் சொல்லுவது சாதாரணக் காரியமா? என்ன குணம்? என்ன அமைதி? நீ அந்த மாதிரி பார்த்தே இருக்க

முடியாது! (வீட்டுச் சொந்தக்காரர் தெருவில் இறங்கி நடக்கிறார்.)

அப்பன்: மண்ணாங்கட்டி! சுத்த உப்புச் சப்பு இல்லாத ரோல்! இரைந்து கோபமாக நாலு வார்த்தைகள் பேச வாய்ப்பு இல்லை. வெறும் தலையாட்டித் தஞ்சாவூர்ப் பொம்மை வேஷந்தான்!

சங்கரன்: ஆமாம், ஆமாம்! உனக்கு எப்பவுமே ஹிரண்யன், கம்சன், ராவணன் மாதிரி அட்டகாசம் பண்ணிப் பேசுகிற பழக்கமாச்சே! அந்த ரகசியம் எனக்குத் தெரியாதா?

அப்பன்: இதிலே என்னடா ரகசியம்?

சங்கரன்: ஒரு வரி 'டயலாக்' பேசினதும் அடுத்த வரி மறந்து விடும்! எதிரே நிற்கிற பாத்திரத்தை 'இங்கே வா! இங்கே வா!' என்று நாலு தடவைகள் அதட்டுவாய்! அந்த நேரத்திலே பாதாளக் கரண்டியைக் கிணற்றுக்குள் போட்டுக் கயிறு அறுந்து வாளியைத் தேடுவது போல டயலாக்கைத் தேடுவாய்.

அப்பன் (கோபத்துடன்): ஆமடா! பிரமாத டயலாக்கு எழுதிப்பிட்டானுங்களாக்கும்! என்னவோ ஒரு வரியும் இரண்டு வரியும் எழுதி விடுகிறான்கள்! மனசிலே நிக்கமாட்டேன் என்கிறது! காதல் கட்ட வசனமாக இருந்தாலும், உணர்ச்சி வேகத்திலே ஓடும்! அதுகூடக் காதலி வேஷம் போட்டுக் கொள்ளும் நபரின் முக லட்சணத்தைப் பொறுத்து இருக்குன்னேன்!

சங்கரன்: இந்த நாடகத்திலே வசனங்களெல்லாம் பிரமாதமாக அமைந்து போய் விட்டது! எனக்கு ஒரு இடம் வருகிறது. பார்! அப்ப நான் அப்பளாம் வாங்கலேன்னுப் பாரேன்!

அப்பன்: சங்கு! உன் உடம்பு அப்பளமாகாமலிருந்தால் போதாதா...எங்கே அந்தக் கட்டத்தைத் தான் கொஞ்சம் அழுது காண்பியேன்!

[மற்றொரு குடித்தனக்காரரான மன்னார்சாமியின் பெண் புஷ்பலதா திண்ணைக்கு உட்பக்கமுள்ள ரேழி ஜன்னலருகில் வந்து நிற்கிறாள்.]

சங்கரன் (புஷ்பா வந்து உள்ளே நிற்பதைக் கவனிக்காமல்): ஒரே மாளிகையில் இருந்து கொண்டு இத்தனை நாட்கள் அவள் உள்ளத்தைப் புரிந்து கொள்ளாமலே இருந்து விட்டேனே! இதோ, இப்போதல்லவா புரிகிறது! மதிமுகம்! முல்லை மலர்ந்தாற்போல் முத்துப் பற்கள்! பவழமல்லிகைக் காம்பு போன்ற அதரங்கள். அதில் என்றுமே வாடாத புன்சிரிப்பு! அவள் என்னுடையவள்! ஆஹா! அந்த எண்ணமே என் இதயத்தைச் சிலிர்க்க வைக்கிறது! ஹூம்! இனி என்னையும் அவளையும் யாரால் பிரிக்க முடியும்?...

[புஷ்பா பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டு உள்ளே போகிறாள்]

அப்பன்: முடிஞ்சதாடா ஒப்பாரி! இதைக் கொட்டி முழக்கிவிட்டு உடனே என்ன பண்ணுவே?

சங்கரன்: உள்ளே போய் ஹாயாக ஒரு குட்டித் தூக்கம் போடுவேன்!

அப்பன்: என்னடா, உளறுகிறாய்? இப்போது விழித்துக் கொண்டுதான் பேசுகிறாயா?

சங்கரன்: நான் இப்போது சொன்ன வசனம் ஏழாவது சீனிலே. என் டயலாகோடு சீன் முடிகிறது! அப்புறம் பதின்மூன்றாவது சீனிலேதான் வருகிறேன்.

அப்பன்: ஹூம்! உன்னைப் போன்ற கோமாளிப் பயல்களெல்லாம் ரோலாகிற காலம்டா, இது! ஏண்டா சங்கு! நிஜமாகத் தான் கேட்கிறேன்! நீ காதல் டயலாக் பேசற போது என்னவோ ஆடு திருடின கள்ளன் மாதிரி விழிக்கிறாயே? பார்த்துக்கொண்டிருப்பவர்கள்தான் எப்படிச் சகித்துக் கொண்டிருப்பார்கள்? இல்லை, உன் நாடகக் காதலிதான் எப்படிப் பொறுத்துக் கொண்டு நிற்பாள்? கன்னனூமியாக இருக்கும் போலிருக்கேடா?

சங்கரன்: அப்பா, வயிற்றெரிச்சல் நாயனாரே! உனக்குக் கதாநாயகன் வேஷம் கொடுப்பார்கள். கதையில் கதாநாயகன் அறுபது வயதுக்கு மேற்பட்டவனாக இருக்கணும்! சரி, சரி எனக்கு வேலையிருக்கு! நான் கிளம்பறேன்.

அப்பன்: நான் வேலையில்லாத தடியன்னு எண்ணம் போலிருக்கிறது!

[அந்த வீட்டின் கடைசிக் கட்டில் குடியிருக்கும் கணபதி வாசலிலிருந்து உள்ளே வருகிறான்]

சங்கரன்: நல்ல கேள்வி கேட்டாய்! அது தான் முகத்திலே எழுதி ஒட்டியிருக்கேடா? வேளாவேளைக்கு மூக்கைப் பிடிக்கத் தின்றுவிட்டு ஊர் சுற்றி வம்பளப்பதும், வம்புச் சண்டையை விலைக்கு வாங்குவதும் தொழில்னு தெரியலையா?... இந்த லட்சணத்திலே, பிறத்தியாரைக் குற்றம் சொல்றதிலே மாத்திரம் குறைச்சலில்லை! (எழுந்திருக்கிறான்)

[கணபதி பற்களைக் கடித்துக் கொண்டு உள்ளே போகிறான்]

அப்பன் (எழுந்திருந்து): ஏய், காக்கா!... சும்மா கத்தாதே!...உன் மாதிரி 'காக்காய்' பிடிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை. பஸ் ஸ்டாண்டுக்குத்தானே போகிறாய்? நானும் உன்னோடு வர்றேன்.

சங்கரன்: இந்தா! உன் நாடகப் பிரதாபங்களை இந்தத் திண்ணையிலே பேசினதோடு நிறுத்திக்கோ! பஸ் ஸ்டாண்டிலேயும் வந்து எதையாவது உளறிக் கொண்டிருக்காதே! நாலு பேர் சிரிப்பார்கள்!

[இருவரும் கிளம்புகிறார்கள். அவர்கள் தலை மறைந்ததும் மன்னார்சாமி கோபத்துடன் வாசல் பக்கம் வருகிறார்]

மன்னார்சாமி (கடுமையான குரலில்): மிஸ்டர் சங்கரன்! மிஸ்டர் சங்கரன்! (திண்ணைக்குவந்து) அடடே! அதற்குள்ளே இந்தத் தடியன் எங்கே போனான்? தப்பிச்சுட்டானே!

புஷ்பா (வந்து கொண்டே): கேளுங்கள், அப்பா! எவ்வளவு நெஞ்சுரம் இருந்தால் அப்படிப் பேச வரும்? (திண்ணைக்கு வந்து) ஐயையோ!.. ஆசாமி நழுவிவிட்டானா? போங்கோப்பா! நீங்கதான் மசமசன்னு உட்கார்ந்து விட்டீர்கள்!

மன்னார்சாமி: அவன் எங்கேயம்மா போவான்? கழுதை கெட்டால் குட்டிச்சுவர். எப்படியும் ராத்திரி படுக்க இந்தச் சதாசிவத் தோட அஞ்சறைப் பெட்டிக்குத்தானே அவன் வரவேண்டும்?

புஷ்பா: ஆமாம்! என்னவோ எலிப் பொறிக்கு மசால் வடை வைக்கிற மாதிரிப் பேசுகிறீர்களே! அவன் பேசின பேச்சுக்கு

நாக்கை அறுத்து அந்த க்ஷணத்திலேயே கையில் கொடுத்திருக்க வேண் டாமோ?

மன்னூர்சாமி: நான் அப்பவே இந்த வீட் டுக்கார சதாசிவத்தின் கிட்டே முட்டிக் கொண் டேன்! கண்டகண்டபிரம் மச்சாரித் தடியன்களை இந்த வீட்டில் கொண்டு வந்து வைக்காதேயும்னு படிச்சுப் படிச்சுச் சொன் னேன்! வரட்டும், அந் தச் சதாசிவம்! இன்னிக்கு அந்த மனுஷன் அந்தச் சங்கரன் பயலை வெளி யேற்றுகிறானா இல்லையா, பார்த்துடறேன்.

புஷ்பா: இல்லே! நீங்க ளாவது வேறு இடம் பாருங்கள், அப்பா! ஆசாமி என்னவோ அப் பாவி என்றுதான் நினைத் துக் கொண்டிருந்தேன்! இன்றைக்கல்லவா தெரி கிறது, அவன் பலே பெருச்சாளின்னு!

மன்னூர்சாமி: அந்தப் பயல் என்ன சொன்னான்?

புஷ்பா: என் உள்ளத்தை இத்தனை நாட்கள் புரிந்துக்காமல் இருந்து விட்டானும். எனக்கு மதி முகமாம். முல்லை மலர்ந்தாற் போல முத்துப் பற்களாம். பவழமல்லிகைக் காம்பு போன்ற உதடுகளாம். அவன் இதயம் சிலிர்க்கிறதாம். இனி அவனையும் என்னையும் யாராலேயும் பிரிக்க முடியாதாம். அப்புறம் எனக்குக் கேட்கப் பிடிக்கலே! வேகமாக உள்ளே வந்து விட்டேன்!

மன்னூர்சாமி: ஏன்? அவன் அறைக்கும் நம்ப போர்ஷனுக்கும் நடுவிலே இருக்கும் சுவரை இடித்து விடுவானுமோ? பயலுக்குப் பைத்தியம் முத்திப் போயிட்டாப்போலே இருக்கு! அவன் பேசின ஒவ்வொரு வார்த் தைக்கும் ஒவ்வொரு பல்லாகத் தட்டிக் கையில் கொடுத்துத்தான் வைத்தியம் பார்க்க வேண்டும்.

[வீட்டுச் சொந்தக்காரான சதாசிவம் வெளியிலிருந்து உள்ளே நுழை கிறார்]

சதாசிவம்: ஏனையா, மன்னூர்சாமி! யாருக் கையா வைத்தியம் பார்க்க வேண்டும்? உம்ம சம்சாரத்துக்குத்தான் உடம்பு சரியாகப் போச்சு போலிருக்கே?

மன்னூர்சாமி: அவன் கொட்டாப்புளி மாதிரி ஆயிட்டாங்காணும்! இப்போது வைத் தியம் அவனுக்குத் தேவையில்லே. நீர் அருமை யாய்க் குடி வைத்திருக்கிறீரே, ஒரு ஆசா மியை! அதுதாங்காணும் அந்தச் சங்கரன் பயல்! அவனுக்குக் 'கல்தா' கொடுக்கிற வைப வத்தை நீர் நடத்தப் போகிறீரா? நான் நடத்தட்டுமா?

சதாசிவம்: ஏன் சுவாமி! இந்த வீட்டிலே அந்த ஒரு பையன்தான் கொஞ்சம் சாதுவாக யோக்கியமாக இருக்கிறான். அவன் இருக்கி



ஒரு கிழவர்: என்ன பாகவதர் வளர்த்திக்கிட்டே போறுரே?

மற்ற கிழவர்: ஏதாவது வேண்டுத லாக இருக்கும். அதான் வளர்க்கிறார்!

ஒரு கிழவர்: அட பாவமே, கதையை வளர்த்திண்டு இருக்கா ரேன்னு கேட்டா நீர் என்னய்யா?

றது உங்களுக்குப் பிடிக்க வில்லையாக்கும்! அவனை யும் வெளியேற்றி விட்டு எல்லாம் உங்கள் ரக மாகவே வைத்துக் கொண்டு கலாட்டாப் பண்ணலாம்னு யோசு லேயோ?

மன்னூர்சாமி: அவனு சாது? இந்த உலகத்தி லுள்ள காலித்தனத்துக் கெல்லாம் 'லைசென்ஸ்' ஐயா அவன்!

சதாசிவம்: யாருதான் ஐயா, இந்தக் காலத் திலே காலி யில்லாமல் இருக்கிறார்கள். சொல் லுமே? நீர் காசு பணத் திலே காலி. நாலு மாச மாக உங்க வாடகை பாக்கி நிற்கிறது. நான் தைரியத்திலே காலி! உம்மைக் காலி பண்ண னும் என்று ஓங்கிச் சொல்லமுடியலேயாகும்! அதுபோலே அந்தச் சங் கரன் எதிலேயாவது காலியாக இருந்து விட் டுப் போகட்டுமே! இந்த உலகத்திலே காலியாகா மல் இருக்கிற ஒரே 'ஜுபிட்டம்' உம்முடைய பெண்ணின் முகப் பவுடர் டப்பாதான்! இல் லியா அம்மா புஷ்பா? வலது காதுக்குக் கீழே கொஞ்சம் துடைத்துக் கொள். திட்டுத் திட் டாக இருக்கிறது.

மன்னூர்சாமி: மிஸ்டர் சதாசிவம்! உமக் குக் காசு பெரிதாக இருக்கலாம். ஆனால் எங்களுக்குக் கௌரவம்தான் பெரிது. அந்தப் பயல் என் பெண்ணைப் பார்த்துக் 'கெக்கே பெக்கே' என்கிறான். என்னால் இதைப் பொறுத் துக் கொண்டிருக்க முடியாது. ஏதாவது ஒரு வழி செய்தாகணும்! நாளைக்கே அவன் உம் மைப் பார்த்து, 'கஞ்சப் பயல், கிழக் கோட் டான், வாடகைன்னு ஆவென்று வாயைப் பிளப்பான்; சிப்போன்னு கப்பென்று வாயை இறுக்கி மூடிக் கொள்வான்' என்று சொல்லா மலா இருக்கப் போகிறான்? நீர் அப்போது நடவடிக்கை எடுத்துக் கொள்வீர், ஆனால் அது வரையில் என்னால் பொறுத்துக் கொண் டிருக்க முடியாது.

சதாசிவம்: ஓய்! மன்னூர்சாமி! கெட்டிக் காரத்தனமாகப் போகிறீரே! அவன் திட்டு வான் என்ற தைரியத்தில் நீர் என்னை ஆசை தீரத் திட்டுகிறீரா? இரும், சொல்கிறேன், உமக்கு!

மன்னூர்சாமி: பெரிசாக வாயடி அடிக்கா தீர். இந்த மன்னூர்சாமி கையிலே சிக்கினால்...

[கணபதி உள்ளிருந்து வெளியே வரு கிறான்.]

கணபதி: சிக்கினால் என்னையா பண்ணி விடுவீர்?

மன்னூர்சாமி: கிழிச்சுப்பிடுவேன், கிழிச்சு! இந்த மன்னூர்சாமியை ரொம்பப் பேருக்கு இன்னும் தெரியாது

கணபதி: ஏன்? போன ஜன்மத்திலே ஏதும் அச்சாபீஸிலே பேப்பர் கிழிக்கிற மெஷி னாக இருந்திரோ? பிறத்தியான் கை புளியங் காய் பறிக்கப் போயிருக்குமோ? இந்தக் கணபதியின் கை சும்மா இருக்காது.

மன்னார்சாமி: நாசமாய்ப் போச்சு! கண பதியா? உன்னைச் சொல்றேன்னு நினைச்சுக் கிட்டியா? நான் அந்தச் சங்கரன் பயலை யல்லவா சொல்றேன்!

கணபதி: அதுதானே கேட்டேன்? அந்தப் பயல் உம்மிடமும் வாலை நீட்டிருனு? எங்கே அவன்? தூக்கிப் பந்து ஆடிவிடுவோம்!

புஷ்பா: அப்பா! இவர்கிட்டே என்ன வாலாட்டினுன் என்று கேளுங்கள்.

கணபதி: நான் சொல்றேன் புஷ்பா! வேளா வேளைக்கு மூக்கைப் பிடிக்கத் தின்று விட்டு ஊர் சுற்றி விட்டு வம்பளப்பதுதான் என் தொழிலாம்? இதை அந்தப் பயல் சொன் னன். கூட எவனே இருந்தான். இல்லாத போனல் அப்போதே அவன் மானத்தை வாங்கியிருப்பேன்.

மன்னார்சாமி: கணபதி! அந்தப் பயலை இந்த வீட்டிலிருந்து ஒழித்துக் கட்டணுமே!

கணபதி: நான் இருக்கிற போது நீங்கள் கவலைப்படுவானேன்? வெளியிலே போயிட்டுத் திரும்பற போது ஒரு யோசனையோடு வரு கிறேன். இந்தப் பயல் இன்றைக்குச் சாயங் காலத்தோடு இந்த வீட்டை விட்டு ஓடறுனு. இல்லையா. பார்ப்போம்.

[கணபதி தெருவில் இறங்கிப் போகி ருன். மன்னார்சாமியும் புஷ்பா வும் உள்ளே போகிறார்கள். சில விநாடிகளில் சங்கரனின் நண்பர் களான பஞ்சுவும் ராமானுஜமும் தெருவிலிருந்து அந்தத் தின்னைக்கு வருகிறார்கள்.]

பஞ்சு: சங்கரன் எங்கேயோ பின்கட்டிலே யல்லவா குடியிருக்கிறான். கூப்பிடவா?

ராமானுஜம் (தணிவான குரலில்): உஷ்! நீர்பாட்டு சங்கரான்னு கூப்பிட்டு வைப் பீர். யாராவது தொந்தியும் தொப்பையும் தூக்கிக் கொண்டு ஒரு பெரியவர் மூச்சு வாங்க எழுந்து வருவார். இந்த வீட்டிலே எத்தனை சங்கரர்கள் இருக்கிறார்களோ? (இரைந்து) உஷ்! நீர்பாட்டுக்குச் சங்கரான்னுகூப்பிட்டு...

பஞ்சு: நிறுத்துடா! நாசமாகப் போக நீ! நாடகத்திலே நீ, திரை மறைவிலே ஒதுவா ராக வேலை செய்து என்ன பேசினலும் ஒரு தடவை மெதுவாகவும் ஒரு தடவை இரைந் தும் பேச ஆரம்பித்து விட்டாயே?

ராமானுஜம்: அதென்னையா, தேவார ஓதுவார், திருவாசக ஓதுவார் மாதிரி திரை மறை ஓதுவார்?

பஞ்சு: நம்ப நாடகக் கோஷ்டியிலே நீதா னேடா 'பிராம்ப்டர்'! மேடையிலே நடிக்கிற வங்க வசனத்தை மறக்காமல் மறைவிலிருந்து பின்பாட்டுப் பாடுகிறயே! அந்த வேலை செய்து செய்து, உனக்கே நீ 'பிராம்ப்ட்' பண்ணிக் கொண்டு பிறகு இரைந்து பேசும் பழக்கம் வந்து விட்டது!

ராமானுஜம்: ஆமாம், உண்மைதான்!

பஞ்சு: நீ பேசவே வேண்டாம்டா. இரண் டாம் வாய்பாடு! எதையும் இரண்டு தடவை உளற ஆரம்பிக்கிறாய்? நான் பார்த்துக்கொள் கிறேன். [மன்னார்சாமி வருகிறார்]

பஞ்சு: மிஸ்டர் சங்கரன் இருக்கிறாரா உள்ளே?

மன்னார்சாமி: மிஸ்டர் சங்கரனுமே! காலிப் பயலுக்கு மரியாதை வேறு?

ராமானுஜம் (திடீரென்று) உம்..உம்..அப் போதே நீ என் புதல்வியுடன் பேச ஆரம் பித்த போதே, உன்னைப் பிடித்துப் போலீசில் ஒப்படைத்திருக்க வேண்டுமடா, அயோக்கி யப் பயலே! நாட்டிலே நாகரிக மனிதன் என்ற வேடத்தில் நடமாட உனக்கு வெட்க மாக இல்லை! மானங் கெட்டவனே! (நிறுத்தி) சொல்லுங்க சார்! ஏன் நிறுத்திட் டீங்க? (மெதுவாக) இன்னும் போர்ஷன் பாட மாக வில்லை போலிருக்கு.

மன்னார்சாமி (வியப்புடன் ராமானுஜத் தைப் பார்த்து): சார்! உங்களுக்கு விஷயம் தெரியுமா? இப்போது நீங்களும் அவன் ஒரு அயோக்கியன் என்று ஒப்புக் கொள்கிறீர்கள். இந்தச் சாட்சி போதுமே, சார்! இப்பவாவது அந்தச் சதாசிவம் நம்புகிறானு, பார்ப்போம்! ஒன் மினிட் இருங்க சார்! நான் அந்த மனு ஷனை இழுத்துக் கொண்டு வருகிறேன்!

[வேகமாக உள்ளே போகிறார்]

பஞ்சு: என்னடா, ராமானுஜம்! ஒன் னும் புரியலே! ஏனோ வெட்ட ஏதோ பூதம் கிளம்புகிறாப் போலிருக்கே! சங்கரனைத் தேடினு ஏதோ சாட்சி அது இது என்று இந்த மனிதர் ஓடுகிறாரே!

ராமானுஜம்: எனக்கும்தான் புரியலே! 'காலிப் பயலுக்கு மரியாதை வேறு?' என்ற டயலாக் பதினேழாம் சீனிலே பண்ணையார் வில்லனைப் பார்த்துப் பேச ஆரம்பிக்கும் டய லாக்கில் முதல் வாக்கியம். இந்த ஆசாமி அந்த டயலாக்கைச் சொன்னதும் எனக்கு 'பிராம்ப்ட்' பண்ணும் உணர்ச்சி வந்து விட் டது. எனக்குத்தான் நாடகம் முழுதும் மனப் பாடமே! கடகடன்னு பண்ணையார் வேஷக் காரனுக்கு நினைவூட்டற வகையிலே முழுதும் சொல்லி விட்டேன். அப்புறம்தான் இந்த மனுஷனுக்கும் நாடக மேடைக்கும் ஸ்நானப் பிராப்தி கூட இல்லை என்று தெரிகிறது.

பஞ்சு: மனுஷனுக்கும் ஹிரண்ய வேஷத் துக்கும் நிறைய சம்பந்தம் உண்டு போலிருக் கிறது. சீக்கிரம் கிளம்புவோம். சங்குவை ராத்திரி ஒத்திகையின்போது பார்த்துக் கொள்ளலாம். இங்கு உட்கார்ந்திருந்தால் ஆபத்து! இங்கே ஏற்கனவே ஒரு கலாட்டா ஆயிருக்குப் போலிருக்கு!

ராமானுஜம்: ஆமாம், ஆமாம்! சதா சிவம் சாம்பசிவம்னு யாரும் வருவதற்குள் கிளம்பி விடலாம்!... ஓ! சாம்பசிவத்துக்கு இரண்டே சீன்! இருபத்தியொன்று! இருபத்தி மூன்று!....

[ராமானுஜமும் பஞ்சுவும் வேகமாகக் கிளம்பித் தெருவில் எதிர்ப்புறமாக நடக்கிறார்கள். உள்ளேயிருந்து மன்னார்சாமியும் புஷ்பாவும் வரு கிறார்கள்.]

மன்னார்சாமி: அட, ராமச்சந்திரா! இரு ஆசாமிகளும் நழுவி விட்டார்களே! சாட்சி தொலைந்தது!

புஷ்பா: போங்கோ, அப்பா! அவர்களைக் கூட்டிக் கொண்டு நேராகச் சதாசிவத்திடம் போகாமல் சதாசிவத்தின் அறைக் கதவைப் போய்த் தட்டிக் கொண்டிருந்தீர்களே!

மன்னார்சாமி: அந்தப் பாவி சதாசிவம் இப்பத்தான் ஒரு அண்டா சாம்பாரைக் குள மாக நினைவில் தேக்கி நீச்சலடிக்க ஆரம்பித் திருக்கிறான்! எழுந்திருக்க இன்னும் இரண்டு மணி நேரமாகும்.

புஷ்பா: சரி, சரி! விஷயத்தை விட்டுத் தள்ளுங்கோ அப்பா! இதெல்லாம் கூட் டோடு கூடாகப் பிடித்தால்தான் பாடம் கற் பிக்க முடியும். ஆனா கஞ்சி பழம் கஞ்சி! அவனுக்கே என்ன சொன்னேம் என்று இப் போது நினைவிருக்காது.

மன்னார்சாமி: உன் பேச்சு இரக்கத்தி லிருந்து எழுந்ததா, இல்லே புத்திசாலித்தனத் திலிருந்து எழுந்ததா? தெரியலியே? அவன் நெஞ்சைக் கீறி அவன் சொன்ன வார்த்தை களை நினைவுபடுத்த மாட்டேனா?

[திண்ணையில் உட்காருகிறார். சில விநாடி களில் தெருவிலிருந்து சங்கரனும் அப்பனும் திண்ணையை நெருங்கு கிறார்கள்.]

சங்கரன் (மன்னார்சாமியைப் பார்த்து): என்ன சார்? சாவகாசமாக உட்கார்ந்திருக் காப் போலிருக்கு?

மன்னார்சாமி (விறைப்பாக): ஆமாம்! நான் உட்கார்ந்திருப்பது உங்களுக்குக் கஷ்ட மாக இருக்கிறதோ?

சங்கரன் (அசட்டுச் சிரிப்புடன்): நோ! நோ!...எனக்கென்ன சார் சங்கடம்?

[மன்னார்சாமிக்குப் பக்கத்திலுட்காருகிறான்]

அப்பன்: சங்கு! நான் கிளம்புகிறேன்! மவுண்ட் ரோட் போகத்தான் பஸ் கிடைக் கலே! இந்தப் பக்கமாப் போய் டவுன் பக்கம் போய் வருகிறேன்.

புஷ்பா: அவரையும் கொஞ்சம் இருக்கச் சொல்லுங்கள் அப்பா!

சங்கரன் (அப்பனைப் பார்த்து): அப்பன்! உட்காரு! நம்ப மன்னார்சாமி வீட்டிலே ஏதோ விசேஷம் போலிருக்கு. காப்பி டிபன் கொடுக்கப் போகிறார். (மன்னார்சாமி பக்கம் திரும்பி) ஏன் சார்? ஏதும் 'பர்த் டே'யா? நீங்க சொல்லவேயில்லியே?

[அப்பன் உட்காருகிறான்]

மன்னார்சாமி (திடீரென்று): விளக்கு மாத்து டே! உனக்குக் காப்பி டிபன் கொடுத்து உபசரிக்க வேண்டுமா? காலைக் கையை முறிக் காமல் விட்டால் போதாது....நீ....

[அந்தக் கணத்தில் தெருவில் அந்த வீட்டு முன்னால் ஒரு பேபி டாக்சி வந்து நிற்கிறது. ஒரு ஜிப்பாக்காரர் இறங்கித் திண்ணையை நோக்கி வருகிறார்]

ஜிப்பாக்காரர்: இது அறுபத்தாறும் நம் பர் வீடுதானே சார்?

மன்னார்சாமி: ஆமாம்!

ஜிப்பாக்காரர்: மன்னார்சாமி இங்கே யார்..

மன்னார்சாமி: நான்தான் சார் மன்னார் சாமி...நீங்க யாருன்னு தெரியலியே!...

ஜிப்பாக்காரர்: சொல்கிறேன், சார் (எதிர்த் திண்ணையில் உட்கார்ந்து) அதற்குத்தானே உங்களைத் தேடி வந்திருக்கிறேன்! நாகப்பட் டினத்துக்கு உங்கள் பெண் ஜாதக விஷயமா கடுதாசி எழுதியிருந்தீர்களோ?

மன்னார்சாமி: ஆமாம்! உள்ளே வாருங் களேன், போய்ப் பேசலாம்! புஷ்பா, அம்மா வைக் காப்பி தயாரிக்கச் சொல்லு போ.



"ஏண்டாப்பா! எங்கேயும் வேலே கிடைக்கல்லேன்னியே? பக்கத்து வீட்டு பங்கஜத்தின் புருஷன் ஆபீ ஸிலே ஒரு லேடி டைப்பிஸ்ட் வேணு மாம். அதற்காகவாவது ஒரு அப்ளி கேஷன் போடேன்!"

ஜிப்பாக்காரர்: வேண்டாம், அம்மா! என்ன மிஸ்டர் மன்னார்சாமி! எனக்குப் போய் மாப்பிள்ளே உபசாரம் பண்ணுகிறீர் களே?..டாக்ஸி வெயிட் பண்றது, பாருங்கோ. இங்கேயே பேசி விடலாம்! நாகப்பட்டினத் துக்காரருக்கு உம்ம பெண் ஜாதகம் ரொம் பப் பிடிச்சுப் போச்சு!

மன்னார்சாமி: அப்படியா?

ஜிப்பாக்காரர்: நான் அவருடைய ஆபீஸ் நண்பர். லௌகிக விஷயமா எல்லாம் அவர் ஒன்றும் கவலைப்பட வில்லையாம். உங்களால் முடிந்ததைச் செய்தால் போதுமாம்!

மன்னார்சாமி: பல பேராசைக்காரர் நடு விலே ஒரு நல்ல மனிதனும் இருக்கிறார் என்று சொல்லுங்கோ!

ஜிப்பாக்காரர்: பையன் பெண்ணைப் பார்த் துத் 'திருப்தி' என்று ஒரு வார்த்தை சொன்னால் கல்யாணம் நடந்த மாதிரிதானாம். பையன்கூட இந்த ஊரிலேதான் இருக்கானாம்! முகூர்த்தம் அடுத்த மாதம் ஐந்தாம் தேதி வசதியாம்.

சங்கரன்: மன்னார்சாமி சார்! கல்யாணச் சாப்பாடு எப்போ போடப் போகிறீர்கள்?

மன்னார்சாமி (பற்களைக் கடித்து): பிறத்தி யார் பேசும்போது குறுக்கிடறது தப்புன்னு இன்னும் உங்களுக்குத் தெரியலேயே! (ஜிப்பாக் காரர் பக்கம் திரும்பி) ரொம்ப சந்தோஷம், சார்! நான் அவருக்கு உடனே கடிதம் எழுது கிறேன். பிள்ளையாண்டானோட விலாசம் வேணுமே?

ஜிப்பாக்காரர் (எழுந்து): உம்ம சம்பந்தி ஒரு கடுதாசிகூடக் கொடுத்து அனுப்பியிருக் கிறார், பாரும்! பையனின் விலாசம் இருக்க லாம். நான் வரட்டுமா?

[கடிதத்தை மன்னார்சாமி கையில் கொடுத்து விட்டுப் போகிறார்.]

மன்னார்சாமி (கடிதத்தைப் பிரிக்காமலேயே சங்கரனைப் பார்த்து): இந்தா, ஐயா! சங்கர னாரே! கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே இந் தத் திண்ணையிலே உட்கார்ந்து என் பெண் ணைப் பற்றி என்னையா பேசினீர்?

சங்கரன்: உம்ம பெண்ணைப் பற்றியா? அவளைப் பற்றி ஒன்றும் பெரியதாக நினைவில்லே! அப்படிப் பேசுவதாக இருந்தாலும் 'ஆஹா. இந்தப் புஷ்பா மகா சூடிகையான பெண். என்றுதான்பேசுவேன்.என்னவிஷயம்?

மன்னூர்சாமி: காலிப்பயலாக இருந்தாலும் பாலிஷ் போட்டுத்தான் பேசுகிறாய். (இரைந்து) மதி முகம், மண்ணுங்கட்டி முகம், முல்லைப் பூ, முருங்கைப் பூ என்றெல்லாம் நீ உளறினாயா இல்லையா?...உண்மையைச் சொல்லிவிடு!.....

(மன்னூர்சாமி கையிலிருந்த கடிதத்தை இழுத்துப் புஷ்பா படிக்கிறாள்.)

சங்கரன்: ஓஹோ! ஹோ! சார்!...நீங்க. (சிரிக்கிறான்)

மன்னூர்சாமி: சிக்கலே உன் அசட்டுச் சிரிப்பு! உண்மையைச் சொல்லி விடு.

புஷ்பா: (திடீரென்று) அப்பா!.. அப்பா! நிறுத்துங்கள்! இந்தக் கடுதாசியைப் பாருங்களேன்! விபரீதமாக இருக்கே?.....

மன்னூர்சாமி: (கடிதத்தை வாங்கிப் பார்த்து) வாட்? வாட்?..மிஸ்டர் சங்கரன் உங்க அப்பா நாகப்பட்டினத்திலா இருக்கிறார்.

சங்கரன்: அவர்கிட்டே நேரேயே புகார் தாக்கல் பண்ணப் போகிறீர்களா?..

மன்னூர்சாமி: இந்தக் கடுதாசியை உங்க அப்பா தானே எழுதியிருக்கிறார்!...

சங்கரன்: வாட்? வாட்? எங்க அப்பா உங்களுக்கு ஏன் எழுதுகிறார்! 'என் பிள்ளையோடு வம்புச் சண்டைக்குப் போகலாம்'னு எழுதியிருக்கிறாரா?

மன்னூர்சாமி: இல்லே, மிஸ்டர் சங்கரன்! இந்த அசட்டுப் பெண் ஏதோ சொன்னாள்...

புஷ்பா: (தலையைக் குனிந்து) நான் ஒன்னும் அசடு இல்லே!...

மன்னூர்சாமி: ரொம்பச் சமர்த்துத்தான் போ! உன் பேச்சைக் கேட்டுண்டுதான் நான் மிஸ்டர் சங்கரன்கூடச் சண்டைக்குப் புறப்பட்டேன்! மதிமுகமே, மஞ்சரளிப்பூவே, மருக்கொழுந்தேன்னு உன்னைப் பார்த்து அவர் சொன்னதிலே என்ன குறைஞ்சு போச்சு! அவர் உன்னைத் தேவைக்கு அதிகமாகவே வர்ணித்திருக்கிறார்! இல்லையா, மிஸ்டர் சங்கரன்?

சங்கரன்: நாசமாப் போச்சு! அப்பன்! நாடக வசனத்தை நாம் பேசிப் பார்த்துக் கொண்டிருந்தது எத்தனை ஆபத்திலே வந்து நிற்கிறது பாருடா!

அப்பன்: அதெல்லாம் சின்ன ஆபத்துடா சங்கு! என்னவோ பெரிய ஆபத்தே வந்திருக்காப்பலே இருக்கே?...நாகப்பட்டினம் என்கிறார்! இடீர்னு மிஸ்டர் சங்கரன் என்கிறார்! பெரிய சோப்பாகக் குழைக்கிறாரேடா இவர்!

மன்னூர்சாமி: சும்மா இருங்கள் மிஸ்டர் அப்பன்! இவனுக்கு எப்பவுமே கொஞ்சம் படபடப்பு! தவறாக எடுத்துக் கொள்ளாதீர். நீர்தான் நான் ஜாதகம் தேடி அலைந்த மாப்பிள்ளை என்று இப்போது உம் அப்பா கடுதாசி எழுதிய பிறகுதான் தெரிகிறது! கடுதாசியைப் பாரும்!...புஷ்பா அப்படியே கொஞ்சம் நில்லம்மா! மாப்பிள்ளை பெண் பார்க்கிற கட்டத்தை நடத்தட்டும்.

அப்பன்: சங்கு! உன் ஏழாவது சீன் டயலாகை உதிரேண்டா கொஞ்சம். கல்யாணம்கூட இந்தத் திண்ணையிலேயே நடந்து விடும் போலிருக்கு!

சங்கரன்: (புஷ்பாவை நிமிர்ந்து பார்த்து) சார்! எனக்குத் திருப்தியில்லே.

மன்னூர்சாமி: (திடுக்கிட்டு) மிஸ்டர் சங்கரன்!...உங்களையே நம்பி....

சங்கரன்: பெண்ணைச் சொல்லலே, சார்! உங்களைத்தான் சொன்னேன்.

(புஷ்பா நாணியபடியே போகிறாள். மன்னூர்சாமி பின்தொடருகிறார்.)

அப்பன்: சங்கு!....மாமனார் மூக்கை அறுத்துட்டியே?

சங்கரன்: அவரென்ன சூர்ப்பனகையா?.... (தணிந்த குரலில்)....அப்பன்! சட்டுப் புட்டுன்னு அறையைக் காலி பண்ணிண்டு அடையாற்றுப் பக்கம் போயிடணும்! இந்த மன்னூர்சாமி அப்புறம் என் நாடக வசனத்தைக் கேட்டுப்புட்டுத் திடீர் திடீர்னு சண்டைக்கு வந்தாலும் வருவார்.

அப்பன்: இனிமேல் உனக்குக் குடும்ப நாடகம்தான் கதி! காதல் டயலாக் பேசினால் காதை அறுத்துக் கையில் கொடுத்து விடுவான் உன் சம்சாரம். கல்யாணத்துக்கு முன்னாலேயே வத்தி வைத்து விட்டாளே!

சங்கரன்: அப்புறம் சாமியார் வேஷம் போட்டுப்பேன்னு பயமுறுத்துவேன்! தெரியுமா?.......அப்பன்!....நீ கிளம்பு!

அப்பன்: ஆமடா! இனிமேல் நான் இருந்தால் கசப்பாகத்தான் இருக்கும்.

சங்கரன்: சரி சரி! நல்ல சகுனம் நோக்கிச் செல்லடா! என்மாதிரி மாட்டிக்கொள்ளாதே! (சிரிக்கிறான்)

அட்டைப்படம்

அவன் கண்ட கொலு

பட்டுத் துணிவிரித்துப் படிகள் கொளநிறுத்தித்
திட்ட முடனமைத்த சின்னக் கொலுமுன்னே
சிட்டுப் பறப்பதெனக் கட்டுச் சிறக்குமிளம்
பட்டுக் கரங்களசை பட்டுக் கிறக்கமுறக்
கற்றைக் குழல்சரிய நெற்றிச் சுடர்பெருக
முற்றிக் கனிந்தவிதழ் முத்துக்குவை சொரியச்
சுற்றிச் சுழன்றுவரும் ஒற்றைக் கொடியிடையாள்
நிற்றல் பொம்மையென நேரக் கண்டிளைத்தான்.

— மணிவண்ணன்

ரீடா கூந்தலைப் பாதுகாக்கும்



தொல்லைகளைத் துரிதமாகவும் திறமையாகவும் நீக்குகிறது.

ரீடாவை உபயோகித்து மயிர்க்கால்களுக்குப் போஷாக்குத் தருவதால் உங்கள் கூந்தல் நீண்டு வளர்ந்து மிருதுவாகவும் பளபளப்பான கருமை நிறத்துடனும் காணப்படும். இதிலுள்ள மருந்துச்சத்துக்கள், மயிர் கொட்டுதலை நிறுத்தி, பொடுகைப்போக்கி, நரைக்காமல் பாதுகாக்கும். புட்டியிலுள்ள ரீடாவைத் தேங்காய் எண்ணெய், கடுகு அல்லது நல்லெண்ணெயில் கலந்து எப்போதும் உபயோகியுங்கள். காரிருள் போன்ற கருங்கூந்தல் அழகை நிச்சயம் நீங்கள் பெறலாம். ரீடாவை உபயோகிப்பதுடன் உங்கள் நண்பர்களுக்கும் சிபாரிசு செய்யுங்கள்.



ரீடா

கவர்ச்சி தரும் கூந்தலின் ரகசியம்

ரீடா கம்பெனி, சென்னை-1.


R.G TM


பின்னியின்
தூய பட்டு
அங்கவஸ்திரம்
பின்னியின் தூய பட்டு அங்கவஸ்திரம் நலுங்காமல் காணப்படுவதோடு உங்களுக்கு ஒரு கம்பீரத் தோற்றத்தையும் தனி அழகையும் அளிக்கிறது.
மனதைக் கவரும் பலவித ஜரிகைபார்டர்களில், பின்னியின் அனுமதி பெற்ற எல்லா கடைகளிலும் கிடைக்கும்.
பெங்களூர் உல்லன், காட்டன் &
ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட்
அக்ரஹாரம் ரோட், பெங்களூர் 2
உரிமையாளர்:
பின்னி & கம்பெனி (மதறாஸ்) லிமிடெட்
JWT/BM/SA/13444

செந்தில் ஆண்டவன்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

ஒரு கவிஞன் தமிழ்க்கடவுள் முருக னிடத்து அளவுகடந்த பக்தி உடையவனாக வாழ்கிறான். முருகன் என்றால் அழகன், இளை ஞன் என்பதை அறிகிறான். ஆம், 'என்றும் இளையாய் அழகியாய்' என்றெல்லாம் பாடிய கவிஞர் பரம்பரையில் வந்தவனல்லவா? கவிஞன் என்றால் தான் அவனோடு வறுமையும் உடன் பிறந்து வளருமே; வறுமையால் நலிகின்றான். வீட்டிலோ மனைவி மக்கள் எல்லாம் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி வாடுகிறார்கள். இந்த வறு மையை யெல்லாம் துடைக்க அந்தக் கலியுக வரதன் முருகனிடம் முறையிடச் சொல்லி அவன் மனைவி வேண்டுகிறாள். 'தேவர் துயரை யெல்லாம் துடைத்தவனுக்கு உங்கள் துயர் துடைப்பதுதானா பிரமாதம்?' என்றெல் லாம் கேட்கிறாள். ஆனால் கவிஞனோ மெத்தப் படித் தவன். இந்த முருகனோ சின்னஞ் சிறு பிள்ளை தானே. அன்னை மடிமீ திருந்து இந்த இளவய தில் அன்னை அமுதூட் டினால் தானே உணவருந் தத் தெரியும்? அவனோ தாய்க்கு அருமையான பிள்ளை. அதனால் அவளோ அவன் கண் ணுக்கு மையிட்டு, நெற் றிக்குப் பொட்டிட்டு அடிக்கடி எடுத்தணைத்து முத்தம் கொடுத்துக் கொண்டிருப்பாள். இப் படியெல்லாம் தாயோடு விளையாடும் இந்த வய தில் பக்தர்கள் துயரை யெல்லாம் அவன் அறிதல் சாத்தியமா? இல்லை, நாமே சென்று சொன்னால்தான் அதைத் துடைக்கும் ஆற்றல் தான் இருக்குமா? பிள்ளை கொஞ்சம் வளர்ந்து பெரியவனாகட்டும், நல்ல கட்டிளங் காளை யாக, வீர புருஷனாக வளர்ந்த பின்னால் அன்றோ அவனால் தன் துயர் துடைத்தல் கூடும் என்றெல்லாம் எண்ணி எண்ணி முருக னிடம் விண்ணப்பம் செய்வதை ஒத்திப் போட்டுக் கொண்டு வருகிறான் ஒன்றிரண்டு வருஷங்களாக. ஆனால் ஒரு நாள் அவனது நண்பர் ஒருவர், திருச்செந்தூர் செல்பவர், அவனையும் உடன் கூட்டிச் செல்கிறார். அங்கே முருகன் கோயில் கொண்டிருக்கிறான் என்பது தெரிந்தவன் தான் அவன்! ஆகவே நண்ப ருடன் கடற்கரையிலே உள்ள அந்த முருகன் கோயிலுக்கே செல்கிறான். அலை வந்து மோதும் அத்திருச் சீரலை வாயிலின் கோயி லைச் சுற்றி வந்து தென் பக்கத்திலுள்ள சண்முக விலாசத்தைக் கடந்து கோயிலுக் குள் நுழைகிறான். அத்தனை நேரமும் கூனிக் குறுகி நடந்த கவிஞன் நிமிர்ந்து நோக்கு கிறான். அப்போது அவனுக்கு நேர் எதிரே சண்முகன் காட்சி கொடுக்கிறான். அங்கே செப்புச் சிலை வடிவில் நிற்கும் சண்முகன் பாலனும் அல்ல; பால சந்நியாசியும் அல்ல. ஓராறு முகங்களும், ஈராறு கரங்களும் கொண்ட சண்முகநாதனே வேலேந்திய கையுடன் வீறுடன் நிற்கிறான். ஒரே தங்க மயமான பொன்னுடை புனைந்து ரத்ன கசிதமான அணிகளையும் அணிந்து நிற்கிறான். தலையில் அணிந்திருக்கும் கிரீடம் ஒன்றே ஒரு லட்சம் ரூபாய் பெறும். கையில் ஏந்தியிருக்கும் வைர வேலோ எளிதாக இரண்டு லட்சம் ரூபாய் தான். ஆகக்கே கொடுக்க ஐந்து லட்சத் துக்கு ஜாமீன். அத்தனை சௌந்தரியத்துடன் செல்வந்தனாகக் கம்பீர மாக நிற்கிறான். இவ் வளவுதானா? இந்த அழக னுக்கோ ஒன்றுக்கு இரண்டு மனைவியர். அழகனுக்கு ஏற்ற அழகி களாக, அன்னம் போல வும், மயில் போலவும் விளங்குகிறார்கள். வஞ் சனை இல்லாமல் மனைவி யர் இருவருக்கும் அழ கான ஆடைகளையும் அள வற்ற ஆபரணங்களையும் அணிவித்து அழகு செய் திருக்கிறான். இதை யெல்லாம் பார்த்த கவிஞ னுக்கோ ஒரே கோபம். 'இன்னுமா இவன் சின்னப் பிள்ளை? என் குறைகளை யெல்லாம் நான் முறையிடாம லேயே அறிந்து கொள்ளும் வயது இல்லையா? இல்லை, ஆற்றல்தான் இல்லையா? ஏன் இவன் நம் துயர் துடைத்திருக்கக் கூடாது?' என்றெல்லாம் குமுறுகிறான். குமுறல் எல் லாம் ஒரு பாட்டாகவே வெளிவருகிறது.



திருச்செந்தூர் கோயில்

முன்னம் நின் அன்னை அமுதூட்டி
மையிட்டு முத்தமிட்டுக்
கன்னமும் கிள்ளிய நாளல்லவே,
என்னைக் காத்தளிக்க

அன்னமும் மஞ்ஞையும் போல் இரு
பெண்கொண்ட ஆண்பிள்ளை நீ
இன்னமும் சின்னவன் தானோ
செந்தூரில் இருப்பவனே

என்பதுதான் பாட்டு. அன்னமும மஞ்ஞையும் போல் இரு பெண் கொண்ட ஆண்பிள்ளை அல்லவோ நீ என்று ஆங்காரத்துடனேயே கேட்கிறான் ஆறுமுகனை. இன்னமும் சின்னவன்தானோ என்று முடிக்கும்போது கவிஞனின் ஆத்திரம் அளவுகடந்தே போய் விடுகிறது. இப்படிப் படிக்காசுப் புலவன் நேருக்கு நேரே சண்முகனைக் கேட்ட தலம்தான் திருச்செந்தூர் என்னும் திருச்சீரலைவாய். அந்தத் திருச்செந்தூருக்கே செல்கிறோம் நாம் இன்று.

திருச்செந்தூர் திருநெல்வேலி ஜில்லாவில், திருநெல்வேலிக்குக் கிழக்கே முப்பத்தைந்து மைல் தொலைவில் இருக்கிறது. கடற்கரை ஆண்டியான செந்தில் ஆண்டவனைத் தரிசிப்பதற்குமுன் கடலாடிவிட வேண்டும் என்பர். கோயிலின் தென்புறத்தில் நல்ல வசதியாகக் கடலில் இறங்கி ஒரு முழுக்குப் போடலாம். அந்த முழுக்கால் உடலில் ஏறியுள்ள உப்பை, இன்னும் கொஞ்சம் தெற்கே நடந்து அங்குள்ள நாழிக் கிணற்றில் ஆம்! நல்ல தண்ணீர் கிணற்றில்தான் - குளித்துக் கழுவிக் கொள்ளலாம். திரும்பித் தென் பக்கம் வாயிலாக வந்து சண்முக விலாசத்துக்குள் நுழைந்து கோயிலுள் செல்லலாம். முக்காணியர் என்ற அர்ச்சகர்கள் உங்களை முதலில் சுப்பிரமணியன் சந்நிதிக்கே அழைத்துச் செல்வர். அவன்தானே அங்குள்ள மூல மூர்த்தி! இந்தத் திருச்செந்தூர்தான் நக்கீரரது திருமுருகாற்றுப் படையில் கூறப்பட்ட ஆறுபடை வீடுகளில் இரண்டாவது படைவீடு. மிகவும் பழமையான தலம். சூரசம்ஹாரம் நடந்த தலம் அல்லவா? பழைய சங்க இலக்கியமான புறநானூற்றிலேயே.

வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறை.

என்று குறிக்கப்பட்ட பதி. 'சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும் ஏரகமும் நீங்கா இறைவன்' என்றே முருகன் சிலப்பதிகாரத்தில் பாடப்பட்டிருக்கிறானே! இங்குள்ள பாலசுப்பிரமணியன் பெருமை யெல்லாம் அவன் சூரசம்ஹாரம்செய்து தேவர் இடுக்கண் தீர்த்ததுதான். ஆதலால் அந்த வரலாற்றை முதலில் தெரிந்துகொள்ளலாம்.

சூரபதுமன், சிங்கமுகன், பானுகோபன் என்ற அசுரர்கள் தேவர்களுக்கெல்லாம் இடுக்கண் செய்கிறார்கள். அதனால் தேவர்கள் எல்லாம் சென்று சிவபெருமானிடம் முறையிடுகிறார்கள். அவரும், அவர்கள் துன்பத்தைத் தீர்க்க ஒரு குமாரனைத் தருவதாக வாக்களிக்கிறார். அதன்படியே தன்னுடைய ஐந்து திருமுகங்களோடு அதோ முகமும் கொள்கிறார். ஆறு திருமுகத்தில் உள்ள ஆறு நெற்றிக் கண்களிலிருந்தும் ஆறு பொறிகள் கிளம்புகின்றன. அந்தப் பொறிகளை வாயு ஏந்திச் சென்று, அக்கினியிடம் கொடுக்க, அக்கினியும் அந்தப்பொறிகளது வெம்மையைத் தாங்காது கங்கையிலே விட்டு விடுகிறான். கங்கை அந்தப் பொறிகளைச் சரவணப் பொய்கையில் கொண்டு சேர்க்கிறாள். அங்கு ஆறு பொறிகளும் ஆறு திருக் குழந்தைகளாக மாறுகின்றன. இப்படித்தான் வைகாசிமாதத்தில் விசாக நாளில் விசாகன் பிறக்கிறான். இந்த ஆறு குழந்தைகளையும் கார்த்திகைப் பெண்கள் அறுவர் பாலூட்டி வளர்க்கின்றார்கள். இந்தக் கார்த்திகேயனைப் பார்க்கச் சிவபெருமான் உமையம்மையோடு சரவணப் பொய்கைக்கு வருகிறார். அங்கு அம்மை குழந்தைகள் அறுவரையும் சேர்த்து எடுத்து மார்போடு அணைக்கிறாள். ஆறு குழந்தைகளும் சேர்ந்து ஆறுமுகத்தோடு கூடிய ஒரே பிள்ளையாக மாறுகிறார்கள். அவனே கந்தன் எனப் பெயர் பெறுகிறான். ஆறுமுகன் என்றே எல்லோராலும் அழைக்கப்படுகிறான். இவன் வளர்கிறபோதே சூரபதுமனது கொடுமைகள் அதிகம் ஆகின்றன. உடனே தந்தையின் வாக்கைப் பரிபாலிக்க நவ வீரர்களை உடன் அழைத்துக் கொண்டு போருக்குப் புறப்படுகிறான். அன்னையும் பாலகனுக்கு நல்லதொரு வேல் கொடுத்து அனுப்புகிறாள். இந்தப் படையெடுப்பில் முதலில் இலக்கு ஆனவர்கள் தாரகாசுரனும் கிரௌஞ்சமலையும்தான். மண்ணியாற்றங்கரையில் உள்ள சேய்ஞலூரில் சிவபிரானை வணங்கி, சூரபதுமன் இருக்கும் வீரமகேந்திரத் தினை நோக்கி வருகிறான். திருச்செந்தூரில் முகாம் செய்து கொண்டு வீரபாகுவைத் தூதனுப்புகிறான். சூரபதுமன் சமாதானத்துக்கு இணங்கவில்லை. அவனும் போருக்குப் புறப்படுகிறான். குமாரனும் குமுறி எழுந்து தன்னை எதிர்த்த வீரர்களையும் சிங்கமுகாசுரனையும் கொன்று குவிக்கிறான். ஆறு நாட்கள் நடக்கிறது போர். கடைசியில் போர் சூரபதுமனுக்கும் முருகனுக்குமே நேருக்கு நேர் ஏற்படுகிறது. அந்தப் போரில் அன்னை தந்த வேலைப் பிரயோகித்துச் சூரனைச் சம்ஹாரம் செய்கிறான். திருச்செந்தூர் உற்சவங்களில் சிறப்பான உற்சவம் கந்த சஷ்டி உற்சவம்தான். வேற்படையால் இரு கூறுகிறான் சூரபதுமன். மயிலாகி வந்த கூறைத் தன் வாகனமாகவும் சேவலாகி வந்த கூறைத் தன் கொடியாகவும் அமைத்துக் கொள்கிறான் முருகன். இப்படி சூரபதுமனைத் தன் வாகனமாகவும் கொடியாகவும் அமைத்துக்கொண்டு தன்னுடைய உண்மையான உருவத்தைக் காட்டுகிறான் கார்த்திகேயன். அந்த விசுவரூப தரிசனம் கண்ட சூரபதுமனே,

கோலமா மஞ்ஞை தன்னில்
குலவிய குமரன் தன்னைப்
பாலன் என்றிருந்தேன் அந்நாள்
பரிசுஇவை உணர்ந்திலேன் யான்
மால் அயன் தனக்கும், ஏனை
வானவர் தமக்கும், யார்க்கும்
மூல காரணமாய் நின்ற
மூர்த்தி இம் மூர்த்தி அன்றோ.


என்று துதிக்கிறான். இந்த மூர்த்திதான் திருச்செந்தூரில் செந்தில் ஆண்டவனாக எழுந்தருளியிருக்கிறான். நல்ல அழகொழுகும் வடிவம். விபூதி அபிஷேகம் செய்யக் கோயில் நிர்வாகிகள் மூன்று ரூபாய்தான் கட்டணம் விதிக்கிறார்கள். விபூதிக் காப்பிட்டுக் கண் குளிரக் கண்டால் நம் வினைகளெல்லாம் எளிதாகவே தீரும். உள்ளத்திலும் ஒரு சாந்தி பிறக்கும். இந்த ஆண்டவனை, பாலசுப்பிர





VINCENT'S
ORANGE





திருச்செந்தூர் சண்முகன்

மணியனைத் தரிசித்து விட்டு வெளியே வந்து வடக்கு நோக்கித் திரும்பினால் அங்கு சண்முகன் நின்று கொண்டிருப்பார், அன்று படிக்காசுப் புலவர் கண்ட கோலத்திலேயே. ஆம். அன்னமும் மஞ்ஞையும் போல் இரு பெண்களுடன் நிற்கும் ஆண் அழகனையே காணலாம். அவனையும் வணங்கி விட்டு அவன் பிராகாரத்தை ஒரு சுற்றுச் சுற்றி, துவஜஸ்தம்ப மண்டபத்துக்கு வந்து அந்தப் பிராகாரத்தையும் சுற்றலாம். அங்குதான் மேலப் பிராகாரத்தின் இரு கோடியிலும் வள்ளியும், தெய்வயானையும் தனித் தனிக் கோயிலில் இருப்பர். இதற்கடுத்த பெரிய பிராகாரத்திலே சூரசம்ஹாரக் காட்சி சிலை வடிவில், (உப்புச உருவில்) அர்த்த சித்திரமாக இருக்கும். இந்தக் கோயிலின் வடக்குப் பிராகாரத்திலே வேங்கடவன் கொலுவீற்றிருக்கிறான். அங்கு மணல் மேட்டைக் குடைந்து அமைத்த அனந்தசயனனையும் கஜலட்சுமியையும் தரிசிக்கலாம்.

இக்கோயிலில் உள்ள ஆறுமுகனைப் பற்றிய ரசமான வரலாறு ஒன்று உண்டு. 1648-ம் வருஷம் மேல் நாட்டிலிருந்து வந்த டச்சு வர்த்தகர்கள் இங்கு வந்து தங்கியிருக்கிறார்கள். அவர்கள் பொன் வண்ணத்தில் இருக்கும் ஆறுமுகனைக் கண்டுகளித்திருக்கிறார்கள். அந்த மூர்த்தியை எடுத்துச் சென்றால் அத்தனை பொன்னும் தங்களுக்கு உதவுமே என்று கருதி, அந்த மூர்த்தியைக் களவாடிக் கப்பலில் ஏற்றிச் சென்றிருக்கிறார்கள். ஆனால் ஆறுமுகனோ அவர்களுடன்நெடுந்தூரம் செல்ல விரும்பவில்லை. ஒரு புயலைக் கிளப்பியிருக்கிறான். கொந்தளிக்கும் கடலிலே டச்சுக்காரர் கப்பல் ஆடியிருக்கிறது. இனியும் ஆறுமுகனைத் தங்கள் கப்பலில் வைத்திருத்தல் தகாது என நினைந்து அவனை அலக்காய்த் தூக்கிக் கடலிலேயே எறிந்திருக்கிறார்கள்.

கோயிலில் இருந்த ஆறுமுகன் காணாமல் போன செய்தியை நாயக்க மன்னரின் பிரதிநிதியான வடமலையப்ப பிள்ளையன் அறிந்திருக்கிறார்; வருந்தியிருக்கிறார். பஞ்சலோகத்தில் இன்னொரு ஆறுமுகனை வார்த்தெடுத்து நிறுத்த முனைந்திருக்கிறார். ஆனால் கடலுள் கிடந்த ஆறுமுகனே அவரது கனவில் தோன்றி, தான் இருக்கும் இடத்தை அறிவித்திருக்கிறான். அவன் தெரிவித்தபடியே கடலிலிருந்து ஆறு காத தூரம் சென்றதும் அங்கு ஓர் எலுமிச்சம் பழம் மிதந்து கொண்டிருக்கிறது. அந்த இடத்தில் கருடன் வேறே வட்டமிட்டுக் கொண்டிருக்கிறான். அங்கு மூழ்கிப் பார்த்ததில், கடலின் அடித்தளத்தில் டச்சுக்காரர்கள் களவாடிய அறுமாமுகவன் இருந்திருக்கிறான். இதனை எடுத்து வந்து ஒரு நல்ல மண்டபம் கட்டி அதில் இருத்தியிருக்கிறார் வடமலையப்பர். அதனாலேயே இன்றும் அறுமுகவன் கோயில் கொண்டிருக்கும் மண்டபம் வடமலையப்பன் மண்டபம் என்று வழங்கப்படுகிறது. இது ஏதோ கற்பனைக் கதை அல்ல. 1785-ல் பெர்லின் நகரிலிருந்து எம். ரென்னல் எழுதிய 'சரித்திர இந்தியா' என்ற புத்தகத்தில் இத்தகவலைத் தான் ஒரு டச்சு மாலுமியிடமிருந்து தெரிந்து கொண்டதாக அவர் எழுதியிருக்கிறார். 1648-ல் இது நடந்தது என்று உறுதியாகக் கூறியிருக்கிறார். 1648-ல் கடலுள் சென்ற ஆண்டவன் 1653-ல்தான் வடமலையப்ப பிள்ளையன் மூலம் வெளிவந்திருக்கிறான். அன்றிலிருந்து அவன் புகழ் பிரசித்தி பெற்றிருக்கிறது. இந்தச் செந்தில் ஆண்டவனிடத்திலே பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரரான கட்டபொம்மன் மிகுந்த பக்திசிரத்தையோடு வாழ்ந்திருக்கிறான். திருநெல்வேலியில் கலெக்டராகவிருந்த லஷிங்டன் என்ற துரைமகனும் இந்த ஆண்டவனிடம் ஈடுபட்டு 1803-ல் பல வெள்ளிப் பாத்திரங்களைக் காணிக்கையாகக் கொடுத்திருக்கிறார்.

இக்கோயில் கட்டியிருக்கும் இடம் ஆதியில் கந்தமாதன பர்வதம் என்ற மணல் குன்றாக இருந்திருக்கிறது. தேவர்கள் வேண்டியபடி தேவதச்சனான மயனே முதலில் கோயில் கட்டினான் என்பது வரலாறு. மயன் கட்டிய கோயில் நாளும் விரிவடைந்திருக்கிறது. பாண்டிய மன்னர்களும் சேர மன்னர்களும் இக்கோயில் கட்டுவதில் முனைந்திருக்கிறார்கள். வரகுணமாறன், மாறவர்மன், விக்கிரம பாண்டியன் முதலியோர் கோயிலுக்கு வேண்டிய நிபந்தங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவை பதின்மூன்றும் நூற்றாண்டில் ஏற்பட்டிருக்கின்றன. கி. பி. 1729 முதல் 1758 வரை திருவிதாங்கூரை ஆண்ட மார்த்தாண்டவர்ம மகாராஜா இக்கோயிலில் உதயமார்த்தாண்டக் கட்டளையை ஏற்படுத்தி யிருக்கிறார்.

இந்த இருபதாம் நூற்றாண்டிலும், மௌனசுவாமி என்பவர் கோயில் திருப்பணியை மேற்கொண்டிருக்கிறார். அவருக்குப் பின் திருப்பணியைத் தொடர்ந்து நடத்தியவர் வள்ளிநாயக சுவாமிகள். இன்று விரிவடைந்திருக்கும் கற்கோயில், ராஜகோபுரம், பிராகாரங்கள் எல்லாம் இவர்களது திருப்பணி வேலைகளே. முருகன் கோயில்களில் எல்லாம் சிறப்பான கோயிலாக இருப்பது இந்தச் செந்திலாண்டவன் கோயிலே.

உடந்தை

வையவன்

சிறைக் கதவுகள் பூட்டுத் திறக்கப்படுவதால் ஏற்படும் கரகரப்புச் சத்தத்துக்கு ஆளாகின. ஒரு காலை நீட்டிக் கொண்டு, மறு காலை மடக்கி, மார்வாரி சேட்டுகள் உட்காருவது போல் கம்பீரமாக உட்கார்ந்திருந்த தாண்டவனும், அவனைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு, அவனுடைய மயிர்க்கூச்செறியும் அனுபவங்களைக் கேட்டு மயங்கியிருந்த அந்த ஒன்பது பேரும், ஒரே சமயத்தில் தங்களுடைய கழுத்தை வளைத்துப் பார்த்தனர். கம்பிகளுக்கப்பால் பூட்டைத் திறந்து கொண்டிருக்கும் வார்டரின் குனிந்த, தொப்பியணிந்த தலை தெரிந்தது. விலங்குகளால் பிணைக்கப்பட்டுச் சுதந்திர உலகத்தின் காற்றை அனுபவித்தபடி நுழையப் போகும் புதிய இடத்தைப் பற்றிய உருவமற்ற திகிலும், குழப்பமும் கலந்த பார்வையோடு ஒரு மனிதன் நின்று கொண்டிருந்தான். அரும்பு கோத்திருந்த இளம் மீசையும், குற்ற முத்திரையின் ஆழமான வடுக்கள் படாத குழந்தை முகமும் அவனைத் தொழிலுக்கும் இளைஞனாக்கியே காட்டின.

"புதுவிருந்தாளியா? என்ன வாத்தியாரே! மெரளாதே! இன்னா, அறுப்பா, கையெழுத்தா, தொறப்பா இல்லே நம்ம வாத்தியார் மாதிரி அரசியல் மறியலா? எத்தினி வருஷம்? சும்மா தைரியமா வா. ஏய், தொள்ளைக் கண்ணு, வாத்தியாருக்கு எடங் குடுறு!"

அந்தப் புதிய இளைஞன் தனக்குத் தரப்பட்ட இந்தத் திடுக்கிடும் வரவேற்பால் கலங்கிப் போய், கல்யாணப் பெண்ணைப் போலக் கூசிக் கொண்டு நின்றான். கதவை அவனுக்குப் பின்னால் சாத்திக் கொண்ட வார்டர் கேசவலு நாயுடு, பட்டையாய் நாமம் இழுத்திருந்த நெற்றியைச் சுளித்தார்.

"வாய்யா, வா. ஒம் பேரு இன்னா? வந்ததுலே இன்னா விசேஷம்? ஏன் நிக்கிறே? உட்காரு. அட, சும்மா பயப்படாம உக்காருய்யா. நாங்களெல்லாம் இன்னா புலியா, சிங்கமா?"

தொள்ளைக் கண்ணன் என்ற இடுகுறிப் பெயரில் கூப்பிடப்பட்ட கேடி சுந்தரம் கொஞ்சம் ஒதுங்கி இளைஞனுக்கு இடம் கொடுத்தான். பயம் குறையாமலேயே அந்த இளைஞன் அங்கே உட்கார்ந்தான். ஒன்பது ஜோடிக் கண்கள் விதம் விதமான பாவங்களில் அவனைக் கூர்ந்து நோக்கின.

"வாத்தியாரே! ஐயாவெ எங்கியோப் பாத்த ஞாபகமாயிருக்குது!" என்று தாண்டவனிடம் கேடி சுந்தரம் தன் அபிப்பிராயத்தைச் சொன்னான். சுந்தரத்தின் முகத்தில் அங்குல நீளத்துக்கு ஒரு பெரிய கத்திக் கிழிப்புத் தென்பட்டது. மொட்டைத் தலையும் உள்ளடங்கிய கண்களும், பூ விழுந்த வலது கண்ணில் தெரியும் ஏளனக் குரூரமும் ஒரு நரியின் முகத்தை நினைவூட்டின. பற்களை விகாரமாகத் திறந்து இளித்துக் காட்டினான் அவன்.

"ஏய், சோமாறி! சும்மா கெட! போட்டோவிலே பாத்தியா, பேப்பர்லே பாத்தியா, எடுத்த எடுப்பிலேயே, 'டகுல்' பண்ணுனியா? இன்னா, தம்பி, ஒம் பேரு என்னா?"

தாண்டவன் கேட்டதும் அவனது முகத்தையே பார்த்தவாறு சற்றுத் தைரியம் பெற்ற குரலில் அந்த இளைஞன் பதிலிறுத்தான்:

"சக்திவேலு!"

"கேஸு?"

இதற்குப் பதில் சொல்ல முடியாமல சக்திவேல் தலையைக் குனிந்து கொண்டான். அவனுடைய வெளுத்த கண்களில் இருள் ஓடியது.

"இன்னா காதல் விவகாரமா? இருக்கும். அதுதான் தம்பி கூச்சப்படுது!" என்று பெருந்தன்மையான தோற்றம் வாய்ந்த ஓர் அனுபவம் மிக்க கைதி இடைமறித்தார். குபீரென்று ஒன்பது பேரும் சிரித்தார்கள். சிறைச் சாலையின் கடுகடுப்பான சுற்றுச்சுவர்களில் அந்த வாழ்க்கையின் நாதம் மோதிக் கலகல வென்று எதிரொலித்தது.

"சும்மா வெக்கப்படாம சொல்லு. வெட்கம் துக்கமெல்லாம் நமக்கு எதுக்கு? பொழைக்கத் தெரியாம எப்போ போலீஸ்காரன்கிட்டே மாட்டிக்கினியோ, அப்பவே எல்லாத்தையும் மூட்டை கட்டிச் சலவைக்குப் போட்டுட்டு வந்துடணும்! சும்மா, சொல்லு!"

தாண்டவன் பேசி நிறுத்தியதற்கப்புறம் எல்லாரும் அமைதியாக அந்தப் புதிய ஆசாமியைப் பார்த்தார்கள். அந்த மௌனத்திலிருந்து ஏதோ ஒரு தைரியத்தை எடுத்துத் திரட்டிக் கொண்டு, சக்திவேல் மெல்லப் பேசத் தொடங்கினான்.


"ஒருத்தர்கிட்டே பிக்பாக்கெட் அடிச்சேன்! பிடிச்சுக்கிட்டாங்க. ஆறு மாசம் போட்டுட்டாங்க."

"ப்பூ. இவ்வளவுதானா? இதுக்குப் போயி பயப்பட்டா நடக்குமா, கண்ணு! ஐயா பேர்லே இன்னும் பம்பாயிலே ரெண்டு வாரண்டு இருக்கு. பாண்டிச்சேரிக்கு எப்படா வருவேன்னு போலீஸ்காரங்க காத்துக்கிட்டிருக்காங்க. தற்சமயம் அஞ்சு வருஷம்" என்று தன் சுயப்பிரதாபங்களை அறிவித்தான் தாண்டவன். ஒல்லியாகவும் குள்ளமாகவும் வைரம் பாய்ந்த உடலோடும் கூடிய அந்த விசித்திரமான உருவத்தில், உலகின் சகல குற்றங்களும் சரியான பௌதிக அமைப்போடு விளங்குவது போல் காணப்பட்டன.

"என்னப்பா, பார்த்தா படிச்ச பிள்ளை போல் இருக்கிறே? பிக்பாக்கெட் அடிச்சேங்கிறியே!" உள்ளிருப்பு மறியலில் கைது செய்யப்பட்ட தொழிற்சங்கவாதி அவனைப் பார்த்து இரக்கத்தோடு குற்றம் சாட்டுவது போல் கேட்டார்.

அந்த இளைஞன் பதில் சொல்ல முடியாத அக்கேள்விக்கு, தலை குனியுமுன் தாண்டவன் குறுக்கிட்டுப் பேசினான்.

"மறுபடியும் நீங்க பழைய கதைக்கே போறீங்களே, வாத்தியாரே! நாங்க இன்னா பண்றது? நீங்க சொல்லுங்க. மாரை ஒடிச்ச



''இந்தப் பையன் சுத்தமோசம்! வேலையில் சேர்ந்து ஒரு மாசமாகிறது. இன்னும் நம்பஆபீஸ் நடைமுறையைத் தெரிந்து கொள்ளவில்லையே!''

வேகாத வெய்யில்லே பாடுபட்டா, பிச்சைக்காரனுக்குப் போட்ற மாதிரி ஒண்ணரை ரூபாயைத் தூக்கிப் போட்றாங்க. அதுலே நாங்க என்ன பண்றது? பெண்டாட்டி புள்ளெ குட்டிங்களுக்கு சம்பாரிச்சுப் போட்றதா? இல்லே காலமெல்லாம் கஞ்சியும், கூழுமாவே கழிச்சிட்டு 'சிட்டி'லே சுத்துப்புறம் நடக்கிற கோலாகலத்தைப் பார்த்து மனசுலேயே வெந்துக்கினு கெடந்துட்டுச் சாவணும்னு சொல்றீங்களா?''

தாண்டவனுடைய கண்களில் சிவப்பு எழுந்தது. குரலில் காணப்பட்ட மூர்த்தண்யம், யாருடைய சட்டைக் காலரையோ பிடித்து உலுக்குவது போல் கிண்ணென்று ஒலித்தது. குறுந்தாடி வைத்திருந்த அந்தத் தொழிற்சங்கவாதி, அதை இலேசாக வருடிய வண்ணம், ஆழ்ந்த யோசனையோடு சிரிப்பது போல் புன்முறுவல் செய்தார்.

''அப்பிடிக்கூட என்னைப் பொறுத்தவரை தகும். நான் மாறிடத் தயார்தான், வாத்தியாரே! மனுசன்னு பெண்டாட்டி புள்ளெக் குட்டின்னு பொளைக்காமே, இந்த ஜெயில்லேயே ஆறுமாசம், அந்த ஜெயில்லே எட்டுமாசமின்னு நாயாப் பேயா அலைஞ்சு திரியறது எனக்கும் ரொம்ப பேஜாராத்தான் இருக்குது! அடே! நடுவிலே ரெண்டுமாசம் வெளியே இருந்தாக்கூட மனசுக்கு ரெண்டு வார்த்தை நிம்மதியாப் பேச யாரு இருக்காங்க? உட்டுடலாம்னு ஏழெட்டுத் தபா 'ட்ரை' பண்ணினேனே வாத்தியாரே! கை நமைக்குது. இந்த ஒடம்பு படா பேஜாராயிடுது. நெனப்பெல்லாம் எப்பப் பார்த்தாலும் அந்த லைடுலேயே ஓடுது. இதை வுட்டா மாத்திரம் எந்தக் கெவுர்மெண்டு உத்தியோகம் இருக்கு? நானு எழுத்து படிச்சிருக்கலாம். அப்பவே படிச்சி எங்கப்பனும்தான் தலைபாடமா அடிச்சுக்கிட்டாரு. கோதண்டம், புளியஞ்சவுக்குன்னு இன்னா இன்னமோ செஞ்சு பாத்தாரு. இந்தப் பாழாப் போன புத்தியிலே அப்பப் படலியே, வாத்தியாரே! வந்தா, கூலி வேலைதான் செய்யணும். கையிலே இது ஒண்ணைத் தவிர வேறெ தொழில் இல்லே. வேறே இன்னாத்தான் பண்றது? சாவணுமா வாத்தியாரே... ஐய்யே! சொல்லேந்தான் கொஞ்சம்!''

தாண்டவன் படபடவென்று மனத்தில் மூட்டம் கொண்டிருந்த குமைச்சல்களையெல்லாம் அடித்து விட்டான். ஒரு வேதனையைச் சொல்லும் போதே, அதன் கனமேயே மனத்தில் அழுத்தி 'ஸ்பிரிங்கு' போல் வேகம் பெற்றுத் தொடர்ந்தது. அந்தத் தாடி மனிதர் நிலையான அதேசிரிப்புடன் தாண்டவனின் உணர்ச்சிகளை ரசித்துக் கொண்டிருந்தார். சக்திவேல் வெளிர் வாங்கிய முகத்தினன் ஆகி, தாண்டவனின் மேல் ஊன்றிய கண்களை அகற்றாது கவனித்தான்.

தாடிமனிதரின் கேள்வி என்னவோ வேறுதான். கேட்கப்பட்டதும் வேறு ஆளிடம்தான். ஆனால் அந்தக் கேள்வியின் அடிப்பீடத்திலிருந்த ஒரு கடுமை, தாண்டவனைத் துன்புறுத்தி அவனுடைய இதயத்தைச்சுற்றியிருந்த கட்டுக்களை அவிழ்த்துவிட வைத்து, உள்ளே என்ன ரணம்தான் இருக்கிறதென்பதை வெளிக் காட்ட வைத்து விட்டது.

''நான் படிக்கலேவாத்தியாரே! ரிகார்ட்டிலே எல்லாங்கூடப் போன வருஷம் வரைக்கும் கைநாட்டுதான். வேலூர் ஜெயில்லேபோன தடவை தான் யாரோ ஒரு புண்ணியவான் கையெழுத்துப் போடக் கத்துக் குடுத்தான். ஒங்களெப்போலே, அந்தக் காலத்திலே ஒழுங்காப் பள்ளிக்கூடம் போயிருந்தா, சின்ன வயசுலே நல்லது கெட்டது இன்னுன்னு யோசனை பண்ற புத்தி இருந்திருக்கும். நானும் நல்லபடியா பெண்டாட்டி புள்ளெ குட்டியோடப் பொழைச்சிருப்பேன். ராத்திரி நிம்மதியா நாலு மணியாவது தூங்கியிருப்பேன். இன்னு பண்றது. நம்ப தலையிலே கிறுக்கினது இவ்வளவுதான்!''

தாண்டவன் என்ற அந்தப் பயங்கரமான குற்றவாளிக்குப் பிரக்ஞை அற்றுப் போய்விட்டது போல் ஆத்மார்த்தமான யோசனையோடு அவன் பேசினான். உலகின் விழிகளில் வெறுப்பைக் கிளப்பும் அவன் உள்ளத்திலிருந்து முத்துப்போல் அவன் பதுக்கிவைத்திருந்த ஒரு சோகமான கனவு வெளியில் வந்துவிட்டது. அந்தச் சமயத்தில் அவனும் எல்லாரையும் போல ஒரு கௌரவமான பிரஜையின் தூக்கங்களை உடையவன் போலவே கம்பீரமாகக் காணப்பட்டான்.

''பொஸ்தகம்னு எனக்கு ரொம்பப் புடிக்கும், வாத்தியாரே! சத்தியமாச் சொல்றேன். அழகான பொஸ்தகங்களைப் பார்த்து, தொழிலுக்குப் போன இடங்களிலே கூட தடவித் தடவி அழகு பார்த்திருக்கேன். என்னென்னமோ பொஸ்தகங்க. என்னென்னமோ விஷயமுங்க. ஊஹும்...எதுவாயிருந்தாலும் தடவிப் பார்க்கறதோட சரி. நமக்கு யாரு வாத்தியாரே, கத்துக் குடுக்கிறவங்க. நம்ம மாதிரி சோமாறிங்க கூடத்தான் நமக்குச் சகவாசம். அதோட நாடாறு மாசம்; காடாறு மாசம். கடைசிவரையிலும் ஒரு பொஸ்தகத்தைக்கூடப் படிக்காமல் தான் பூடுவேன் போலிருக்குது. அதுக்குள்ளே நான் எங்கியோ பூட்டேன் பாத்தியா? அதெ வரீங்க வாத்தி

யாரே! நீங்களெல்லாம் ஊரு ஒலகத்தையே மாத்தறவங்க. யோசிச்சுப் பாருங்க வாத்தியாரே, எங்களுக்கு இன்னு வழி?''

தாடிக்காரர் இப்போது சிரிக்கவில்லை. கண்கள் தாண்டவனையே நோக்கிய போதிலும், அடிவானத்துக்கு அப்பால் அவர் சிந்தனை சென்று விட்டதைப் போன்ற பாவத்தால் அவை ஆழ்ந்து யோசித்தன. அங்கே மௌனம் நிலவியது. அந்தப் புதிய வாலிபன் உணர்ச்சியோடு அவன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவரவர்களின் இதயத்தையும் வாழ்வையும் மூடியிருந்த பேரிருளின் பிரதிநிதியாக அவன் பேச்சு விளங்கியது. மூன்றுபேர் அதை ஆமோதித்தனர்.



அண்ணே! உங்கிட்டே இருக்கிற கந்தலைக் கொடு. எவர்சில்வர் குடுகுடுப்பை தாரேன்!''

''சரி. போவட்டும், வாத்தியாரே? நம்ம கதையே அப்புறமா பேசுவோம். இந்தப் புது அண்ணாத்தையே விசாரிப்போம். இன்னு அண்ணாத்தை. படிச்சிருக்கிறியா?'' என்று தன் இதயக் குமுறலை மூடி முத்திரையிட்டான் தாண்டவன்.

இளைஞனின் தலை தாழ்ந்தது. துர்நாற்றம் நிறைந்த அந்த அறையினுள், பெயர் பெற்ற கேடிகளுக்கு முன்னால் இந்தச் சங்கடமான கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்று அறிந்திருந்தால், அவன் வாழ்க்கையில் குற்றமே செய்திருக்க மாட்டான். நீதிபதியிடமும், போலீஸிடமும் தெரிவிக்காத அந்தப் பதிலை இப்போது தடுத்து நிறுத்த அவனால் முடியவில்லை. அவனுக்கு இப்போது வேண்டியிருந்ததெல்லாம் கொஞ்சம் அனுதாபம்தான்!

''எஸ். எஸ். எல். சி. படித்துக் கொண்டுதான் இருந்தேன். இந்த மார்ச்சிலே பரீட்சைக்குப் போக வேண்டியவன்.''

காரை பெயர்ந்து குண்டும் குழியும் விட்டிருந்த தரையின்மீது ஒரு தொந்தி பருத்த மூட்டைப் பூச்சி நகர்ந்து போய்க் கொண்டிருந்தது. அதை அதன் கூடவே பார்த்துக் கொண்டு போவது போல் சக்திவேல் பேசினான். தாண்டவன் கண்களில் ஜுவாலை வீசியது. சக்திவேலின் தோளை ஆத்திரத்தோடு தட்டியபடியே ஆரம்பித்தான்.

''என்னய்யா, பிள்ளே நீ? உனக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கா? பிக்பாக்கெட் அடிக்கிறதிலே மாணவாரியா வாரிடலாம்னு எவனாவது சொன்னானா? திருடன்னு என்னய்யா நினைச்சிக்கிட்டிருக்கே? சந்துக்குச் சந்து நாய் மாதிரி அலையறோம். நிம்மதியா சாப்பிடறதுக்கு நேரமில்லே ஐயா! இதோ இவன் மாதிரி சில்லறைங்களை நான் சொல்லலை. தொழிலிலே கொஞ்சம் பேர் வாங்கிட்டா அப்புறம் எது ஐயா. நிம்மதி? நாங்க எப்போடா வந்துடப் போறோம்னு பணத்தைச் சேர்த்து வைச்சிருக்கப்பட்டவங்க பயமும் பந்தோபஸ்தும்... அவனுங்க எப்போட அசருவானுங்கன்னு நிம்மதியில்லாம உசிரைக் கையிலே புடிச்சிக்கினு எங்க வித்தையும் வரிசையும்... நடுவிலே போலீசு. ஆ..ப்பா! இது பொழைப்பா, ஐயா? எனக்கும் தெரியும். நம்ம பேர்லே பம்பாய்லே ரெண்டு வாரண்ட், ஹாமில்டன் வாராவதிலே கத்தி, கப்டா இல்லாமே ரைட் ஹாண்டிலேயே ஒரு பயில்வான் கழுத்தை முறிச்சுப் பொணமா வீசியிருக்கேன். இன்னுத்தே கண்டேன்? பொண்டாட்டியா, புள்ளெ குட்டியா, வீடா வாசலா? ஹூம், அதுவும் வேறேகாரணம். ஒரு பொண்ணு! ஓ. அது வேண்டாம். இப்பிடி அவதிப்படாரேமே. டெய்லி நியூஸிலே எங்களைப் பத்திக் கத்தை கத்தையா எழுதுறானுமே. படிக்கிறீங்களே, எங்கேயா கொண்டு போய்க் கொட்டுறீங்க?''

ஒரு பாறை மழையில் சிறுவது போல் படபடவென்று தாண்டவன் பொரிந்து தள்ளினான். ஸ்தம்பித்துப்போய் அந்தக் கூட்டத்தின் நடுவில் அந்தத் தாடிக்காரர் மட்டும் கருந்தாடிக்கு மத்தியில், பளீரெனப் பிரகாசிக்கும் வெண்ணிறப் பற்களைக் காட்டியபடி பரந்த புன்னகை செய்து கொண்டிருந்தார்.

''பரீட்சைக்குப் பணம் கட்டணும். அம்மாவுக்கு உடம்பு சரியில்லே. அவ அப்பளம் கட்டு வித்துக்கினுதான் பொழைப்பு நடத்துக்கினு இருந்தது.''

சுவாதீனத்தோடு பேசிச் சென்ற சக்திவேலின் குரல் மடங்கித் துவண்டது. ஊற்றுக் கண் பீறினாற்போல் மளமளவெனக் கண்ணீர் வழிந்தோட உணர்ச்சியின் தாக்குதலைச் சமாளிக்காமல் அவன் சிறு பிள்ளை போல் 'ஓ'வென வாய்விட்டு அழுதான். அந்த அழுகையில் வெறும் துக்கம் மட்டுமில்லை. ஆத்திரமும் நடு இழையாய் ஓடியது. கண்ணீரும் மனக் காரமும் ஒருங்கே சேர, அவன் பேசிக் கொண்டே செல்லலானான்.

''பத்து வருஷங்களுக்கு முந்தி ஒரு தடவை எங்கப்பாவை பார்த்ததாஞாபகமிருக்கு. அவர் சாகல்லே. எங்கேயோ போயிட்டார். கெட்ட சகவாசம்கூட எதுவும் கிடையாது. பொறுப்பில்லாத மனுஷர். ஊருக்கு ஒரு ஓட்டலா, எங்கேயும் நிக்காமே சர்வரா போயிக்கிட்டே இருப்பாரு. இன்ன காரணமோ எனக்குத் தெரியாது. அம்மா வாழ்க்கையிலே பாதி அழுதே முடிச்சிட்டா. என்னைத்தான் நம்பிக்கினு இருந்தா. மிஷினுக்குக்கூடத் தேய்மானம் இருக்கு. மனுஷனுக்கு ஓய்வு வேண்டாமா? அவளுடைய அப்பளத்தை எங்க நாலு பேரு வயிறும் என் படிப்பும் நம்பிக்கினு இருந்தன. அவளுக்கு டி. பி. வந்து விட்டது.


உங்கள் வீட்டில் வலியின் தொல்லை இல்லாமல் செய்ய

ஸாரிடான்

உபயோகியுங்கள்











தலைவலி, உடம்புவலி, பல்வலி, ஜுரம் போன்ற உணர்ச்சி, தேக அசௌக்கியம் முதலானவைகளால் உங்கள் குடும்பத்தினர் வருந்தினால் அவர்களுக்கு ஸாரிடான் கொடுங்கள். விரைவில் சிறிதும் அபாயமின்றி நிச்சயமாக நிவாரணமளிக்கும். அத்துடன் ஸாரிடான் தெம்பையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும்! பெரியவர்களுக்கு ஒரு ஸாரிடான் வில்லை பூர்த்தியான டோஸ்; குழந்தைகளுக்கு ¼ முதல் ½ வில்லை வரை போதுமானது.



ஒரே வில்லை போதும்

ஒரு வில்லை 13 நயா பைசா

‘ரோஷ்’ தயாரிப்பு

ஸோல் டிஸ்டிரிப்யூட்டர்கள் : வால்டாஸ் லிட்.

சார்...டி. பி....பரீட்சை நேரத்திலே நான் என்ன பண்ணுவேன்? அவ உடம்பிலே ஒரு சொட்டுச் சக்தி இருந்தாக்கூட எனக்காக உசிரைப் பிடிச்சிக்கினு பணத்தைப் போரட்டிக் கொடுத்திருப்பாள். அதுகூட அவள் உடம்பிலே இல்லே. அன்னிக்குப் பஸ் ஸ்டாண்டிலே ஜேபி துருத்திக்கினு கெடக்க அந்த மனுஷன் வந்து நின்னான். திருடற துன்னு ஒண்ணு இருக்குது என்ற நினைப்பே அப்போ எனக்குக் கிடையாது. தற்செயலாக ரொம்ப நேரம் வரைக்கும் அந்த மனுஷன் அங்கேயே நின்னான். பெரிய பர்ஸ். பஸ் வந்ததும் கூட்டம் கூடிடிச்சு. என்னவோ வெறியிலே நான் அவன் ஜேபியிலே கையை விட்டுப் பர்ஸை எடுத்தேன். வந்துடுச்சி. எடுத்துக்கிட்டு ஓடி வர்றப்போ பிடிச்சிக்கிட்டாங்க. இப்ப எல்லாம் நாசமாய்ப் போச்சு. படிப்பும் போச்சு. அம்மா பொணமும் போயிடுச்சு. இரண்டு தம்பிங்க அனாதையாகத் தெருவிலே திரியும்! ஹோக்!''

சக்திவேல் கேவியபடியே புறங் கையால் நெற்றியை இடித்துக் கொண்டு குலுங்கினான். ஒன்பது பேரும் அசையாதிருந்தார்கள்.

''அழாதே, தம்பி! நீ கொஞ்சம் அவசரப் பட்டுட்டே. பர்ஸை எடுக்காமல் இருந்திருக்கலாம். நடந்தது நடந்து போச்சு. இனிமே அதைப் பத்தி நினைச்சுப் பிரயோசனமில்லே. மூணு மாசம்தானே. ஒரு நொடியிலே கழிஞ்சுடும்.'' தாடிக்காரர் அந்தச் சங்கடமான மௌனத்தைக் கலைத்து, சக்திவேலுக்குச் சற்று ஆறுதலூட்டினார்.

அந்த அமைதி மெதுவாய்க் குலைந்தது.

''ஏந்தம்பி, தூக்கம் வர்றலியா?''

தலைக்குக் கையை முட்டுக் கொடுத்துக் கொண்டு, வெறிச்சென்று கிடந்த அந்த இரவை, வெளியுலகோடு சேர்த்துப் பார்த்துக் கொண்டிருந்த தாண்டவன், சக்திவேல் அப்படியும் இப்படியுமாகப் புரண்டு கொடுத்த சத்தத்தைக் கேட்டு ஒரு கேள்வி போட்டான்.

''ஆமாண்ணே! மனசு சரியாயில்லே!''

''என்னப்பா, பின்னே நீ! விடியற் காத்தாலே விடுதலை ஆகப் போறே. மனசு சரியாயில்லேன்றியே!''

சக்திவேல் சற்று நேரம் பேசாமல் இருந்தான். நாலைந்து 'செல்கள்' தள்ளி யாரோ தன் கரகரத்த குரலில் தெளிவில்லாத பாட்டைக் கனவில் முனகுவது போல் அடிவிட்டு அடிவிட்டு முனகினான். பட்டென்று யாரோ கொசுவை அடிக்கும் சத்தம் கேட்டது. ஊளர்ச்சிக்காரனைப்போல் உடனே கொசுவின் ரீங்காரம் கிளம்பியது. 'ஜர்ர்ர்...ஜர்ர்ர்ர்...' என்று சென்ட்ரியின் பூட்ஸ் அலைந்தது. ஓரிடத்தில் அது நின்றது.


''ஏய், நாயே! ஏன்டா, குரைக்கறே?'' என்று தூக்கச் சுகம் நிறைந்த குரலில் ஒன்று அதிகாரத் தொனியில் கேட்டது.

''விடுதலையாகி வெளியே போனால் என்ன பண்றது அண்ணே? என் வாழ்க்கையே பாழாய்ப் போச்சு. என் தம்பிங்க இரண்டு பேரை எங்கேன்னு போய்த் தேடுவேன்? வெளியே எனக்கு என்ன இருக்கு, நான் சந்தோஷப்பட?''

சக்திவேல் கசப்பும் ஏக்கமும் நிறைந்த முறையில் தன்னையே சபித்துக் கொள்ளும் தொனியில் பதிலிறுத்தான். தாண்டவன் ஒரு நிமிஷம் அவனுடைய பேச்சைக் கேட்டுச் சும்மாயிருந்தபின் தன்னுடைய கரடுமுரடான வலது கையைச் சக்திவேலின் தோள் மீது வைத்தான். அந்த ஸ்பரிசத்தில் இனங்காண முடியாத ஓர் ஆறுதல் இருந்தது. சக்திவேல் நெகிழ்ச்சியோடு அந்தக் கையின் மேல் தன் உள்ளங் கையைப் பதித்து, கழிந்து போன நீளமான மூன்று மாத காலங்களாய் அவனுக்குக் காட்டப்பட்ட ஆறுதலுக்கும், பரிவு உணர்ச்சிக்கும் நன்றி செலுத்தினான்.

''தம்பீ....!'' அந்த உன்னதமான விநாடிகளில் அங்கு கவிந்து கட்டியிருந்த மௌனத்தைத் தாண்டவனின் கரகரத்த குரல் கலைத்தது.

''என் காலமெல்லாம் இருட்டிலேயே கழிஞ்சு போச்சு. உலகத்திலே இருட்டைப் பத்தி எனக்கு ரொம்ப ஜாஸ்தி தெரியும்.



ஆனா நான் பொஸ்தகங்களோட வெளிச் சத்தை நெனைச்சு ரொம்ப ஏங்கியிருக்கேன். ஒண்ணு சொல்லுவேன். நீ வெளியே போய்ப் பொழைக்க நினைக்கிறதாக இருந்தா அதைக் காதிலே வாங்கிக்கோ. போய்ப் படிப்பா... கண்ணு! பொஸ்தகம் ரொம்ப மேன்மையான விஷயம்.''

தாண்டவன் திடீரென்று பேச்சை நிறுத்தினான். அவனுடைய சிந்தனை கத்திரித்துப் போன மாதிரி இருந்தது.

சக்திவேல் மௌனம் சாதித்தான். அதன் அர்த்தம் தாண்டவனுக்கு ஊகமாயிற்று.

''....பணத்தைப் பத்தித்தானே கவலைப் படறே தம்பீ! அதை மறந்துடு. நாயுடுகாரு கிட்ட காகிதம் பென்சில் வாங்கி ஒரு கடுதாசி எழுதி வைச்சிருக்கேன். இந்தா!''

படுக்கைக்கு அடியில் அவனுடைய கை சென்று எதையோ தேடும் சத்தம் கேட்டது. சற்றுக் கழித்து அவன் ஒரு மடிக்கப்பட்ட காகிதத்தை, சக்திவேலின் உள்ளங் கையில் வைத்து அழுத்தினான்.

''மெட்ராஸிலே எனக்கு ரொம்ப விசுவாசமான சிஷ்யன் ஒருத்தன் இருக்கான். அவன்கிட்டே என் துட்டு நடமாடுது. இந்தக் கடுதாசியைக் கொண்டு போய் அவங்கிட்டே குடு. மாசா மாசம் அவன் முப்பது ரூபாய் கொடுப்பான். முப்பது ரூபாய், போதுமா தம்பீ?'' என்று நிறுத்திப் பதிலுக்குக் காத்திராமல், ''போதாக்காட்டி எனக்குக் கடுதாசி போடு. நான் ஜெயில்லேயிருந்து திரும்பி வர்றதுக்கு எப்பிடியும் நாலு வருஷங்கள் ஆவும். காலேஜிலே போய்ச் சேர்ந்து படி. நான் ஏற்பாடு பண்றேன். படிக்கணும், தம்பீ. நீ படிக்கணும்!''

''அண்ணே, அண்ணே!'' என்று குரல் தழுதழுக்க இதயத்தினுள் உள்ள மென்மையிலிருந்து பொங்கிய மகிழ்ச்சியையும் நன்றிக்கு மேற்பட்ட ஒரு நல்லுணர்ச்சியையும் தாங்காமல் சக்திவேல் ஏதோ குழறினான். அவனுடைய கை தோளின் மீதிருந்த தாண்டவனின் கரத்தை அழுத்திப் பற்றிக் கொண்டு, கண்ணுக்குக் கொண்டு சென்று ஒற்றியது.

கருகரு வென்று ரோமம் வளர்ந்திருந்த தாண்டவனின் புறங்கை சிலிர்த்தது. சூடான கண்ணீர்த் துளிகள் அங்கே விழுந்தன.

''சசு, இதென்னய்யா, கொழந்தெப்புள்ள மாதிரி. கடுதாசு ஜாக்கிரதை. மாசா மாசம் ஓம் படிப்பைப் பத்தித் தபால் எழுது.''

அவன் தலையாட்டினான் என்பது, புறங்கை மேலும் கீழுமாய் இலேசாய் அசைந்ததிலிருந்து தெரிந்தது.

நாயுடுவைப் பார்த்துச் சிரித்தான் தாண்டவன். இன்று அவனுக்கு விடுதலை. நான்கு வருஷங்கள் ஓடி மறைந்து விட்டன. மறுபடியும் சிறைக் கதவுகள் அவனுக்காகத் திறந்து விடப்படும் நாள் இது.

ஜெயிலருக்கு அவனைக் கண்டதும் முகம் சற்றுக் கடுமையுற்றது. கண்ணாடியை மேலே தூக்கி விட்டுக் கொண்டு அவனை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு பேனாவை அவனிடம் நீட்டினார். தாண்டவன் பேனாவைக் கையில் வாங்கினான்.

''ஜர்ர்ர்ர்ர்......ஜர்ர்ர்ர்...'' என்று பூட்ஸ் சப்திக்க இரண்டு கான்ஸ்டபிள்கள் ஒரு கைதியைத் தள்ளியபடி உள்ளே நுழைந்தனர். தாண்டவன் கழுத்தைத் திருப்பினான்.

''அண்ணே!'' என்ற கேவல் கலந்த குரலில் கைதியின் வாயிலிருந்து ஒரு கேவல் பிறந்தது.

''அட, பாவி! நீயா?'' என்று கத்தினான் தாண்டவன். மறுபடியும் சக்திவேலை இந்த இடத்தில் சந்திக்க நேர்ந்ததில் அவனுக்கு வியப்புப் பெருகியது. சந்தேகமும், வெறுப்பும் கருகருவென்று கிளம்பின.

''ஏய், நீ தபாலிலே யெல்லாம் படிக்கிறேன் படிக்கிறேன்னு தானே எழுதினே! என் சிஷ்யன் கூட நீ படிக்கிறது நெஜந்தான்னு கடுதாசு போட்டானே! ஏண்டா, இப்படி ஆனே? நாயைக் குளிப்பாட்டி நடு வூட்டிலே வைக்கறது தப்புதான்னு காட்டிட்டியேடா!''

தாண்டவனின் குரலில் ஆத்திரத்தை விட, நம்பிக்கைகள் பொடிப் பொடியாய்ப் போனதை நேரில் பார்த்த விரக்திதான் அதிகம் தொனித்தது. அந்த பாவத்தால் தாக்கப்பட்டு, சவுக்கடி படுவதற்கும் மேலான வேதனையோடு அலறியபடியே சக்திவேல் பதிலளித்தான். ''சத்தியமா நான் படிச்சேன், அண்ணே! நீ இஷ்டப்பட்ட மாதிரி காலேஜிலேயே சேர்ந்து படிச்சேன் பாஸ்கூடப் பண்ணினேன். ஆனால் வேலை எதுவும் கிடைக்கலே! நாய் மாதிரி அலையாய் அலைஞ்சேன். எங்கெங்கியோ எழுதிப் போட்டேன். எல்லாம் காத்துலே போயிடுச்சு அண்ணே. நீ எனக்கு ஒந் தொழிலே ஒழுங்காக் கத்துக் குடுத்திருந்தாக் கூட பொழைச்சிக்கிணு இருப்பேன். ஏன்னு, ரெண்டு தம்பிங்களும் அரைப் பட்டினியும் கால் பட்டினியுமாக அவதிப்படறாங்க. படிச்சவங்க பொழைக்கல்லே அண்ணே! குமாஸ்தா வேலைக்கு நீ என்னைத் தயார் பண்ணினே. வெளியிலே அன்னாடம் சோத்துக்காக அடிபிடி சண்டை நடக்குது அண்ணே. என்னைக் கெடுத்துப்புட்டியே அண்ணே!''

ஜெயிலர் தன் பிரம்பை இரண்டு தடவை மேஜை மீது படீர் படீரென்று தட்டினார்.

''என்ன, மேன், இது என்ன உங்க பாட்டன் வீடுன்னு நெனைச்சியா, நான்சென்ஸ்!''

தாண்டவன் பேனாவைப் பிடித்தபடியே சிலையாய்ச் சிறிது நேரம் நின்று விட்டான். அவனுக்கு வேதனையாகி விட்டது.

''ஏய், கையெழுத்துப் போடய்யா!'' என்று ஜெயிலர் அதட்டிய பிறகுதான் கையெழுத்திடத் தொடங்கினான். தனக்குச் சேர வேண்டியதைப் பெற்று அவன் கிளம்பும் முன் சக்திவேலை ஒரு தடவை பார்த்தான்.

சக்திவேல் அந்தப் பார்வையால் ஆகர்ஷிக்கப்பட்டு இரண்டு கைகளையும் கூப்பி, ''என்னை மன்னிச்சுடுங்க, அண்ணே! நான் மனக் கொதிப்பிலே என்னவோ பேசி விட்டேன். நான் இந்த வாழ்க்கை முழுதும் உங்களுக்குக் கடமைப் பட்டிருக்கேன். என்னை மன்னிச்சுடுங்க. இது என் தலையெழுத்து!'' என்றான்.

தாண்டவன் துன்புற்ற பார்வையால் அவனிடம் விடைபெற்றான். அவனுடைய மண்டையில் ஒரு பெரிய கேள்வி ஓயாமல் சுழலத் தொடங்கியது. சக்திவேலின் தலையெழுத்துக்கு உடந்தையாயிருந்தது யார்? தானா அல்லது அவன் கனவொளியில் மகிமையுற்றிருந்த கல்வியா? யார், யார், அது யார்?



உற்ற துணை
ஒரு நாள், திடீரென்று ரங்கனின் எருதுக்கு நோய் வந்தது; செத்தது. அவனுக்கு அது பெரிய அதிர்ச்சியைத் தந்தது. அவன், மனைவியிடம் சொன்னான்:
"இனி நிலத்தை உழுவதற்கு என்ன செய்வேன்? இன்னொரு எருது வாங்க என்னிடம் பணம் இல்லையே!"
கவலை நெஞ்சைத் துளைத்தது. சித்தப்பாவிடம் யோசனை கேட்கச் சென்றான்.
"வட்டிக்கடையில் கடன் வாங்காதே! வட்டியோ ஏராளம். ஏனப்பா சில வருடங்களுக்கு முன்னால் நீ ஒரு ஆயுள் இன்சூரன்ஸ் பாலிசி எடுத்தாய் அல்லவா? அதிலே கடன் எளிதாகக் கிடைக்கும். எப்படி என்று சொல்கிறேன் கேள்...."
அவன் லைப் இன்சூரன்ஸ்க் கார்ப்பொரேஷனிடம் கடனுக்காக மனுப் போட்டான். பண அஞ்சல் தபால்காரர் கொண்டு வந்தார்.
பையிலே பணத்தோடு, பக்கத்துச் சந்தைக்குப் போனான். மனதிற்குப் பிடித்த மணியான காளையொன்று வாங்கினான்
சில நாட்கள் சென்ற பின்
அவனுடைய பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்தன. எருதினை வேறு உழவர்களுக்கு வாடகைக்கு விட்டான். பணம் கிடைத்தது. வளமான நிலைமைகளில் கடனை அடைத்தான். உண்மையில் உதவியது ஆயுள் இன்சூரன்சே!
ஆயுள் இன்சூரன்சு
உரிய நேரத்தில் உற்ற துணை

ASP|LIC|R|8

படித்துப் பாருங்கள்



திருநணச் சிலேடை வெண்பா

'திருநணா' என்னும் பவானி நகரின் சிறப்பைக் கூறும் சிறு பிரபந்தம் இது. சிலேடை வெண்பாக்களாக இயற்றப்பட்டுள்ளது. பவானியின் இயற்கை வளம், ஆறுகளின் கூடல் துறைச் சிறப்பு, வாழ்க்கை முறை, பண்பாடு, இவற்றைக் கூறி முன்னிரண்டடிகளில் சிலேடையும் அமையுமாறு பாடப்பட்ட இந்நூலின் வெண்பாக்கள் பழைய புலவர்களின் வாக்கை நினைவூட்டுகின்றன.

பழைய பிரபந்தங்களோடு ஒப்பிடத் தக்க சொல் நலமும், பொருள் நலமும் பொருந்திய இந்நூலைத் தமிழுலகம் ஏற்று மகிழும் என்பதில் ஐயமில்லை. ஆறுகளின் கூடுதுறையான பவானிக் கூடல் போலச் சொல்லும், பொருளும், சிலேடைச் சிறப்பும் ஒன்று கூடும் பிரபந்தம் இச்சிலேடை வெண்பா.

ஆசிரியர்: புலவர் குழந்தை, கிடைக்குமிடம்: இளங்கோ புத்தகசாலை, 6 முத்துரங்க முதலியார் வீதி ஈரோடு. விலை: ரூ. 1—50.

சிந்தாமணிச் செல்வம்

தமிழ் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகிய சீவக சிந்தாமணியைப்பற்றிய பதினன்கு கட்டுரைகள் இந்நூலில் அடங்கியுள்ளன.

தெ. பொ. மீ. மணிவிழா வெளியீடாக நூல் வெளியிடப் பெற்றிருக்கிறது.

ஐம்பெருங் காப்பியங்களில் நயமும், அழகும் வாய்ந்த சீவக சிந்தாமணியில் திருத்தக்க தேவரின் கவியுள்ளம் பரந்து தோன்றுவதை இக்கட்டுரைகளில் இதன் ஆசிரியர் விளக்கியுள்ளார். தேவரின் கற்பனைத் திறன், திருத்தக்க தேவரும் திருவள்ளுவரும், சிந்தாமணியில் மக்கள் வாழ்வியல் ஆகிய கட்டுரைகள் மிக நன்றாக இருக்கின்றன. 'தனிப் பெருந் தமிழ்க் காப்பியம்' என்ற கட்டுரையில் சிந்தாமணியின் சிறப்பு விளங்குகிறது. சீவக சிந்தாமணி, காப்பியத்துக்கு இந்நூல் வழிகாட்டியாக அமையத் தக்கது.

ஆசிரியர்: தா. ஏ. ஞானமூர்த்தி; விற்பனை உரிமை: மெர்க்குரி புத்தக நிலையம், கோயமுத்தூர் — 1. விலை: ரூ. 2—50;

'கற்பின் கனலி'

கம்பராமாயணத்தில் காப்பியத் தலைவி சீதையின் குணசித்திர நிலைகளை அழகாகவும், முறையாகவும் விளக்கும் திறனாய்வு நூல் இது. மிதிலை நகரத்து மாடத்தில், 'கல்லும் புல்லும் கண்டு உருகப் பெண் கனியாய்' நின்ற சீதையிலிருந்து தொடங்கி, 'யாதும் ஓர் பழிப்பிலள்' என்று இறுதியில் அக்கினிப் பிரவேசத்துக்குப் பின் இராமன் ஏற்கும் சீதைவரை படிப்படியாகப் பாத்திரத்தின் நிலைகளை ஆராயும் நூலான 'கற்பின் கனலி' கம்பனைப் பற்றி எழுந்த காப்பியக்கலை நூல்களில் சிறந்த ஒன்றாகும்.

அழகு மின்னலாகச் சீதையை இராமனுக்கும், நமக்கும் ஒருங்கே அறிமுகப்படுத்துகிற கம்பன், முடிவில் கற்புக்கனலாய் - வெறுங் கனல் கடாத வித்தைப் பெருங் கனலியாக நிலைநிறுத்தி முடிக்கிறான். பல்காற் பயின்று பழகிய ஆசிரியர் சீதையைக் கம்பனிலிருந்து அறிமுகப்படுத்துகிற இலக்கியப் பணியைச் சிறப்பாகச் செய்துள்ளார். கம்பனின் ஒவ்வொரு கதாபாத்திரத்துக்கும் ஆசிரியர் இப்படித் திறனாய்வு நூல்கள் எழுதினால் தமிழகம் பயன் பெறும்.

ஆசிரியர் :—எஸ். இராமகிருஷ்ணன் வெளியீடு, ஸ்டார் பிரசுரம். 66, பெரிய தெரு. திருவல்லிக்கேணி சென்னை-5. விலை ரூ. 3.

'திருமுறைக் காட்சி'

இலங்கையைச சேர்ந்த நாவலப்பிட்டியாவில் உள்ள ஆத்மஜோதி நிலையத்திலிருந்து வெளியாகும் 'ஆத்மஜோதி' இதழில் திரு நா. முத்தையா அவர்கள் எழுதிய திருமுறைப்பாடல் விளக்கக் கட்டுரைகள் இப்போது 'திருமுறைக் காட்சி' என்னும் பெயரில் முதற் பகுதியாகப் புத்தக உருப் பெற்று வந்துள்ளது. சைவத்



திருமுறைகளிலும், சமய தத்துவங்களிலும் முத்தையா அவர்களுக்குள்ள நல்ல புலமையை இந்தக் கட்டுரைகளிலிருந்து அறிய முடிகிறது. இருபத்துமூன்று கட்டுரைகளும் யாவரும் படிக்கத்தக்க உரை நடையில் கட்டுக்கோப்புடன் அமைந்துள்ளன.

ஆசிரியர் :—நா. முத்தையா. வெளியிடுவோர் ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டியா, இலங்கை. விலை குறிக்கப்படவில்லை.

குடிமக்கள் காப்பியம்

பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் சிலப்பதிகாரக் காப்பியத்தைப் 'புதிய நோக்குடன் ஆராய்ந்து இவ் வழகிய தலைப்பை அதற்குச் சூட்டியிருக்கிறார்கள். சாதாரணக் குடிமக்களில் ஒருவனாகிய கோவலனைக் காப்பியத் தலைவனாகக் கொண்ட இளங்கோவின் புதுமையைப் பேராசிரியர் விளக்குகிறார்.

நாடகக் காப்பியத்தின் பகுதிகளாகிய, முன்னிலைக் கூற்று, புறமொழிக் கூற்று வகைகளையும், வரிப் பாட்டுக்களையும், நாடகப் பாத்திரங்களையும், ஆராய்ந்து விளக்குகிறார். கோவலன் மனமாற்றம், சிலப்பதிகாரத்தில் கவுந்தி வருவானேன், ஆகிய தலைப்புகளில் பேராசிரியர் ஆராய்ந்து கூறும் கருத்துக்கள் சிலப்பதிகாரத்தின் மேல் அவருக்குள்ள ஈடுபாட்டையும், ஆழமான புலமையையும், காட்டுவனவாயுள்ளன. சிலப்பதிகாரக் காப்பிய அன்பர்கள் பெரிதும் விரும்பிப் படிக்க வேண்டிய திறனாய்வு நூல் குடிமக்கள் காப்பியம்.

கிடைக்குமிடம்: தொல்காப்பியர் நூலகம்: 202 ஜானிஜான் தெரு, சென்னை—14. விலை: ரூ. 2—75

கவிதைத் திரட்டு

மலேயாத் தமிழ்க் கவிஞர்கள் பன்னிருவரின் கவிதைகளைத் தொகுத்த கவிதை நூல் இது. இளமைத் துடிப்பு மிக்க சொல்லோட்டத்தையும், ஆர்வத்தையும் புலப்படுத்தும் இக் கவிதைகள் கடல் கடந்து வாழும் இளந் தமிழர் நெஞ்சங்களை எடுத்து இயம்பும் அடையாளங்களாகின்றன. ஒற்றுமையையும், தமிழார்வத்தையும் காட்டும் இந்த முயற்சியைப் போற்றி வளர்க்க வேண்டும்.

தொகுத்தோர்: மு. வே. இல்லை, ஏகம். கிடைக்குமிடம்: அசோகன் புத்தக நிலையம். 112, மெயின் ரோடு, சுங்கைசிப்புட்—மலேயா, விலை: 25—காசு.

இயற்கை இன்பம்

மழை, உழவு, கடல், நிலவு, மலர், என்பன போன்ற பல இயற்கைப் பொருள்களைப் பற்றிக் கவிஞர் பா. முத்து இயற்றிய கவிதைகளின் தொகுதி இது. பதினைந்து பொருள்களைப் பற்றி இந்தத் தொகுதியில் கவிஞர் பாடியிருக்கிறார். கவிஞர்களாகிய பாரதிதாசன், வாணிதாசன் இருவரும் இந்தக் கவிஞரின் முயற்சிக்கு வாழ்த்தும், சிறப்பும் வழங்கியிருக்கிறார்கள்.

'பொழிலிடைச் சிரிப்பாம் ! நல்ல
பொலிவுறும் கண்ணி யாகிக்
குழலிடைக் குலுங்கிப் பெண்கள்
குளிர்மனம் அடையச் செய்வாம்'

என்று மலரைப் பற்றி இந்தக் கவிஞரிடமிருந்து கவிதை மலர்கிறது: மணக்கிறது.

ஆசிரியர்: வித்துவான் பா. முத்து. வெளியீடு: வள்ளுவர் பண்ணை, பிராட்வே. சென்னை—1. விலை: ரூ. 1—25.

தமிழமுதம்

மதுரகவிஞர், வி. வே. முருகேச பாகவதர் வழங்குகிற இந்தத் தமிழ்க் கவிதையமுதத்தில் இயற்கையைப் பற்றிய கவிதைகளும், தமிழின் சிறப்பைப் பற்றிய கவிதைகளும், சமூகம் பற்றிய கவிதைகளும், வாழ்க்கை, தொழில் ஆகிய துறைகளைப் பற்றிய கவிதைகளும், நிறைந்துள்ளன. பல துறைகளைச் சேர்ந்த கவிதைகள் பன்மணிக்கோவை என்ற தலைப்பிலும், கடிதமாக எழுதப்பட்ட கவிதைகள் 'கடிதம்' என்ற தலைப்பிலும் தொகுக்கப்பட்டுள்ளன.

'உளங்கவர் கருணைக் கண்கள்
ஒளிர்முகம் தாய்மை அன்பாம்
அளந்துசொற் பொழியும் செவ்வாய்
அருவிபோல் சுரக்கும் கல்வி'

என்று திரு. வி. க. அவர்களைப் பற்றி முருகேச பாகவதர் பாடுகிறார். பெருமக்கள் பலருடைய பாராட்டும் கவிஞருக்குக் கிடைத்திருக்கிறது. கவிதைகள் யாவும் படித்து இன்புறத்தக்கவை.

ஆசிரியர் : முருகேச பாகவதர், வெளியீடு: மங்கள நிலையம், வில்லிவாக்கம், சென்னை. விலை: ரூ. 3.

நானூற்பது

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் கார் நாற்பது, களவழி நாற்பது, இனியவை நாற்பது, இன்னா நாற்பது ஆகிய நான்கிற்கும் தொகுதிப் பெயராக 'நானூற்பது' என்று குறிப்பிடுவார்கள். கார்நாற்பது, களவழி நாற்பதில் முறையே கார்கால வருணனைகளையும், போர்க்கள வருணனைகளையும் கண்டு மகிழலாம். இனியவை நாற்பது, இன்னா நாற்பது, இரண்டு அறநூல்களும்—இனியவை, இன்னாதவைகளை விதி, விலக்கு, முறையிற் கூறுவன. கார்நாற்பது காலம் பற்றியும், களவழி நாற்பது இடம் பற்றியும், மற்ற இரண்டும் பொருள் பற்றியும் எழுந்த பிரபந்தங்கள் என்பர்.

இப்போது, புதுக்கோட்டை மீனாட்சி பதிப்பகத்தார் புலவர் நடராசன் அவர்களைக் கொண்டு இந்நான்கு நூல்களுக்கும் பதவுரை, கருத்துரை, எழுதுவித்துச் சிறந்த முறையில் இணைத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

உரையாசிரியர்: புலவர் நடராசன், வெளியீடு: மீனாட்சி பதிப்பகம், கீழ இராச வீதி, புதுக்கோட்டை. விலை: ரூ. 1.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.


Arvind
QUALITY FABRICS
'SANFORIZED'
REGISTERED TRADE MARK
of CLUETT PEABODY & CO. INC., U.S.A.
மர்ஸிரைஸ்ட் சான்பொரைஸ்ட்
வெள்ளை பாப்ளின்
கோல்ட் டிரிங்
மர்ஸிரைஸ்ட் சான்பொரைஸ்ட்
கலர் பாப்ளின் ப்ளூபெர்ட்
மர்ஸிரைஸ்ட் கெஸ்
வேஷ்டிகள்
ராணி ஸ்பெஷல்
மர்ஸிரைஸ்ட்
வேஷ்டிகள்
ராஜா ஸ்பெஷல், ப்ளாட்டினம், காம்ராஜ்
புட்டாஸ்
அரவிந்த் மில்ஸ் லிட்.
ஆமதாபாத்-2
M.K-1-60
REGISTERED USER OF THE TRADE MARK 'SANFORIZED'

GISTERED No. M. 4392
gistered as a Newspaper in Ceylon